
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1 - 15 ஜூலை '88
4-16
விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளைப் பரிதவிக்கவிட்ட அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

அடுத்தடுத்து தாக்கிய வறட்சியால் போண்டியாகிப் போன தமிழக விவசாயிகளை மீண்டும் வறட்சியும் மின்வெட்டும் ஒருசேர தாக்கி குரல்வளையை நெறித்துக் கொண்டிருக்கிறது. நஞ்சை செழிக்கும் தஞ்சை மாவட்டம் தரிசாகக் கிடக்கிறது. அறிவிக்கப்படும் அற்ப சொற்ப நிவாரணத் தொகை கூட ஆளும் கட்சியின் சுயவிளம்பரத்துக்கும், திட்டத்தை அமுலாக்கும் அதிகார வர்க்கம் விழுங்கி ஏப்பம் விடுவதற்கும் போய்விடுகிறது. வறட்சிப் பகுதி என்று சட்டசபையில் அறிவிக்கப்படுமுன்னரே பல பகுதிகளில் அதிகாரிகள் கூட்டம் முக்கால்வாசி நிலவரியைக் கட்டாய வசூல் செய்து அரசிடம் 'நல்ல பெயர்' வாங்கிக் கொண்டுள்ளது.

75% வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டோம் என்று கூசாமல் புளுகிக் கொண்டு பணமழையில் மூழ்கி பிறந்த நாள் விழா நடத்தி குதூகலிக்கிறார் கருணாநிதி. அவரது அமைச்சர்கள் கூட்டம் ஊட்டியில் உல்லாசமாக படகு சவாரி நடத்தி கும்மாளமிடுகிறது. ஓட்டுக் கட்சிகளோ வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலைக் குறிவைத்து ஓட்டுக்கும் சீட்டுக்கும் நாயாய் அலைகின்றன.

இந்நிலையில், "மின்வெட்டை ரத்து செய்! போதிய அளவு மின்சாரத்தை விவசாயிகளுக்குத் தடையின்றி வழங்கு! ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடு! கிணறுகளை வெட்டவும் புதிய ஆழ்குழாய் கிணறு தோண்டவும் புதிய கடன் கொடு! பழைய கடன்களை ரத்து செய்! நிலவரியை ரத்து செய்! வேலை இழந்த கூலி, ஏழை விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடு!" முதலான கோரிக்கைகளை முன்வைத்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் 8.6.89 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணி எழுச்சிமிகு ஆர்பாட்டத்தை நடத்தியது.

★ இலால்குடி வட்டம் புள்ளம்பாடியில், செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க, விண்ணதிர முழக்கங்களுடன் காமராசர் சிலை அருகிலிருந்து புறப்பட்ட வி.வி.மு.வின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு தோழர் சிவஜோதி தலைமை தாங்கினார். ஊர்வலத்தில் தோழர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அதைவிட அதிகமான போலீசார் சூழ்ந்து கொண்டு பொதுமக்களைப் பீதியூட்டினர். ஒன்றிய அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் முன்னேறவிடாமல் 100 அடிக்கு முன்னரே போலீசார் தடுத்தனர். பின்னர் இருவர் மட்டுமே சென்று அதிகாரிகளிடம் பேச அனுமதித்தனர். சரியாக ஓராண்டுக்கு முன் இதே நாளில் பாசன நீர் கேட்டு போராடிய புள்ளம்பாடி விவசாயிகள் மீது துப்பாக்கிசூடு நடத்தி ஒருவரைக் கொன்றனர். அதே நாளில் ஆர்ப்பாட்டம் நடத்துவதை அறிந்து பீதியடைந்த போலீசார் அனுமதி கொடுப்பதில் இழுத்தடித்து கடைசி நேரத்தில் கொடுத்தனர். 150க்கும் மேற்பட்ட ஆயுத போலீசாரும், வட்டார வளர்ச்சி அதிகாரி, தாசில்தார், ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகள் பட்டாளமும், ஆர்ப்பாட்டத்தன்று குழுமிவிட்டனர். அசம்பாவிதம் ஏதுமின்றி ஆர்ப்பாட்டம் நடந்த 'மகிழ்ச்சி'யில் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்வதாக அதிகாரிகள் வாக்களித்தனர். அரசு எந்திரத்தின் அச்சுறுத்தலையும் பீதியூட்டலையும் துச்சமாக மதித்து எழுச்சியுடன்



நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தை பகுதிவாழ் மக்கள் வரவேற்று ஆதரித்தனர்.

★ திருவண்ணாமலை வட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணி, ஜூன் 8ந் தேதியன்று காலை 20 கி.மீ. சுற்றளவுக்கு 8 கிராமங்களில் வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்ய வக்கற்ற அரசை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்துவிட்டு, இறுதியில் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. வறட்சி, மின்வெட்டைப் போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கக் கோரியும், மங்கலம் கிராமத்தில் தீர்க்கப்படாமல் தொடரும் குடிநீர் பிரச்னைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஆர்ப்பாட்டத்தில் முழக்கமிட்டு, அதிகார வர்க்கத்திடமும் வலியுறுத்தப்பட்டது.

★ கல்லை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி சங்கராபுரத்தில் 8.6.89 அன்று காலை முக்கிய வீதிகளின் வழியே வறட்சி, மின்வெட்டுக்கு எதிராக ஊர்வலத்தை நடத்தியது. வறட்சியைப் போக்க வக்கற்று சுயவிளம்பர போதையில் திளைக்கும் கழக ஆட்சியை அம்பலப்படுத்தி முழக்கமிட்டபடியே சென்ற ஊர்வலத்தின் இறுதியில், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முன் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது இருமருங்கிலும் திரண்ட பொதுமக்களிடம் பிரசுரம் விநியோக்கப்பட்டது. விவசாயிகளின் நலனுக்காகப் போராடும் ஒரே அமைப்பு வி.வி.மு.தான் என்ற நம்பிக்கையை இந்த ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் மக்களிடம் ஆழமாக விதைத்துள்ளது.

★ வறட்சி மின்வெட்டை எதிர்த்து உத்தமபாளையம் வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி ஜூன் 8ந் தேதியன்று காலை, எளிமையாகவும் அதே சமயம் எழுச்சியுடனும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தோழர் மகாலிங்கம் தலைமையில், உத்தமபாளையம் பேருந்து நிலையத்திலிருந்து வீதியெங்கும் விண்ணதிர முழக்கங்களுடன் தொடர்ந்த ஊர்வலத்தின் முடிவில், தாலுகா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்று. ஆர்ப்பாட்டத்தை விளக்கி மக்களிடம் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. தாலுகா அலுவலகம் முன் சுமார் அரை மணிநேரத்திற்கும் மேலாக ஆர்ப்பாட்டம் நடந்த போதிலும் ஏனென்று கேட்க தாசில்தார் வெளியே வரவில்லை.

ஆர்ப்பாட்டம் முடிந்தபின் தலைமை தாங்கிய தோழர் உள்ளே சென்று அவரிடம் பிரசுரத்தைக் கொடுத்ததும், 'உட்காருங்கள்' என்று வரவேற்றார். "நான் உட்கார்ந்து உங்களிடம் பேச விரும்பவில்லை. உங்கள் கருத்தை நீங்கள் மக்கள் முன் பேசலாம் அல்லவா" என்று நமது தோழர் கூற, "நீங்கள் முன்னமே என்னிடம் மனு கொடுத்திருந்தால் நான் வந்து பேசியிருப்பேன். எல்லா கட்சிகளும் இப்படித்தான் செய்கின்றன" என்று தாசில்தார் மழுப்பினார். பிரசுரத்தைப் பார்த்துவிட்டு, "இதில் நான் செய்வதற்கான பணி ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு, "வேண்டுமானால் இப்போது கூட வந்து பேசுகிறேன்" என்றார். "ஆர்ப்பாட்டம் முடிந்து எல்லோரும் கலைந்துவிட்டார்கள்" என்று பதிலுரைத்துவிட்டு நமது தோழர் திரும்பிவிட்டார்.

★ உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி ஜூன் 8ந் தேதியன்று செல்லம்பட்டியில் வறட்சி, மின்வெட்டை எதிர்த்து எழுச்சிமிகு ஊர்வலம் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இந்நிகழ்ச்சிக்கு முன் கிராமம் கிராமமாக பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்து, வீடு வீடாகச் சென்று நிதி திரட்டப்பட்டது. தோழர் கே.பி.ராமசாமி தலைமையில் தொடங்கிய ஊர்வலம் செல்லம்பட்டியின் முக்கிய வீதிகளின் வழியே விண்ணில் எதிரொலிக்கும் முழக்கங்களுடன் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு கோரிக்கைகளை வலியுறுத்தி உணர்வு பூர்வமாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தோழர் ராமசாமியும், ம.க.இ.க. இணை செயலர் தோழர் கதிரவனும் அரசின் ஊதாரித்தனத்தை அம்பலப்படுத்தியும், விவசாயிகளின் மீது பஸ் கட்டண உயர்வு முதலான புதிய பொருளாதாரத் தாக்குதல் ஏவப்பட உள்ளதை விளக்கியும் உரையாற்றினார்.

செல்லம்பட்டியின் முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது, பகுதிவாழ் மக்கள் இருமருங்கிலும் கூடி ஆர்வத்துடன் பார்த்தனர். அக்கூட்டத்திலிருந்த லோகராஜன் என்பவரிடம் ஒரு போலீசுகாரன் வந்து, ஊர்வலத்தில் முழக்கமிட்டுச் செல்லும் தோழர்களின் பெயர்களைக் கூறும்படி கேட்டான். அவர் எனக்குத் தெரியாது என்று கூறவே, எரிச்சலடைந்த அந்த போலீசுகாரன் அவரை மிரட்டியதோடு, அவரது தாயைப் பற்றியும் ஆபாசமாகப் பேசினான். உடனே ஊர்மக்கள் கொதிப்படைந்து திரண்டனர். போலீசாரை சகட்டுமேனிக்கு ஏசினர். ஊர் பெரியவர் அய்யாவு என்பவர், "ஊர் மக்களிடம் வம்பு பண்ணாதே, உன் காக்கிச் சட்டைக்கு நாங்கள் பயந்தவர்கள் அல்ல. எங்களிடம் வாலாட்டாதே" என்று ஊர்மக்களுடன் சேர்ந்து எச்சரித்தார். மக்களுக்கும் போலீசுக்கும் மோதல் ஏற்படும் நிலையில் "கியூ" பிரிவு ரகசிய போலீசார் ஓடிவந்து அந்த போலீசுக்காரனைத் திட்டுவது போல் நாடகமாடி நிலைமையைச் சமாளித்து அவனை இழுத்துச் சென்றனர்.

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

16

1 - 15 ஜூலை '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்



எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


# இந்திய இராணுவம் வெளியேற வேண்டும், இல்லையானால் இந்துமா கடலில் வீசிஎறியப்படும்!

**எமதருமை தேசத்து சகோதரர்களே,**

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று நாம் கோருகிறோம். இல்லையானால் துரத்தியடிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். நமது சொந்த நாட்டு இராணுவத்துக்கு இப்படி நேர வேண்டும் என்று கோருவதும் விரும்புவதும் எவ்வளவு துரதிருஷ்டமானது! இருந்த போதும் நமக்கு வேறு வழியில்லை. அவ்வாறே முடிவு செய்துள்ளோம். ஏனெனில் அவர்கள் இன்னொரு தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டுத் தரகு அதிகார முதலாளிகளுக்குச் சந்தை பிடித்துக் கொடுப்பதற்காக, இந்த நாட்ட பாசிச ஆளும் கும்பலின் விரிவாக்க - பிராந்திய ஆதிக்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அநியாயமான போரிலே ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள்.

இந்திய இராணுவத்தினர் பிறப்பால் நமது நாட்டுச் சகோதரர்கள் தான்! இருந்த போதும் அவர்களுக்குப் பெருமளவு உயிர் சேதமும் இழப்புகளும் நேர்ந்து, தோற்றுத் துரத்தியடிக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இதுவும் எவ்வளவு வேதனைக்குரியது. அவ்வாறு எண்ணுவதைத் தவிர நமக்கு வேறுவழியில்லை. ஏனெனில் அவர்கள் இங்கிருந்து இராட்டைகளை எடுத்துக் கொண்டுபோய் 'காந்திய' வழியிலே பிரார்த்தனைகள் செய்துகொண்டு நூல் நூற்றுக்கொண்டிருக்கவில்லை. இயந்திரத் துப்பாக்கிகளையும், பீரங்கி-கவச வண்டிகளையும் எடுத்துக் கொண்டுபோய் இன்னொரு தேசத்து தமிழ் மக்களைப் படுகொலை செய்து கொண்டிருக்கிறார்கள், சகோதரர்களே! அவர்கள் சகலவிதமான மனித உரிமைகளையும் தமது கனத்த ''பூட்சு'' கால்களால் ஏறி மிதித்து நசுக்குகிறார்கள்; மனிதப் பண்பாடுகளுக்கு அப்பாற்பட்டு மிருகத்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்பதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளன. அவர்கள் இன்னொரு தேசத்து இளைஞர்களைப் பிடித்துப்போய் பலாத்காரமான முறையில் ஒரின உடலுறவு கொள்ளுகிறார்கள். சித்தரவதைகள் செய்து படுகொலைகள் புரிகிறார்கள். பயபீதியை உருவாக்குவதற்காகப் பிணங்களை வீதிகளிலே விசிறியடிக்கிறார்கள். அவர்கள் இன்னொரு தேசத்து தாய்மார்களையும் சகோதரிகளையும் இழுத்துப்போய் கற்பழித்துக் கொல்லுகிறார்கள்.

இவையெல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் எவ்வளவு பெரிய அவமானம்! இன்று இவற்றைச் சகித்துக் கொள்ளுவோம் அல்லது கண்டுகொள்ளாது இருந்துவிடுவோமானால், நாளை நமக்கும் நமது சகோதர சகோதரிகளுக்கும் இவை நேரலாம். இப்போதே பஞ்சாப், காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய மக்களுக்கு எதிராக இத்தகைய அக்கிரமங்கள் - அட்டூழியங்களில் இந்திய இராணுவமும் போலீசும் ஈடுபட்டிருக்கின்றன!

**எமதருமை தேசத்து சகோதரர்களே,**

பாரிய முறையிலே சிந்தித்துப் பாருங்கள்! இலங்கை - ஈழப்பிரச்சினை, அதிலே இந்தியத் தலையீடு ஆகியவற்றின் நியாய, அநியாயங்களை எண்ணிப் பாருங்கள். 1983 இனக் கலவரத்தைத் தொடர்ந்து

ஈழப்போராளி அமைப்புகளின் முதுகிலேறிக் கொண்டு, தனது இராணுவ பலத்தை வைத்து இலங்கை அரசை மிரட்டி அரசியல் பொருளாதார, இராணுவ ரீதியில் இந்தியாவுக்குச் சாதகமான, சமனற்ற ஒப்பந்தத்தை இலங்கை மீது திணித்தது. இவற்றுக்குப் பிரதிபலனாக ஈழ சுயநிர்ணய உரிமையைப் பலியிடுவது: ஈழப்போராளிகளை நிராயுதபாணிகளாக்கி, இந்தியாவிலுள்ள இராணுவப் பயிற்சி முகாம்களில் இருந்து விரட்டுவது; ஈழத்தில் தனது அடிவருவடிகளின் பொம்மை அரசை நிறுவுவது: இதற்காக இந்திய இராணுவத்தைப் பயன்படுத்துவதோடு, சிங்கள இராணுவத்துக்கும் பயிற்சியளிப்பது என்று தானே முடிவு செய்து இலங்கை அரசுடன் ஒப்பந்தம் போட்டது பாசிச ராஜீவ் கும்பல். இந்த ஈழத்துரோக ஒப்பந்தத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும்படி 'வீட்டுக்காவலி'ல் வைத்து ஈழப்போராளிகளை மிரட்டியது. விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்துவிட்டனர்; 'ஈரோஸ்' நிபந்தனைகளுடனும், மற்றவை அப்படியேயும் ஏற்றுக் கொண்டன. 100 கோடி ரூபாய் 'நிவாரணம்' அதிகாரத்தில் பெரும்பங்கு ஆகிய பேரங்களைப் புலிகளுடன் நடத்தியது. பேரங்கள் தோற்றுப்போய் ஈழ ஆக்கிரமிப்புப் போரைத் துவக்கி நடத்துகிறது.

ஈழத்தில் இந்திய இராணுவத்தை வைத்து மோசடியான தேர்தல்களை நடத்தித் தனது அடிவருடிகளின் பொம்மை அரசை நிறுவி, ஈழத்தமிழர்களை வைத்தே ஈழத்தமிழர்களைக் கொல்லும் சதியை அமுலாக்கி வருகிறது. அதேசமயம் புலிகளுடனான முடிவற்ற போரில் பேரிழப்புகளை சந்திக்கிறது. ஈழவிடுதலைப் போர், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடி முற்றி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்ற சிங்கள தீவிரவாத அமைப்புக்கெதிராக ஏறக்குறைய உள்நாட்டுப் போரில் சிக்கிக் கொண்டது இலங்கை அரசு. இலங்கையின் சிங்கள, தமிழ் (முஸ்லீம்) மூவின மக்கள் பிளவுபட்டு இனக்கலவரங்களில் ஈடுபட்டுவந்தபோதும் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற வேண்டும் என்று இப்போது ஏகமனதாகக் கொதித்துக் கோருகின்றனர்.

''வடக்கு - கிழக்கு மாகாண அரசுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது; ஈழத்தமிழர்களுக்குப் போதுமான பாதுகாப்பளிக்கும் தனிப்படையை அமைப்பது; இந்தியாவின் நலன்களை உறுதி செய்வது - ஆகியன நிறைவேறாதவரை இந்திய இராணுவம் வெளியேறாது'' என்று பாசிச ராஜீவ் கும்பல் அடம்பிடிக்கிறது. முன்பு இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கப் படையெடுத்ததாகக் கூறியவர்கள் இப்போது தனி ஈழத்தை ஆதரிக்கிறார்களாம்! ''புலிகளை ஒழித்துவிட்டோம்; இராணுவப் பணிகள் ஏறக்குறைய முடிந்துவிட்டன'' என்று நேற்றுவரை சொன்னவர்கள், இன்று இந்திய இராணுவத்தின் கடமைகள் முடியவில்லை என்கிறார்கள். ஈழத்துரோகிகளையும், சிங்கள அடிவருடிகளையும் வைத்து இலங்கை ஆக்கிரமிப்புக்கு நியாயம் கற்பிக்கின்றனர். தனது கூலிப்பிரச்சாரகர்களையும் வைத்து இந்தியாவிலே கூப்பாடு போடுகின்றனர்.

**எமதருமை தேசத்து சகோதரர்களே,**

இன்று இன்னொரு தேசத்தை ஆக்கிரமிப்பதை ஆதரிப்பவர்கள், நாளை இந்தியாவைவிடப் பலம் வாய்ந்த வல்லரசு இந்தியாவை ஆக்கிரமிப்பதையும் ஆதரிப்பார்கள். இன்னொரு தேசத்தை ஆக்கிரமித்து அடிமைப்படுத்துவதை சகித்துக் கொள்பவர்கள் தாமும் சுதந்திரமாக வாழ முடியாது! பழைய, புதிய ஜார்களுக்கும், பிரிட்டிஷ் காலனியப் பேரரசுக்கும், அமெரிக்க வல்லரசுக்கும் நேர்ந்த கதியை நினைத்துப் பார்க்க மறுக்கிறது, பாசிச ராஜீவ் கும்பல். ஆதிக்கவெறியினால் அழிவுப்பாதையில் அமுந்தி நிற்கிறது. சொந்த நாட்டு மக்களையே அடக்கி ஒடுக்கி, சூறையாடும் ஆளும் கும்பல், அண்டை நாடுகளிடம் மட்டும் வேறு வித்தியாசமாக நடந்து கொள்ளாது. இப்படிப்பட்ட அநீதியான ஆக்கிரமிப்பையும் போரையும் சகித்துக் கொள்ளுவதுகூட சரியல்ல. ஆகவே, இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது இந்துமாகடலில் தூக்கி எறியப்பட வேண்டும் என்று எண்ணுவதுதான் உண்மையான தேசப்பற்று! அதற்காக சமரசமின்றிப் போராடுவோம்.

படிப்பகம்

www.padippakam.com




# பொதுத்தேர்தல் தயாரிப்புகள்-உத்திகள் ஓட்டுக்கட்சிகளின் ஓட்டாண்டித்தனம்

இந்த ஆண்டும் ஆகஸ்டு 15 'சுதந்திர' தினவிழா வழக்கமான சடங்கு-சம்பிரதாயங்களுடன் வந்துபோகும் என்றாலும் இந்தியாவின் அதிகாரபூர்வ, அரசியல் - சட்டபூர்வ சரித்திரத்தில் அன்று ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது.

அன்றுதான் நாட்டிலுள்ள அனைத்து ஓட்டுக் கட்சிகளும் விதிவிலக்கின்றி சிகப்புச் சாயம் பூசிக் கொள்ளுகின்றன. ஜாதி, மத, இன, வெறிபிடித்த கடைகோடி வலதுசாரிக் கட்சிகளான சிவசேனா, பாரதீய ஜனதா, முஸ்லீம் லீக், முஸ்லீம் மஜ்லிஸ், கேரள காங்கிரசு, தேசிய ஜனநாயகக் கட்சி, திரிபுரா உப்ஜாதி ஜுபசமிதி போன்றவையுந்தான்!

அதாவது நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் சோசலிசம், ஜனநாயகம், மதச் சார்பின்மை ஆகியவற்றை ஏற்பதாக ஆகஸ்டு 14ம் தேதிக்குள் உறுதிமொழிப் பிரகடனம் செய்துவிட வேண்டும் என்று தேர்தல் கமிசன் இறுதிக் கெடு வைத்துள்ளது. அரசியல் சட்டத்துக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதியளித்தால் மட்டும் போதாது. நாட்டின் சுயாதிபத்தியம், ஐக்கியம், ஒருமைப்பாட்டை உயர்த்திப் பிடிப்பதாகப் பிரகடனம் செய்தால் மட்டும் போதாது. இவற்றோடு சோசலிசம், ஜனநாயகம் மற்றும் மதச் சார்பின்மை ஆகிய கொள்கைகளைப் பற்றி ஒழுகுவதாகத் தனது கொள்கை மற்றும் அமைப்பு விதிமுறைகளில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது சட்டப்படி, சோசலிசம், ஜனநாயகம், மதச்சார்பின்மை ஆகியவற்றை ஏற்கும் அரசியல் கட்சிகள் மட்டுமே இனி அங்கீகாரம் பெற்று, தேர்தலில் போட்டியிடவோ, ஆட்சி நடத்தவோ முடியும்.

பிறகென்ன! பிற்போக்குக் கட்சிகள் அனைத்தும் ஒழிந்து போகின்றன. இனி இருப்பவை எல்லாம் முற்போக்குக் கட்சிகள் தாம்! ஆக, சோசலிசம் தேசிய மயமாகிறது. தேசிய சோசலிசம் தான் இட்லரின் நாஜிக் கட்சியுடைய இலட்சியம்! எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! அவசர நிலை பாசிச ஆட்சியின் போதுதான் இந்த ''சோசலிசம்'' அரசியல் நிர்ணய சட்டத்தில் ஏற்றப்பட்டது. அப்புறம் வந்த ''ஜனதா'' ஆட்சி அவக்கேடான 42வது அரசியல் சட்டத் திருத்தத்தைக் கிழித்துப் போட்டது; ஆனால் இந்த சோசலிசத்தை மட்டும் மாற்றத் துணியவில்லை. சோசலிச சொர்க்கத்தைக் காட்டித்தான் இனிமேலும் ஓட்டுப் பொறுக்க முடியும் என்பதைப் பொதுவிதியாக்கியது நேரு பரம்பரையின் சாதனைதான்! இப்போது பெரும்பான்மையான ஓட்டுக் கட்சிகளும் முற்போக்கு, சோசலிசம் பேசித் திரிகின்றன. எனவே இது அவசியமில்லைதான். என்றபோதும் பத்தினித்தனத்தைப் பறைசாற்றும் ஊரறிந்த விபச்சாரியைப் போல பாசிச ராஜீவ் கும்பல் உத்திரவு போட்டுள்ளது: ''இனி எல்லா அரசியல் கட்சிகளும் சிகப்புச் சாயம் பூசிக் கொள்ளவேண்டும்!''

### அரசியல் கட்சிகளின் தேர்தல் உத்திகள்

ஜனதா தளம் கட்சியின் 'பெரிசு' தேவிலால் - முதிர்ந்த அரசியல் கட்டை; கொஞ்சமும் கூச்சமின்றி ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறது. ''தேர்தல் கொள்கை அறிக்கைகளைப் பற்றி யாருக்கென்ன அக்கறை? அவற்றை யார் தான் படிக்கிறார்கள்? இதுவரை 12 தேர்தல்களுக்கான கொள்கை அறிக்கைகளை வகுக்கும் பணிகளில் நான் பங்கேற்றிருக்கிறேன். முதல் பக்கத்தைப் பிய்த்து விட்டுப் பார்த்தால் அவை எல்லாம் ஓரே மாதிரியாகத்தான் தெரியும்!'' ஏறக்குறைய எல்லா ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் கொள்கை அறிக்கைகளும் அப்படித்தான்!

ஆகவே, ''வரும் தேர்தல் உண்மையான பிரச்சினைகளின் அடிப்படையில் இருக்காது. உருவாக்கப்படும் பிரமைகள், இட்டுக் கட்டப்படும் கட்டுக் கதைகள், ஊதிப் பெருக்கபட்ட தலைவர்கள் பற்றிய மகிமைகள் அடிப்படையில்தான் இருக்கும்'' என்று பத்திரிகைகள் எடை போடுகின்றன.

ஆகவே, ஓட்டுக் கட்சிகளைப் பொருத்தவரை கொள்கை, கோட்பாடுகளை எப்போதோ மூட்டைகட்டி வைத்துவிட்டன. நான்கு உத்திகளை மையமாகக் கொண்ட தயாரிப்புகளோடு திட்டமிட்டுத் தேர்தல் களத்திலே குதிப்பதென்று முடிவு செய்துவிட்டன. அவை:

★ வாக்காளர்களை ஈர்ப்பதற்கான மிகவும் முக்கியமான சாதனம் இலவசத் திட்டங்கள், கவர்ச்சி முழக்கங்கள். எப்படியும் எதிரணியை விஞ்சிவிடுவதாக இருக்க வேண்டும்; நடைமுறைச் சாத்தியப்பாடு குறித்துக் கவலைப்படத் தேவையில்லை.

★ எதிரணியினரது லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்துவது மட்டுமல்ல; அவர்களுடைய அந்தரங்க இரகசிய உலகத் தொடர்பு உட்பட அனைத்தையும் சந்திக்கு இழுத்து சிறுமைப்படுத்துவது. அதேசமயம் நேர்மை, ஒழுக்கம் பரிசுத்தவானாகத் தனது தலைமை மீது பிரமையூட்டுவது.

★ அரசியல் சக்திகளுக்கிடையிலான கொள்கை - திட்ட அடிப்படையிலான நேர்மையான, பகிரங்கமான கூட்டு இனி மேலும் பயன்படாது. ஜாதி, மத, இன, ரீதியில் வாக்காளர்களை வளைத்துப் போடுவதற்கான சந்தர்ப்பவாத, கள்ளக் கூட்டுக்களை அமைத்துக் கொள்வது அவசியம்.

★ இறுதியாக, அரசியல் பிரச்சாரத்தை விட தனிநபர், கட்சி விளம்பரம் என்கிற பாணியில் அதிஉயர் தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுவது உட்பட பல தேர்தல் தில்லுமுல்லு அராஜகம் செய்வதற்கு அவசியமான கிரிமினல் கும்பல்களைத் திரட்டுவது.

— இவைதான் தமக்குத் தேர்தல் வெற்றியை ஈட்டித்தரும் என்று எல்லா ஓட்டுக் கட்சிகளுமே நம்புகின்றன. ஆனால் இவற்றை மூடிமறைத்துக் கொண்டு ஏதோ தமது கொள்கை - லட்சியத்தின் உறுதிப்பாட்டைக் குலைக்கும் அந்நிய சதிகாரர்கள், மதவாத - பிளவுவாத சக்திகளுக்கு எதிராக தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம், மதச்சார்பின்மை ஆகியவற்றுக்காக போராடும் கட்சியாக காங்கிரசு - பாசிச ராஜீவ் கும்பல் கூச்சல் போடுகிறது. லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளால் சொந்த நாட்டையே சூறையாடும் ஆளும் கட்சி — காங்கிரசு தலைமையே

படிப்பகம்

www.padippakam.com

அந்நிய - விதேசி தன்மையுடையது. அதற்கு எதிராக சுதேசிப் போராட்டம் நடத்துவதாகக் கூப்பாடு போடுகிறது ஜனதா தேசிய முன்னணி மற்றும் பாரதீய ஜனதா அடங்கிய எதிரணி. இரண்டுக்குமிடையே புழுவைப் போல நெளிகிறது போலிக் கம்யூனிஸ்டுகளின் இடதுசாரி - ஜனநாயக அணி.

### இலவசத் திட்டங்கள்! கவர்ச்சி முழக்கங்கள்!!

ஒருவரை ஒருவர் விஞ்சிவிடும் அளவு போட்டி போட்டுக் கொண்டு இலவசத் திட்டங்களை அறிவிக்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் செய்தும் காட்டுகிறார்கள். மத்தியிலும் பெரும்பான்மை மாநிலங்களிலும் ஆட்சியிலுள்ள பாசிச ராஜீவ் கும்பல் இந்த வகையிலே முந்திக் கொண்டு ஓடுகிறது. நான்கு மாநிலங்களில் ஆட்சியிலுள்ள தேசிய முன்னணியும், இரண்டு மாநிலங்களில் ஆட்சியிலுள்ள அதன் ''தோழமை''க் கூட்டணியும் சளைக்காமல் பின்தொடர்ந்து ஓடுகின்றன.

18 வயதினருக்கும் வாக்குரிமை, இந்திரா வீட்டு வசதி - ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டங்கள், பஞ்சாயத்து சீர்திருத்தம் ஆகியன ஓராண்டுக்கு முன்பே திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்டன. ''வாக்குரிமை, பஞ்சாயத்துச் சட்டங்கள் வந்துவிட்டன. 5 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுவிட்டன. 2,625 கோடி ரூபாய் வேலை வாய்ப்புக்காக ஒதுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மூன்று மாதங்களுக்குள் அமுலாகிவிடும். 90 சதவிகித கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டாகிவிட்டது. 50 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுவோர் தொகையைக் குறைத்தாகிவிட்டது'' - என்று ஓயாமல் பிரச்சாரம் செய்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

இவற்றால் எல்லாம் தேர்தல் பிரச்சாரத்தில் காங்கிரசு முன்னணியில் நிற்பதாகப் பத்திரிகைகள் கணித்தன. அவ்வளவுதான்; மேலும் ஊக்கமடைந்த காங்கிரசு மேலும் பல புதிய இலவச, கவர்ச்சித் திட்டங்களை அறிவிக்கத் துவங்கி விட்டது. ''மத்தியிலும், மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பதவிகளுக்கு வேறு எந்தப் பிரிவினரையும் நியமிக்கக் கூடாது; அப்படி ஒதுக்கப்பட்டு பூர்த்தியாகாமல் இருக்கும் 30,000 பதவிகளுக்கு ஆகஸ்டு இறுதிக்குள் அவர்களை நியமிக்க வேண்டும். இவர்களுக்கான நிலப்பங்கீடு துரிதப்படுத்தப்படும்.''

''பஞ்சாயத்துச் சீர்திருத்தங்களைப் போலவே நகரவைகள் சீர்திருத்தப்படும்; கிராமப்புற வேலைவாய்ப்புகளைப் போலவே நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள் தீட்டப்படும். ஒவ்வொரு குடிசைக்கும் மின் இணைப்புகள் தரப்படும்'' - என்று நாளும் ஒரு அறிவிப்பு அரசிடமிருந்து வருகிறது. ''இவையெல்லாம் தேர்தல் மோசடிகள்'' என்று 60 சதவிகிதத்துக்கு மேலான மக்கள் நம்புவதாக ஒரு கருத்துக் கணிப்பு கூறுகிறது. என்றாலும் பாசிச ராஜீவ் கும்பல் அதை ஏற்பதாக இல்லை.

ஜனதா தளமும் அதன் தலைமையிலான தேசிய முன்னனியும் பின் தங்கிவிடவில்லை. தேசிய முன்னணியின் இரு முக்கிய அங்கங்கள், கருணாநிதி மற்றும் என்.டி.ஆர். கட்சிகள். சத்துணவோடு முட்டை, வைட்டமின் மாத்திரைகள், இலவச அரிசி, பெண்களுக்கு இட ஒதுக்கீடு, அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு, எம்.ஜி.ஆர். ஆட்சி அக்கிரமங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் போன்ற பல இலவச - கவர்ச்சித் திட்டங்களை கருணாநிதி அமுல்படுத்தி வருகிறார். ஏற்கனவே மலிவு விலை அரிசி, இலவச வேட்டி, சேலை போன்ற திட்டங்களோடு 50,000 இளைஞர்களுக்கு உடனடி அரசு வேலை, 2000 ஆண்டு வரை இட ஒதுக்கீட்டை நீட்டிப்பது; நகரங்களில் வீட்டு வசதியைப் பெருக்குவதற்குத் தனிக்கழகம் ஆகியவற்றை அறிவித்து அமுலாக்குகிறார் என்.டி.ஆர்.

கர்நாடக ஆட்சி கலைக்கப்பட்ட போது ஹெக்டே ஆட்சி நிறைவேற்றிய எம்.ஜி.ஆர். என்.டி.ஆர் பாணி இலவச - கவர்ச்சித் திட்டங்களை மூலதனமாக வைத்துப் பிரச்சாரம் செய்கிறது ஜனதா தளம். முக்கியமாக, விவசாயக் கடன் ரத்து உட்பட விவசாயிகளுக்குத் தரப்படும் சலுகைகளை நம்பியிருக்கிறது அரியானா தேவிலால் தலைமை. மாநிலங்களுடைய அதிகாரத்தைப் பறிக்கும் ராஜீவின் பஞ்சாயத்துச் சீர்திருத்தத்தை விட கூடுதலாக அதிகாரத்தை பகிர்ந்தளிப்போம் என்கிறது ஜனதா தளம். ஓட்டுக்காகத் தற்காலிக வேலை வாய்ப்புகளைத் தான் தருகிறது காங்கிரசு; வேலை தருவதையே அடிப்படை உரிமையாக்குவோம் என்கிறது ஜனதா தளம். இவைதவிர குறைந்தபட்சக் கூலி மற்றும் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கேற்பு என்று அடுக்கிக் கொண்டே போகிறது.

தேசிய முன்னணியை இடதுபுறம் இழுக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளும், வலதுபுறம் இழுக்கும் பாரதீய ஜனதா மதவெறியர்களும் தேர்தல் நெருங்கும் போதுதான் அறிவிப்புகளைத் துவங்குவார்கள். ஏற்கனவே நிலச் சீர்திருத்தம், பஞ்சாயத்து சீர்திருத்தம், வேலையற்றோருக்கு மானியம் போன்ற திட்டங்களைக் கூறி ஓட்டுப் பொறுக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள், கூடவே ஏகாதிபத்திய சதி, வகுப்புவாத - பிளவுவாத சக்திகளின் கூட்டு ஆகியவற்றையும் எதிர்த்து சேர்த்து ஏதோ கொள்கை - திட்டபூர்வ அணுகுமுறை வைப்பதாக நாடகமாடுவார்கள். இலவச - கவர்ச்சித் திட்டங்களை விட இந்து மதவெறி முழக்கங்களுக்கே முக்கியத்துவமளிப்பது என்று பாரதீய ஜனதா முடிவு செய்து விட்டது. பஞ்சாப், ஜம்மு - காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் இந்துக்களுக்குள்ள பாதுகாப்பற்ற நிலை, பாபரி மசூதி - ராமஜன்ம பூமி பிரச்சினை ஆகியவற்றை பிரதான தேர்தல் பிரச்சாரக் கருவாக அது தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளது

### அரசியல் தரமோ அதளபாதாளத்துக்கு விழும்!

கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில், இலவச - கவர்ச்சித் திட்டங்கள் பலவும் வீசியெறியப்பட்டன. ஆனால் அவற்றை விட ஆபாச வசவுகளே தேர்தல் பிரச்சாரத்தில் நிரம்பி வழிந்ததைப் பார்த்தோம். தமிழ்நாட்டின் அரசியல் தரம் தாழ்ந்து போய்விட்டதாக பாசிச ராஜீவ் முதல் அனைத்துத் ''தேசியவாதி''களும் அலுத்துக் கொண்டார்கள்.

வரும் தேர்தலில் ஆபாச - தரக்குறைவான வசவுகளை நாடு தழுவிய ரீதியில் வளர்த்து விடுவார்கள். இப்போதே அதைத் துவங்கிவிட்டார்கள். ''ஜனதா தளத் தலைவர் வி.பி.சிங் யாருடனும் படுக்கத் தயங்காத இந்திய அரசியலின் பாமிலா போர்டிஸ்''. ''வி.பி.சிங் பைத்தியம் பிடித்தவர்'' போன்ற வசவுகளை சரளமாகப் பயன்படுத்தி வருகிறார்கள் காந்தீய காங்கிரசுக்காரர்கள். ''காங்கிரசுக்காரர்களுக்கு 'எயிட்ஸ்' நோய் வந்திருக்கிறது'' என்றும் ''அவர்கள் உடன்கட்டைப் பேர்வழிகள்'' என்றும் எதிர்க்கட்சியினர் எதிர்த் தாக்குதல் தொடுக்கிறார்கள்.

இந்த ஆபாச வசவுகளுக்குள்ளும் வேறு ஏதோ தேசிய முக்கியத்துவம் இருப்பதாகக் காட்டிக் கொள்ள இருதரப்பாருமே தேசிய - மக்கள் நலன்கள், லஞ்ச ஊழல் எதிர்ப்பு போன்ற பிரச்சினைகளை அலசுகிறார்கள். ஃபேர்ஃபாக்ஸ் விவகாரம், போஃபார்ஸ், நீர்மூழ்கி, விமானங்கள், எண்ணெய்க் குழாய்கள், ரிலையன்ஸ் போன்ற பல ஊழல்களில் சிக்கிய பாசிச ராஜீவ் கும்பல் அம்பலப்பட்டுப் போனது. இப்போது பூடாசிங், பலராம் ஜாக்கர் போன்ற அதன் எடுபிடிகளின் ஊழல்கள் வெளிவருகின்றன. ''என்னைக் குற்றஞ் சொல்லும் நீ மட்டும் யோக்கியனா?'' என்கிற பாணியில் எதிர்க்கட்சி ஊழல்கள் வெளிவருகின்றன. கர்நாடக முதல்வராக இருந்த ஜனதாத் தளத் துணைத் தலைவர் ஹெக்டேயின் வீட்டு மனை ஊழல்கள், தேவிலால் - என்.டி.ஆரின் குடும்ப ஊழல்கள் சந்திசிரிக்கின்றன.

பாசிச ராஜீவின் இரகசிய பேரங்கள், தொடர்புகள் பற்றி நாளும் அம்பலப் படுத்துகிறார்கள் எதிரணியினர். சூரி, தபார், அம்பாணி போன்ற தரகு முதலாளிகள்; குட்ரோச்சி போன்ற இத்தாலிய - அந்நியக் கூட்டாளிகள்; பச்சன், சோப்ரா, சர்மா போன்ற நெருங்கிய நண்பர்கள்; அலுவாலியா, மணிசங்கர் ஐயர், துபே, ராஜீவ் சேத்தி போன்ற துதிபாடிகள் ஆகியோர் ராஜீவின் சிந்தனையையும் செயலையும் தீர்மானிக்கிறார்கள்; பிரதமர் ராஜீவ் மூளையே இல்லாத முட்டாளும் புளுகுணியும், இயந்திரமும் தான் என்று நிரூபிக்கிறார்கள்.

பதிலுக்கு, எதிர்க்கட்சித் தலைமை கோயங்கா, நுஸ்லிவாடியா போன்ற தரகு முதலாளிகளின் கைக் கூலிகள்; ஹாஜிமஸ்தான், நசீர் அலி போன்ற கடத்தல்காரர்களின் கூட்டாளிகள் என்று காங்கிரசார் குற்றஞ்சாட்டுகிறார்கள். அலகாபாத் தேர்தலில் ஹாஜீ மஸ்தானிடம் நிதி வாங்கியது, நசிர் அலியுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் விருந்துண்டது போன்றவற்றை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். எதிர்க்கட்சியினரின் லஞ்ச ஊழல், இரட்டை வேடங்களை அம்பலப்படுத்துவதற்கு சந்திரசேகர், சுப்பிரமணிய சாமி, இந்துபாய் பட்டேல், தேவகௌடா போன்ற ஒரு ஐந்தாம் படையை உருவாக்கி ஏவிவிடுகின்றனர்.


பரிசுத்த ஆட்சியே லட்சியம் என்று தொடங்கிய ராஜீவ் மற்றும் வி.பி.சிங் ஆகிய இரண்டு தலைமையுமே சந்திராசாமி, நசீர் அலி போன்ற இரகசிய உலகப் பேர்வழிகளின் நெருங்கிய உறவினர்கள் என்பது வெளிவந்து விட்டது. கொள்கை பூர்வமான

படிப்பகம்

www.padippakam.com

மூன்றாவது தலைமை எனப் பீற்றிக் கொள்ளும் சந்திரசேகரின் பலமோ பீகார் நிலக்கரிச் சுரங்கத்தில் ஆதிக்கம் - அட்டூழியம் புரியும் மாஃபியா - கிரிமினல் கும்பலைப் பின்னணியாகக் கொண்டது.

''கடத்தல்காரர்கள், மதவெறியர்கள், பிளவுவாதிகள், பயங்கரவாதிகள், அந்நிய சதிகாரர்கள் ஆகியோரின் பங்காளிகளாகி விட்டார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். அவர்கள் நாட்டின் எதிரிகள், துரோகிகள்'' என்று நேரடியாகவே, பகிரங்கமாகவே குற்றஞ் சாட்டுகிறார் பாசிச ராஜீவ். ''அந்நிய நாடுகளில் ஏராளமாக சொத்துக்களைக் குவித்துள்ள ராஜீவ் ஒரு திருடன்; ஆடம்பர உல்லாசப் பிரியன். இந்தியப் பண்பாட்டிற்கே ஒவ்வாத அந்நிய நச்சுக் கிருமி. விதேசியா, சுதேசியா என்பதுதான் பிரச்சினை! நாட்டை அந்நியர்களுக்கு அடகுவைக்கும் ராஜீவ், நெருக்கடி முற்றும் போது வெளிநாட்டிற்கு ஓடிப்போவார்'' என்று பகிரங்கத் தாக்குதல் தொடுத்துள்ளது எதிரணி.



சினிமா மேனகையோடு நவீன விசுவாமித்திரர் என்.டி.ஆரின் தரிசனம்; கவர்ச்சி அரசியலே கதி!

### ஜாதி, மத, இன ரீதியில் 'அரசியல்' கள்ளக்கூட்டுகள்

இலவசத் திட்டங்கள் - கவர்ச்சி முழக்கங்களோ, எதிரெதிர் பிரச்சாரங்களோ எப்படியிருப்பினும், ஓட்டுக்கணக்கு முக்கியமானது. அவை சிதறிப் போகாமல் இருக்கத் தேவையானவது அரசியல் கூட்டு என்றே எல்லாக் கட்சிகளும் நம்புகின்றன. எனவே பேரங்கள், கட்சி மாறுதல்கள் மும்முரமாக இப்போது நடக்கின்றன.

எதிர்க்கட்சியினர் நீண்ட காலமாகவும் நிரந்தரமாகவும் இந்த வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். பெரிய புத்திமான்களைப் போல அரசியல் சக்திகளின் வியூகம் அமைக்கும் பணியை ஜனதாத் தலைவர்கள் தொடங்கினார்கள். இடதும் இல்லாமல், வலதும் இல்லாமல் மையவாதக் கட்சிகள் - நபர்களை ஒரு கட்சியின் கீழ் இணைப்பது; பிறகு சாத்தியமான சிறிய தேசிய, பிராந்திய - மாநிலக் கட்சிகளோடு சேர்ந்து ஒரு கூட்டணி அமைப்பது; இந்த பலத்தில் நின்று கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து தொகுதிப் பங்கீடு - உடன்பாடு செய்து கொள்வது. இந்த மூன்று மட்ட முயற்சியின் மூலம் காங்கிரசுக்கு எதிரான ஓட்டுக்கள் சிதறிப் போகாமல் சேகரித்து ஆட்சியைப் பிடிப்பதுதான் 'ஜனதா' தலைமையின் தேர்தல் உத்தி. ''ஆட்சியைப் பிடிப்பது!'' என்கிற ஒரு அம்சத்திட்டம் தவிர இதற்கு வேறு கொள்கையோ, இலட்சியமோ கிடையாது. இந்த மூன்று மட்ட முயற்சியிலேயே ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் போய்விட்டன.

பார்வைக்கு சற்று நேர்மையான அரசியல் அணிதிரட்டல் போல 'ஜனதா' முயற்சிகள் தெரியும். உண்மையில் ஜாதி, மத, இன ரீதியிலான ஒரு கள்ளக்கூட்டு சேர்வதற்கான முயற்சிதான் இது! வட இந்தியாவில் பெரும்பான்மையினரான தாக்கூர், ஜாட், குஜ்ஜார் மற்றும் யாதவர் ஆகிய நான்கு ஜாதிக்காரர்களை ஒரு கட்சியின் கீழ் திரட்டுவது தான் 'ஜனதா' தலைமையின் வியூகம். இந்தப் பிரிவு மக்களை ஈர்ப்பதற்காகத்தான் ''மண்டல் கமிசன் இடஒதுக்கீடு'' அறிக்கையை அமுல்படுத்தவதாக 'ஜனதா' வாக்களிக்கிறது. இன ரீதியிலான முழக்கங்களை வைத்து ஆதரவு திரட்டிக் கொண்டுள்ள தி.மு.க., தெலுங்குதேசம், அசாம் கணபரிக்ஷத் போன்ற பிராந்திய மாநிலக் கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொள்வதன் மூலம் மற்ற மாநிலக் கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொள்வதன் மூலம் மற்ற பகுதி ஓட்டுக்களை - இடங்களைப் பிடித்துவிட முடியும். பாரதீய ஜனதாவுடன் தொகுதிபங்கீடு செய்து கொண்டு பனியா, மார்வாரி போன்ற பிற மேல்சாதி ஓட்டுக்களையும், போலிக் கம்யூனிஸ்டுகளுடன் தொகுதிப் பங்கீடு செய்து கொண்டு முற்போக்கு, மதச்சார்பற்ற ஜனநாயக சாயம் பூசிக் கொண்டால் எஞ்சிய பிரிவினரது ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜெயலலிதா கட்சி, பரூக் அப்துல்லா கட்சி போன்றவை தவிர 'அரசியல்' ரீதியிலான கூட்டு அமைப்பதற்கு காங்கிரசிற்கு வாய்ப்பில்லாமல் போனது. வலிந்துவலிந்து இழுத்தும் நேரடி கூட்டு வைத்துக் கொள்ள போலிக்கம்யூனிஸ்டுகள் (டாங்கே கும்பல் தவிர) மறுக்கின்றன. கேரள பாணியிலான ஜாதி, மதக் கட்சிகளின் கூட்டுக்குக் கூட வழியில்லை. எனவே நேரடியாக ஜாதி, மத, இன ரீதியில் வாக்காளர்களை ஈர்ப்பதற்கும், அதன் தலைவர்களை விலை பேசுவதற்கும் காங்கிரசு முடிவு செய்துவிட்டது.

சீக்கியர்களுககு எதிராக இந்துமத வெறியைத் தூண்டிவிட்டு இந்துமதக் காவலனாக காங்கிரசை சித்தரிப்பது. இதற்காக இந்திரா கொலை வழக்கு - சதி, குண்டுவெடிப்பு போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறது. அதேசமயம் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் பெண்கள், முஸ்லீம்கள் போன்ற சிறுபான்மைப் பிரிவினரை ஈர்ப்பதற்கு வேறு சில உத்திகளைக் கையாளுகிறது. ஷாரியத் - முஸ்லீம் விவாகரத்து, பாப்ரி மசூதி - ராம ஜன்ம பூமி, சாலமன் ருஷ்டி நூலுக்குத் தடை போன்றவற்றைப் பயன்படுத்தி முஸ்லீம் மத வெறியர்களுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்துள்ளது.

தேர்தலை ஒட்டிக் கொண்டு வந்துள்ள பஞ்சாயத்து, நகரவைச் சீர்த்திருத்தங்கள், வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகிய திட்டங்களில் ஒதுக்கீடு, நிலப்பங்கீடு, வேலை நியமனங்கள் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களின் மீது கரிசனை காட்டுகிறது. அதேபோல பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளது. இதையெல்லாம் பொதுவான நோக்கத்தோடு செய்யவில்லை. பூகோள, ஜாதி, மத ரீதியிலான புள்ளிவிவரங்களைத் தயாரித்து, சலுகைகளைத் திட்டமிட்டு சதவீத ஓட்டுக்களைத் தீர்மானிப்பதற்கு என்றே அகமது பட்டேல் மற்றும் ரங்கராஜன் குமாரமங்கலம் தலைமையிலான 'கம்ப்யூட்டர் கமிட்டி' போட்டு முடிவு செய்துள்ளது.

அவர்கள் எவ்வளவுதான் மூளையைக் கசக்கி திட்டமிட்டபோதும், பெரும் அணையை எழுப்பி ஆதரவுகளைத் தேக்கி வைக்க முயன்றாலும் ஏதாவது ஒரு பக்கம் பிய்த்துக் கொண்டு போய்விடுகிறது. 'ஏகமனதாகத் தீர்மானித்து' ஏதாவது ஒரு மாநில முதல்வரையோ, தலைவரையோ நியமித்தவுடனே போட்டிக் கும்பல் தோன்றி ஆட்சியைக் கவிழ்க்கும் கலகம் உடனே துவங்கிவிடுவதைக் காண்கிறது காங்கிரசு. ஜனதாவிலும் அதே கதைதான். ஏதாவது ஒரு பதவிக்கு யாரையாவது நியமித்தால் போதும்; உடனே போட்டிக் கும்பல் சேர்ந்து கட்சி தாவுகிறார்கள்; அல்லது தனிக்கட்சி அமைத்துக் கொண்டு எதிர் வேலை செய்கிறார்கள். இரண்டு கட்சியிலுமே ஒரு கையில் மாலையோடும், மறு கையில் கத்தியோடும் தலைவர்களைச் சுற்றிப் பிரமுகர்கள். பதவி கொடுத்தால் மாலை; மறுத்தால் முதுகிலே குத்துகிறார்கள்.

''அதெல்லாம் உட்கட்சி விவகாரங்கள், எங்களைப் பொறுத்தவரை கொள்கை ரீதியில்தான் கூட்டணி'' என்று போலிக் கம்யூனிஸ்டுகளும், பாரதீய ஜனதாவும் பீற்றிக் கொண்டாலும் ஜனதா தளம் - தேசிய முன்னணியின் விதியோடுதான் தமது கதி அடங்கி

படிப்பகம்

www.padippakam.com

யிருக்கிறது என்று கருதி "இடது", "வலது" புறங்களில் இழுத்துக் கொண்டே இருக்கி றார்கள். இப்போது கொள்கை பேசி மோதிக் கொண்டாலும் தொகுதிப் பங்கீடு என்ற அடிப்படையில் மறைமுக - கள்ளக்கூட்டுச் சேரத் தயங்கமாட்டார்கள் என்றே இவர்க ளின் பழைய புராணங்கள் கூறுகின்றன.

**தோதலைத் தீர்மானிக்கும் காரணிகள் பிரச்சார பலம் - பண பலம் - ஆள் பலம்**

எது எப்படிப் போனாலும் பிரச்சார பலம் அதற்குத் தேவையான பண பலம், ஆள் பலம்தான் தேர்தல் வெற்றி தோல்வி யைத் தீர்மானிக்கும் என்று எல்லா ஓட்டுக் கட்சிகளுமே நம்புகின்றன. இதிலும் ஆளுங் கட்சியே முன்னணியில் நிற்கிறது என்றா லும் எதிர்க்கட்சிகள் பின்தங்கிவிடவில்லை.

பிரதமரின் பிரச்சார செலவுகள் மற்றும் ஏற்பாடுகள் அனைத்தையும் அரசு அமைப்பே கவனித்துக் கொள்கிறது. விமா னப் படையின் தனி விமானம், அரங்க அமைப்பு, ஆள் திரட்டுவது அனைத்தும் தான். பத்துக்கோடி மக்கள் வாழும் பகுதிக்கு ஒளிபரப்பக் கூடிய 220 வானொளி நிலை யங்கள். அதைவிட அதிகமான வானொலி நிலையங்கள் ஆகியன பாசிச ராஜீவ் கும்ப லுக்குக் கிட்டியுள்ள ஏகபோக பிரச்சார பலம். இவைதவிர விளம்பரக் கம்பெனி மூலம் பிரச்சாரம் செய்வதற்கும் 500 கோடி ரூபாய்க்கு மேலே நிதி ஒதுக்கியுள்ளது. இப் போதே திட்டமிட்டு இவற்றை அமுலாக்குவ தற்கான அரசியல்வாதிகள் - அதிகாரிகளின் குழு அமைத்துச் செயல்படுகிறது.

அரசியல்வாதிகளைவிட அதிகாரிக ளையே அதிகமாக நம்புகிறார் ராஜீவ். ஆனாலும் ஓட்டுக்களை குவிப்பதற்காக இதுவரை ஒதுக்கி வைத்திருந்த - விலக்கி வைத்திருந்த அந்துலே, பிரணவ முகர்ஜி, கமலபதிதிரிபாதி, ஜகன்னாத மிஸ்ரா, சென்னா ரெட்டி, சத்தியநாராயண் சின்கா போன்ற பயம் பெருச்சாளிகளை இழுத்துப் போட்டுக் கொண்டுள்ளார். ராம் நரேஷ் யாதவ், கமலா பகுகுணா, நந்தினி சத்பதி போன்றவர்களைக் கட்சி தாவச் செய்துள் ளார். இதைவிட முக்கியமாக ஓட்டுச் சாவடி களைக் கைப்பற்றுவது உட்பட தேர்தல் மோசடிகளைச் செய்வதற்காக கிரிமினல் கும்பல்களைச் சேர்க்கத் துவங்கிவிட்டார்.

ஏற்கனவே மத்தியப்பிரதேசம், உத்தி ரப்பிரதேசம், பீகார் போன்ற பல வட மாநி லங்களில் எம்.எல்.ஏ. மற்றும் மந்திரிகளா கவே கிரிமினல் குற்றவாளிகள் உள்ளார்கள். உமேஷ்வர் பிரசாத்சிங், ஹரிசங்கர் திவாரி போன்ற உ.பி. எம்.எல்.ஏ.க்களும், விஜேந் திரகேபே, சந்திராபாலி தாகூர், அவாத் பிகாரி சௌதுரி, ஆதித்தியாசிங் போன்ற பீகார் எம்.எல்.ஏ.க்கள் காங்கிரசுக் கிரிமி னல்கள். ரகுபீர் சிங் யாதவ், சீத்தாராம் நிஷாத் போன்ற காங்கிரசு மந்திரிகள் தமக் குக் கீழே கிரிமினல் கும்பல்களை வைத்து நடத்துகிறார்கள். அலகாபாத் தேர்தலில் புக் கால் மகராஜ் என்ற என்.எஸ்.ஏ. கிரிமினல் கைதியின் ரௌடித்தனத்தைப் பயன்படுத் திக் கொண்டார்கள். இப்போது ராம்கோ பால் மிஸ்ரா, லாட்டூரிசிங் போன்ற கிரிமி னல்களை மாவட்ட வாரியத் தலைவர்க ளாக்கி உள்ளது, காங்கிரசு.

காங்கிரசுக்குள்ளதைப் போல வானொளி, வானொலி ஏகபோகம் எதிர்க் கட்சிகளுக்குக் கிடையாது. ஆனால் தரகு முதலாளிகளின் பத்திரிக்கைகளின் ஆதரவு நிரம்பவே உண்டு. விமானப்படை விமா னம் இல்லைதான். ஆனால் ஐந்தாறு தலை வர்களாகப் பிரச்சாரத்துக்குப் போகும் போது நூற்றுக்கும் மேற்பட்ட கார்கள், அவற்றைவிட நான்கைந்து மடங்கு அதிக மான மோட்டார் சைக்கிள் பரிவாரங்க ளோடு போய் கிராமப்புறங்களைக் கலக்குகி றார்கள். ஆட்சியைப் பிடித்த பிறகு கருணா நிதியின் விளம்பரப் பிரச்சாரம் பன்மடங்கு பெருகிவிட்டது. வழக்கமான சினிமா பாணி விளம்பரப் பிரச்சாரத்தோடு, வரும் தேர்த லுக்கெனவே 'பிரம்மரிஷி விஸ்வாமித்திரர்' பட்மெடுத்து நடிக்கிறார், என்.டி.ஆர்.

ஓட்டுச்சாவடிகளைக் கைப்பற்றுவதில் ஒரு பாரம்பரியம் ஏற்படுத்தியவர்கள் தேவி லால், அஜித்சிங், முலயம் சிங் யாதவ், சஞ் சாய்சிங் போன்ற ஜனதாத் தலைவர்கள். சந் தரசேகர் தனது சுராஜ்தேவ்சிங், கபில்தேவ் சிங் ஆகிய பீகார் நிலக்கரிச் சுரங்க கிரிமினல் கும்பலைத்தான் அரசியல் தளமாகக் கொண் டிருக்கிறார். உ.பி.யில் வீரேந்திர பிரதாப் சாஹி, சர்ஜு பிரசாத் சரோஜ், அருணா சங் கர் சுக்லா, அங்கலேஷ்வர் சிங் போன்ற கிரி மினல் - மாஃபியா - குண்டர் கும்பல்களை வளைத்துப் போட்டுள்ளது ஜனதா தளம். ஆந்திர என்.டி.ஆரின் மஞ்சள் சட்டைப் படை, தேவிலாலின் பச்சைச் சட்டைப் படை, கருணாநிதியின் இளைஞரணி போன் றவை காங்கிரசு தேர்தல் ரௌடித்தனங்க ளுக்கு ஈடுகொடுப்பதற்குத் தயாராக உள் ளன. ஆர்.எஸ்.எஸ். கும்பலைத் தேவை யான அளவு பயன்படுத்திக் கொள்ள பார தீய ஜனதாவுக்கு முழு உரிமை உண்டு. இதுத விர பயிற்சிபெற்ற சிவசேனா குண்டர்படை யும் இருக்கிறது.

★ ☆ ★

எனவே, தேர்தல் 'மரபுகள்' எதை யும் ஓட்டுக்கட்சிகள் மதிக்கப் போவ தில்லை. பொறுக்கி அரசியலை, கிரிமினல் முறைகளை நம்பியே அவை மூர்க்கமான தேர்தல் யுத்தத்தில் இறங்கிவிட்டன. ஆபா சம்.- வக்கிரம் - ஆத்திரம் எல்லாம் கலந்த வெறித்தனமான தாக்குதல், வசவுகள், அவ தூறுகள் தான் குடுபறக்க வந்துவிழுகின்றன. ராஜீவ் கொள்ளைக்காரன் என்று இவர்க ளும், வி.பி.சிங் பதவி வெறிபிடித்த துரோகி - பைத்தியக்காரன் என்றும், தேவிலால் கிரா மப்புறத் திருடன் என்றும், என்.டி.ஆர். ஒரு கபட சந்நியாசி என்று அவர்களும் முத்திரை குத்திக் கொள்கிறார்கள்.

இவையெல்லாம் ஓட்டுக் கட்சிகளின் ஓட்டாண்டித் தனத்தை மட்டும் காட்ட வில்லை. நாடாளுமன்ற ஜனநாயக அரசி யல் அமைப்பின் ஓட்டாண்டித்தனத்தையே காட்டுகிறது. வரும் நாடாளுமன்றத் தேர் தல், அரசியல் அநாகரிகத்தை - அராஜ கத்தை முழுவதுமாக நிர்வாணமாக்கிவிடும் என்றே தெரிகிறது. ஓட்டுக் கட்சி - நாடாளு மன்ற அரசியலுக்குள்ளேயே தீர்வைத் தேடு பவர்களால் இதைப் புரிந்துகொள்ளவோ, விடிவைக் காணவோ முடியாது.

பாட்டாளிவர்க்கப் பண்பாடு, ஒழுக்க நெறியோடு கூடிய மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தாந்தத்தால் வழிநடத்தப்ப டும் புரட்சிகர அரசியல் கட்சிதான் பொறுக்கி அரசியல் நாடாளுமன்ற அராஜகத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ள ஓட்டுக்கட்சிகள் அனைத்துக்கும் எதிரான மாற்று அமைப்பா கும். அதன் தலைமையில் திரளுவதன் மூலம்தான் தற்போதைய அனைத்து நெருக் கடிகள் - பிரச்சினைகளுக்கும் மக்கள் தீர்வு காண முடியும்.

◇ ஆர்.கே.



கருணாநிதியின் பிறந்தநாள் விழா: சுயவிளம்பர பிரச்சாரம் - தேர்தலுக்கு நிதி சேர்ப்பு: ரூபாய் நோட்டு கிரீடம் - கோட்டுடன் கருணாநிதி.

படிப்பகம்

www.padippakam.com




காங்கிரசு மத்திய மந்திரி பிரபுவுக்குச் சொந்தமான மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலை. மின்கட்டண பாக்கி ரூ.20 கோடி ஏப்பம்! உள்ளே: மோசடி நாயகன் பிரபு.

# 20 கோடி ரூபாய் மின்பாக்கி மோசடி!

மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலை (MALCO) மேட்டூரைத் தலைமையமாகக் கொண்டு இயங்கும் அலுமினிய உற்பத்தி மற்றும் உருட்டாலை. காங்கிரசு மத்திய மந்திரி பிரபு குடும்பத்துக்குச் சொந்தமானது; நேரடியாக இயக்கப்படுவது. இத்தாலியக் கூட்டுடன் 1960ம் ஆண்டு துவக்கப்பட்டது. '60களில் தமிழ்நாட்டை அரசாண்ட காங்கிரசு மந்திரி சபையில் தொழிற்துறை மந்திரியாக இருந்த வெங்கட்ராமனின் (தற்போதைய ஜனாதிபதி) நேரடி சலுகையின் கீழ் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது. பொற்கால ஆட்சி நடத்தியதாக கூறப்படும் காங்கிரசு ஆட்சியில் நிர்வாகப்புலி பக்தவச்சலம் தலைமையில் புழுத்து நாறிய ஊழல் முறைகேடுகளுக்கும், அதிகார அத்துமீறல்களுக்கும் இன்றளவும் உயிருள்ள சாட்சியாக விளங்கும் தொழிற்சாலைதான் ''மால்கோ''

தொழிற்துறை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அலுமினிய உற்பத்தி தலையாய பங்கு வகிக்கிறது என்று காரணம் கூறி காங்கிரசு அரசாங்கம் இத்தொழிற்சாலைக்கு ஏராளமான சலுகைகள் வழங்கியது. பிரதானமாக, அத்தொழிற்சாலைக்குத் தேவையான ஏராளமான மின்சாரத்தை, மிகக் குறைந்த விலையில் வழங்கியது. ஆண்டொன்றுக்கு 10,000 டன் உற்பத்தி வரை இச்சலுகையை அனுபவிக்க அத்தொழிற்சாலைக்கு உரிமை உண்டு என்று சட்டப்பூர்வமாக அறிவிப்பு செய்யப்பட்டது. ஏறக்குறைய 15 ஆண்டுகாலம், தி.மு.க ஆட்சி அமைத்த ஏழாண்டுக்குப் பிறகும், கேள்விக்கிடமற்ற வகையில் இச்சலுகையை அனுபவித்தது அத்தொழிற்சாலை. '75ம் ஆண்டில் வரலாறு காணாத மின் பற்றாக்குறை தமிழகத்தில் தலைவிரித்தாடியது. கருணாநிதி தலைமையிலான தி.மு.க. மந்திரிசபை, அத்தொழிற்சாலைக்கு மட்டும் விதிவிலக்கு அளித்து தொடர்ந்து சலுகை விலையில் மின்சாரத்தை விநியோகித்ததோடு, சற்றே கூடுதல் கட்டணத்துடன் உபரி மின்சாரத்தையும் ஏராளமாக வழங்கியது. தமிழகமே இருளில் மூழ்கி இருந்த சமயத்தில், மெட்ராஸ் அலுமினிய தொழிற்சாலை கருணாநிதியின் 'கருணை'யால் உபரி உற்பத்தியில் திளைத்தது.

உபரி மின்சாரத்துக்கு விதிக்கப்பட்ட கூடுதல் கட்டணத்தொகை பாக்கியாக மட்டும் ரூ.9,55,44,510 நிலுவையை அரசுக்கு கட்ட மறுத்தது பிரபு குடும்பத்து நிர்வாகம். மோசடி செய்த நிர்வாகத்திற்கு, மின் துண்டிப்பு செய்து பதிலடிக் கொடுக்க வக்கற்ற கருணாநிதி அரசாங்கம் அதிலும் கமிஷன் அடிக்க இறங்கியது. ''பாக்கியை தள்ளுபடி செய்வதாக, அப்போது வாய்மொழி உறுதிக் கொடுத்தார் கருணாநிதி'' என்ற உண்மையை நிர்வாகமே போட்டுடைத்தது. நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டு, கருணாநிதி ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு மேலும் 10 கோடி ரூபாயை அரசுக்கு மின் பாக்கி வைத்தது நிர்வாகம். அதன்பிறகு ஆட்சிக் கட்டிலைப் பிடித்த எம்.ஜி.ஆர் அரசு கருணாநிதியின் ஊழல்களைக் களைவதாக வேடம் போட்டு, பிரபு குடும்பத்தின் மீது 20 கோடி ரூபாய் மின்பாக்கி கேட்டு உயர்நீதி மன்றத்தில் சாதாரண சிவில் வழக்கு தொடர்ந்தது. பதிலுக்கு பிரபு குடும்பம், அரசு ஏற்கனவே தன்னிடமிருந்து 42,37,86,206.89 (!) ரூபாயை மின் பாக்கியாக, உபரியாக வசூலித்திருக்கிறது; முதலில் அதை திருப்பித்தர வேண்டும் என எதிர் வழக்காடியது. கூடவே, அரசு தொடுத்திருக்கும் வழக்குக்காக எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசு மின் துண்டிப்பு செய்யக்கூடாது என்று கோரி, 'நீதி'மன்றத்திடமிருந்தும் தடையும் பெற்றது.

வழக்கு, எதிர்வழக்கு, மேல் வழக்கு என்று 10 ஆண்டுகாலம் உருண்டோடியது. தொடர்ந்து எவ்வித தடையும் இன்றி, தாராளமாக சலுகை விலையில் தொடர்ந்து மின்சாரத்தை பெற்று வந்தது நிர்வாகம். சலுகை விலை மின்சாரத்திற்கு, மேலும் உறுதியான அடித்தளம் அமைக்க, மத்திய அரசை கையில் போட்டுக் கொண்டு மேலும் பல மோசடிகளில் இறங்கியது, நிர்வாகம். நலிந்த தொழிற்சாலை என்று சலுகை பெற்று, மறு ஒழுங்கைப்புக்கான தொழில் மற்றும் நிதிவாரியம் (BIFR) மூலம் கேள்விகிடமற்ற வகையில் சலுகை விலை மின்சாரத்தை தொடர்ச்சியாகப் பெற்றது. இந்த நிதி உதவி அமைப்பின் கீழ் தொழிற்சாலை இருக்கும் வரை, எந்தவித மின்தடையும் அரசு செய்யக்கூடாது என்றும், அப்படிச் செய்வது, ஆலைக்கு இவ்வமைப்பு செய்த பெருத்த கடனுதவிக்கு குந்தகம் ஏற்படுத்தும் என்றும் அறிவிக்கப்பட்டது.

'88 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இவ்வறிவிப்பைக் கையில் வாங்கிய நிர்வாகம், அரசுக்கு நிரந்தரமாக நாமம் போடும் வேலையில் இறங்கியது. 'ஊழலற்ற' ஆட்சி நடத்திய கவர்னர் அலெக்சாண்டர், பிரபு குடும்பம் அரசுக்கு நாமம் போடுவதற்கான அனைத்து 'உதவி'களையும் செய்துக் கொடுத்தார். '89ம் ஆண்டு ஜனவரி மாதம் மறு ஒழுங்கமைப்புக்கான தொழில் மற்றும் நிதி வாரியம் தனது தனி ஆய்வு மற்றும் விசாரணை முடிவாக, ஆலை புனருருவாக்கத் திட்டத்தின் கீழ், தமிழக மின்சார வாரியம், உடனடியாக இவ்வாலைக்கு மேலும் கூடுதல் மின்சாரத்தை ஒதுக்க வேண்டும் என்றும், அது மார்ச் '89க்குள் நடைமுறைக்குள் வர வேண்டும் என்றும் 'ஆலோசனை' வழங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் சட்டங்களையே கிடப்பில் போடும் அதிகாரவர்க்கம், 'ஆய்வு'க்குழுவின் — அதிகாரவர்க்கத்தின் 'ஆலோசனை'யை ஆணையாக ஏற்று நடைமுறைப் படுத்தியது. 47 மெகாவாட் மின்சாரத்தை உடனடியாக ஆலைக்கு வழங்க முன் வந்தது. 20 கோடி ரூபாய் மின்பாக்கியை வசூலிக்க உடனடியாக ஆலையை நிர்பந்திப்பதில்லை என அரசும் ஏற்றுக் கொண்டது.

அனைத்திற்கும் மேலாக, கடந்த சட்டசபை தேர்தலுக்கு ஒருநாள் முன்பு, கவர்னர் அலெக்சாண்டர் அரசு அவ்வாலையுடன் அவசர அவசரமாக ஒரு ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டு, 20 கோடி ரூபாய் கடனிலிருந்து அவ்வாலையை விடுவித்தது. மக்களின், அன்றாட சாதாரண பிரச்னைகளைக் கூட கவனிக்காமல் அனைத்தையும் தேர்ந்

படிப்பகம்

www.padippakam.com

தெடுக்கப்பட்ட அரசு கவனிக்கும் என்று திருவாய் மலர்ந்த கவர்னர் அலெக்சாண்டர். இவ்வழக்கை மட்டும் கோர்ட்டுக்கு வெளியே நாங்கள் தீர்த்துக் கொள்கிறோம் என்று அவசரம் காட்டினார். அதன்படியே '89 ஜனவரி 20ந் தேதி (21ந் தேதி சட்டசபை தேர்தல்) இருத்தரப்பு வழக்கும் வாபஸ் பெறப்பட்டு சமரசம் ஏற்பட்டதாக அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆலையின் 20 கோடி ரூபாய் மின் பாக்கி தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்கு கைமாறாக, அரசு மீது ஆலை தொடுத்திருந்த 42 கோடி ரூபாய் உபரி மின் கட்டண தொகையும் வாபஸ் பெறப்பட்டதாக கூறப்பட்டது. இதில் மோசடி என்னவென்றால், 42 கோடி ரூபாய் பாக்கி என்பது ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு என்று கடைசிவரை அரசு வாதாடியதை, தர வேண்டிய தொகை என ஏற்றுக் கொண்டது.

தேர்தலில் வாகை சூடி, மீண்டும் அரியணை ஏறிய ஊழலின் பிதாமகன் கருணாநிதி, தன் கையில் ஆரம்பிக்கப்பட்ட ஊழல், தான் மீண்டும் அரசாட்சி ஏறும் வரை நீடித்திருந்ததைக் கண்டு அகமகிழ்ந்தாரோ என்னவோ, கவர்னர் ஆட்சியில் அரங்கேற்றப்பட்ட அந்த மிகப்பெரும் மோசடியை கண்டுக்கொள்ளவே இல்லை. ஆட்சிக் கட்டில் ஏறிய 100 நாட்களுக்குப் பிறகு, நிலைமை தலைகீழானது. தமிழக காங்கிரசு பிளவுண்டு, மூப்பனார் கோஷ்டி, கருணாநிதியின் கட்சிக்கும் ஆட்சிக்கும் விசுவாசம் காட்டவே, நன்றிக் கடனாக வாழப்பாடி கோஷ்டியை மிரட்டும் வேலையில் இறங்கினார் கருணாநிதி. வாழப்பாடி ராமமூர்த்தியின் கையாளான பிரபுக்கு நெருக்கடி கொடுக்கும் பொருட்டு, கவர்னர் ஆட்சியில் போட்ட ஒப்பந்தத்தை கண்டு கொதித்தெழுந்தார். இந்நிலுவை சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தில் அரசு தொடுத்த வழக்கு தொடரும் என்றும் ஆவேச அறிவிப்பு வெளியிட்டார். உண்மையில் வழக்கை மேலும் 10 ஆண்டு காலம் இழுத்தடித்து, இரண்டு கோஷ்டிக்கும் 'நண்பனாக' இருக்கவே இந்த சாதுரிய அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார்.

மெட்ராஸ் அலுமினிய தொழிற்சாலையின் மின்பாக்கியும் மோசடியும், அதற்கு ஆளுங்கட்சிகள் தொடர்ச்சியாக உறுதுணை புரிவதும், ஊழல் மலையில் வெளியில் தெரியும் முகடு மட்டும்தான். இன்னும் இவ்வாறு பல பத்துக்கும் மேற்பட்ட தனியார் தரகு முதலாளிகளின் தொழிற்சாலைகள், சலுகை விலையில் மின்சாரத்தை அனுபவிப்பதுடன், சொற்ப கட்டணத்தையும் செலுத்த மறுத்து, பல மோசடி வழக்குகளை அரசின் மீதே தொடுத்திருக்கின்றன. தற்போதைய புள்ளி விபரப்படி, தமிழக மின்சார வாரியம், ஆண்டொன்றுக்கு 300 கோடி ரூபாய்க்கும் மேலான நட்டத்தில் இயங்குவதாக கணக்கு காட்டப்படுகிறது. இவ்வளவு நட்டமும் சில பத்து கோடி ரூபாய்கள் விவசாயிகளுக்கு மின் கட்டண பாக்கி தள்ளுபடி செய்ததால் ஏற்பட்ட நட்டமல்ல; பிரபு மாதிரி பல நூறு பிரபுக்கள், தமிழகத்தின் மின்சாரத்தை உறிஞ்சிக் கொழுப்பதால் ஏற்படும் நட்டம்!

●

# மனித உயிர் மலிவாகிப் போனதா?

"ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழில் மையங்களில் ஒன்றான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், பணி பாதுகாப்பிற்கான சிறந்த எடுத்துக்காட்டு; இலக்கை விஞ்சி உற்பத்தி தொடர்கிறது" - இப்படி ஆகா, ஓகோவென்று வானொலி மற்றும் செய்தித்தாள்களில் டமாரம் அடிக்கப்படுகிறது. ஆனால் உண்மை நிலையோ இதற்கு நேர்எதிரானது. பாதுகாப்பு விதிகளை நிர்வாகம் புறக்கணிப்பதால் ஏராளமான விபத்துக்கள் நடந்துள்ளன. ஆனால் பல விபத்துக்கள் திட்டமிட்டே மூடிமறைக்கப்பட்டுள்ளன.

கடந்த 27.5.89 அன்று இரண்டாவது அனல் மின் நிலையத்தில் நடந்த கோர விபத்தினால் இரண்டு தொழிலாளர்கள் மாண்டு போனார்கள். உண்மையில் இது விபத்து அல்ல; அதிகார வர்க்க ஆணவத்தால் நடந்த படுகொலை!

இம்மின் நிலையத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகள் உள்ளன. சமீப காலமாக இதன் கொதிகலன் பகுதியில் எரிக்கப்படும் எரிபொருளின் கழிவுகளை (Slag) வெளியேற்றி வெப்பத்தைத் தணித்து அனுப்பக்கூடிய கன்வேயர் பாதைகள் பழுது காரணமாக ஒழுங்காக இயங்குவதில்லை. இதனால் மின் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்படுவதால் பழுதுகளை தற்காலிகமாக சரிசெய்து ஓட்டிவந்தது, நிர்வாகம்.

விபத்து நடந்த அன்று காலை 5.20 மணிக்கு இரண்டாம் பிரிவு கொதிகலனில் மீண்டும் எரிபொருள் கழிவை வெளியேற்றும் கன்வேயர் பழுதடைந்தது. கழிவுகளை வெளியேற்ற முடியாத நிலையில் உடனடியாக கொதிகலன் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்போதைய பணி நேரத்திற்குப் பொறுப்பேற்றிருந்த உதவி கண்காணிப்பாளரான இன்ஜினியர் ராஜகோபால் என்பவர் தனக்கு கெட்டபெயர் வந்துவிடக் கூடாதே என்று உற்பத்தியை பாதியளவு மட்டுமே குறைத்து எப்படியாவது சரிசெய்ய முயற்சித்துள்ளார். தற்காலிகமாக எதுவும் செய்ய முடியாமல் கழிவு வெளியேற்றி பழுதடைந்த ஒரு மணி நேரத்திற்குப் பிறகு கொதிகலனை நிறுத்தியுள்ளார். இதன் காரணமாக எரிபொருள் கழிவு வெளியேறாமல் கொதிகலனுக்குள்ளேயே ஏறத்தாழ 700 டிகிரி சென்டிகிரேடு வெப்பநிலையில் தணலாக இருந்தது. இந்நிலையில் முறைப்படி அதன் வெப்ப நிலையைக் குறைக்காமலும், கழிவு வெளியேறும் கதவுகளை மூடாமலும் உடனடியாக பழுதுபார்க்க வேண்டுமென்று D.C.E.வைத்தியநாதன் தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்தி மிரட்டினார். அதன்படி தொழிலாளர்கள் கழிவு வெளியேறும் பகுதிக்குக் கீழே நின்று வேலை செய்தபோது தணலாக இருந்த கழிவுகள் கொட்டி ராஜேந்திரன், கண்ணன் எனும் இரு காண்டிராக்ட் தொழிலாளர்கள் உடல் வெந்து மருத்துவமனையில் உயிரிழந்தனர். பயிற்சி பொறியாளர் ஒருவரும் மேலும் இரு தொழிலாளர்களும் பலத்த தீக்காயங்களுடன் உயிர் தப்பினர்.

பணி பாதுகாப்பிற்கென பரிசுகள் வாங்கிக் குவிக்கும் இந்நிறுவனத்தில் விபத்துக்குள்ளான தொழிலாளியை மருத்துவமனைக்கும் கொண்டு செல்ல வாகன வசதிகூட இல்லை என்பது வெட்கக்கேடான, அதிர்ச்சி தரும் உண்மை. விபத்து நடந்து தொழிலாளிகள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில், ஜீப் வைத்திருந்த D.C.E. மாணிக்கம் என்ற மனித மிருகம் ஜீப்பை (நிர்வாகம் கொடுத்ததுதான்) தரமறுத்து சண்டித்தனம் செய்தது. சாதாரணமாக சினிமா தியேட்டர் செல்லவும், போண்டா, வடை, கோழி வாங்கவும் ஜீப் எடுத்துக் கொண்டு சுற்றித்திரியும் அதிகார வர்க்கம் இரக்கமற்ற அரக்க குணம் கொண்டது என்பதை இச்சம்பவம் நிரூபித்துக் காட்டியது.

நீண்டகாலமாகவே நெய்வேலியில் காண்டிராக்ட் தொழிலாளர்கள் உரிமைகளற்ற அடிமைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள். மருத்துவமனையில் அவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. விபத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளி கூட மருத்துவச் செலவை அவரே ஏற்க வேண்டுமென நிர்பந்திக்கப்படுகிறார்கள். நிரந்தர தொழிலாளர்களால் பாதுகாப்பின்மை காரணமாக நிராகரிக்கப்படும் பணிகளை, பாதுகாப்பு வசதி செய்துதராமல் காண்ட்ராக்ட் தொழிலாளர்களை மிரட்டி வேலை வாங்குகிறது நிர்வாகம்.

அதிகார வர்க்க ஆணவத்தால் நடந்த இக்கோரமான படுகொலைக்குப் பின்னரும்கூட நிர்வாகத்தைக் கண்டிக்க வக்கற்ற தொழிற்சங்கங்கள் இறந்த தொழிலாளர்களின் ஆத்மா சாந்தியடைய பிரசுரம் வெளியிட்டு பஜனை செய்கின்றன. அதிலும் காண்டிராக்ட் தொழிலாளிகளை பெருமளவில் திரட்டி வைத்துள்ள சி.ஐ.டி.யு. சங்கம், இப்படுகொலையை அடுத்து காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் இரு நாட்கள் வேலை செய்யாமல் இருந்த போது கூட, நிரந்தர தொழிலாளர்களை அவர்களுக்கு ஆதரவாகத் திரட்டிப் போராடாமல் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதாக கண்துடைப்பு நாடகமாடியது.

விபத்துக்குக் காரணமான அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்து கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும், மாண்டு போன தொழிலாளிக்கு ஈட்டுத் தொகை வழங்கி, அவர்களது குடும்பத்தாருக்கு நிரந்தர வேலை கொடுக்கவும், அனைத்து தொழிலாளர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தித்தரவும் தொழிலாளத் தோழனே, இன்றே ஒன்றுபடு! இன்னும் கொலைகள் விழுமுன்னே, இன்னும் குருதி கொட்டுமுன்னே, இன்றே தோழா கிளர்ந்தெழு!

தகவல்: வாசகர் வட்டம்,
நெய்வேலி - வடலூர்

படிப்பகம்

www.padippakam.com

தேராய் பிராந்தியம். உத்திரப் பிரதேச மாநிலத்தின் கடைகோடி மேற்கு பகுதி. அறியாமை இருளில் மூழ்கடிக்கப் பட்டு அவமானமும் அடிமை வாழ்வுமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட கூலி ஏழை விவசாயிகளை அதிகமாகக் கொண்ட பகுதி. அந்த ஏழைகள் தங்கள் உதிரத்திலும் வேர்வையிலும் விளைந்த உழைப்பை பண்ணைகள் பகிரங்கமாக கொள்ளையிடுவதைக் கூட தங்கள் தலை விதி என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள். ஆனால், அதே பண்ணைகளால் தாங்கள் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்படுவதை, தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்படுவதை, தீட்டு பிடித்தவர்கள் (அருவறுப்பான அழுக்குகள்) என்று கொச்சையாக அசிங்கப் படுத்தப்படுவதை மௌனமாக ஏற்றுக் கொள்ளாத தன்மானமிக்கவர்கள். ஆனால், உழைப்பைச் சுரண்டிக்கொண்டு பிறப்பைக் கேலிபேசும் கொழுத்த பண்ணைகளின் தொந்தியை கிழித்துப்போட வழிதெரியாத அபலைகள்.

பண்ணைக்கு எதிரான ஆவேசத்தை அடிமனதில் வைத்துக் குதறிக்கொண்டு வாழ்ந்த அந்த தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகள் மதமாற்றத்தை தங்களது ஆவேசத்தை தீர்ப்பதற்கான வடிகாலாக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். இப்போது அவர்கள் மாறிய மதம் முஸ்லீம் அல்ல. சீக்கிய மதத்திற்கு திரள்திரளாக சென்று கொண்டிருக்கிறார்கள். இப்படி மதம் மாறும் தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகளால் அதற்கான தர்க்க ரீதியான காரணங்களை அடுக்க முடியவில்லை. அவர்களுக்குத் தேவையானது 'அறிவாளி' களுக்கு பிடித்தமான தர்க்க ரீதியான காரண காரியம் அல்ல. அவர்களுக்கு தேவையானது மனிதனுக்கு தேவையான சுய கௌரவம், தன் மானம். தங்களிடமிருந்து பறிக்கப் பட்ட இவை அனைத்தும் சீக்கிய மதத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் அவர்கள் இப்போது மதம் மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர் மதம் மாறிய நங்லஹாரேரு கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட கூலி ஏழை விவசாயி; 70 வயது முதியவர். முதுகொடியும் அளவுக்கு உழைப்பை மட்டுமல்ல, அவமானத்தையும் சேர்த்து சுமந்து குறுகிப் போன தேகமுடைய அந்த முதியவர் சொல்கிறார்:

''இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் அவர்கள் (இந்து - முஸ்லீம்கள்) எங்களை 'சர்தார்ஜி' என்றுதான் கூப்பிட்டாக வேண்டும். இனிமேல் 'சமார்' (தீண்டதகாதவன் - பறையன்) என்று எங்களை அழைக்க முடியாது'' குழந்தையாக மாறி உள்ளம் குதூகலிக்கும் அந்த முதியவரின் வார்த்தை கண்ணில் நீரை வரவழைக்கிறது! முள்ளால் சிறுகச் சிறுக குத்தப்பட்ட தன் இதயத்தை, தன்மானத்தை, சுய கௌரவத்தை மீட்டெடுத்துவிட்ட பூரிப்பு அவர் வார்த்தையில் தெரியவில்லையா? மனதின் அடி ஆழத்திலிருந்து பீறிட்டுவரும் இந்த தன்மானத்துக்காக மட்டும்தான் அவர் மதம் மாறினார். அங்கு அது அவர்களுக்கு கிடைக்கப் போவதில்லை என்பது யதார்த்தமானாலும், இதுநாள் வரையில் பண்ணைகளால் இந்துமத வெறியின் அருவருக்கத்தக்க சாதிய கட்டுமானத்தால், அவர்களுடைய பிறப்பு கீழ்த்தரமாக கொச்சைப்படுத்தப் பட்டு இருக்கிறது என்பதை இது வெளிப்படுத்தவில்லையா? மதம் மாறியவர்களைப் பொறுத்தவரை துவண்டு கிடந்த அவர்களுக்கு தற்செயலாக கிடைத்த கொழுக்கொம்புதான் சீக்கிய மதம்! மதம் என்ற முத்திரைக் குத்திக்கொண்டு அல்ல; தன்னை நேசிக்கும் ஜீவன் எதுவாக இருந்தாலும் அவர்கள் அதன்மேல் படர்ந்திருப்பார்கள் என்பதுதான் உண்மை!

மேலும், தான் மதம் மாறுவதற்கான ஆழமான மன சூழ்நிலைக்கு காரணமாக அமைந்த அனுபவத்தை நினைவு கூர்கிறார், அவர். ''படாகோன் என்பது எங்களது அண்டை கிராமம். அங்கு காய்கறி விற்கும் லட்சுமணன் சிங். பத்தாண்டுகளுக்கு முன் அவனும் என்னைப் போல் அரிஜன். பிறகு சீக்கியனாக மதம் மாறினான். அப்போது, அவனுடைய வாடிக்கையாளர் ஒருவர் அவனை அடித்துவிட்டார். உடனே அந்த கிராமத்திலிருந்த சீக்கியர் அனைவரும் ஒன்றுதிரண்டு, தங்களுடைய புது சகோதரனுக்காக வாதாடினார்கள். அடித்தவனிடம் நியாயம் கேட்டார்கள். அவர்களுடைய அந்த ஒற்றுமை, நேர்மை என் மனதில் அப்போது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இப்போது நான் சீக்கியனாக மதம் மாறியதற்கு அதுவும் ஒரு காரணம்!'' அறிவாளிகளுக்கு இது அசட்டுக் காரணமாக இருக்கலாம்! ஆனால் அறியாமையில் உழலும் தன்மானம் உள்ள எந்த மனிதனும் தன்னை நேசிக்கும் சுற்றத்தை அறிய இப்படித்தான் முயற்சிப்பான். அக்கிரமக்காரர்களால் மனித நியாயங்களுக்கு ஊறு நேரும்போது கொதித்தெழுந்து நிற்பவனை மட்டுமே தன்மானமுள்ளவன் நேசிப்பான். அந்த முதியவரும் இயற்கையாகவே அப்படித்தான் செயல்பட்டிருக்கிறார். ஆனால் இந்த மனித நேயமும், தன்மான உணர்ச்சியும் மத நம்பிக்கையின் அடிப்படையால் வருவன அல்ல என்பதை அவர் அறிந்திருக்க நியாயமில்லை.

இதோ, இம் முதியவருக்கு சற்றும் குறையாமல் அவமானத்தை சுமந்து வாழ்ந்த தலாத்ராம், தங்கள் கிராம சம்பவங்களையும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் கூறுகிறார். இப்போது இவர் பெயர் தலாத்சிங். ஆனால், இந்தமுறை அவர்களுக்கு ஏற்பட்ட அவமானங்கள் இந்து மத வெறியர்களால் ஏற்பட்டதல்ல. முஸ்லீம் மத வெறியர்களால் அவர்களுக்கு கிடைத்த பரிசு இது! ''4000 பேர் ஜனத்தொகையைக் கொண்ட எங்கள் கிராமத்தில் முஸ்லீம்களும் இந்துக்களும் இணைந்து வாழ்ந்தோம். கடந்த வருடம் ஜூலை மாதம் கிராம பஞ்சாயத்து தேர்தல். அதில், எங்கள் சாதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வேட்பாளருக்கும் முஸ்லீம் வேட்பாளருக்கும் இடையே கடுமையான போட்டி. கடைசியில் 6 ஓட்டு வித்தியாசத்தில் முஸ்லீம் வேட்பாளர் வென்றார். இம்முடிவு எங்களுடைய சேரி மக்களின் வாழ்க்கையையே சின்னபின்னப்படுத்தியது. குறைந்த ஓட்டு வித்தியாசத்தில் வென்ற முஸ்லீம் வேட்பாளர் பட்டாளம், எங்கள் சேரிக் குடிசைகள் அனைத்தையும் தீக்கிரையாக்கியது. துப்பாக்கி முனையில் எங்கள் அற்ப உடமைகள் அனைத்தும் சூறையாடப்பட்டது. எங்கள் மக்கள் அருகாமையில் உள்ள வயல்களில் பதுங்கி உயிர் தப்பித்தார்கள். விசாரணை செய்ய மூன்றரை மாதங்களுக்கு பிறகு அதிகாரிகள் வந்திறங்கினார்கள். ஆனால், எங்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை!''. ''கிராமத்தைப் பீடித்திருக்கும் அருவருப்பான அழுக்காகத்தான் கிராம மக்கள் (இந்து - முஸ்லீம்கள்) எங்களை பார்க்கிறார்கள். ஆள்பவர்களும், எங்களிடம் ஓட்டு வாங்கிச் செல்பவர்களும் எங்களுடைய கௌரவத்தை மீட்டு தருவார்கள்; இனிமேலும் நாங்கள் தீண்டத்தகாதவர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்குவார்கள் என்று நாங்கள் நம்பவில்லை. அவர்கள் எல்லோரும் எங்கள் முதுகில் குத்தும் துரோகிகள்'' என்று வெஞ்சினத்தோடு கூறுகிறார். மேலும் ''நாங்கள் இப்போது, குடிப்பதையும் புகைப்பதையும்




**தாழ்த்தப்பட்ட கூலி ஏழை இந்துக்கள் சீக்கிய மதத்துக்கு மாறுவதற்கான சடங்கு. மதமாற்றத்தால் அவமானமும் அடிமை வாழ்வும் நீங்குமா?**


படிப்பகம்

www.padippakam.com

கூட நிறுத்திவிட்டோம். நாங்கள் இப்போது எங்கள் தலைமுடியை நீளமாக வளர்க்கத் துவங்கியுள்ளோம். எங்களுடைய புதிய மதச் சின்னங்களை அணிந்து கொள்கிறோம். எங்கள் புதிய மதக் கோட்பாடுகளைக் கற்க முயற்சித்து வருகிறோம்'' என்று உள்ளப்பூரிப்புடன் கூறுகிறார்.

மதவெறிக்கு வேறுபட்ட முகம் என்பது ஏதும் இல்லை. அது இந்து மதவெறியாக இருந்தாலும்சரி, முஸ்லீம் மதவெறியாக இருந்தாலும் சரி; ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் அடக்கியொடுக்கத்தான் அது ஆளுவோரின் கையில் ஆயுதமாக எந்நாளும் பயன்படுகிறது. அரசியல், பொருளாதார ரீதியில் மக்களை ஒட்டச்சுரண்டிக் கொண்டிருக்கும் ஆளும்வர்க்கம், இதற்கு எதிராக மக்கள் அமைப்பு ரீதியில் திரண்டு எதிர்தாக்குதல் தொடுக்கும்போது அவர்களை பிளவுபடுத்தும் கூர்முனை ஆயுதமாகத்தான் மதவெறியை எப்போதும் பயன்படுத்தி வந்திருக்கிறது. இதற்கு சீக்கிய மதவெறியும் விதிவிலக்கல்ல. தற்போது பஞ்சாபில் தலைவிரித்தாடும் சீக்கிய மதவெறி பயங்கரவாதம் இதற்கு ரத்தசாட்சியாக விளங்குகின்றது. தற்போது, சீக்கிய மதத்திற்கு மதம்மாறிவரும் தெராய் பிராந்திய மக்களை சீக்கிய மத குருமார்கள் ஆரத்தழுவிக் கொள்வதும் ஆதரிப்பதும் தெளிந்த மனித நேயத்தின் வெளிப்பாடோ, குரு கோவிந்சிங்ஜி சன்னதிமுன் அனைவரும் சமம் என்ற சீக்கிய மதத்தின் உயர்ந்த கொள்கை கோட்பாட்டு நெறிகளின் வெளிப்பாடோ அல்ல. ஆகப் பெரும்பான்மையாக இருந்துகொண்டு ஆட்டம்போடும் இந்துமத வெறியர்களை, மேலும் தங்கள் மதத்திற்கு எதிராக உசுப்பிவிடவும் அதை உரமாகக் கொண்டு மேலும் தங்கள் மத வெறியர்களை பல்கிப் பெருக்கவும் உபயோகித்துக் கொள்ளும் துருப்பு சீட்டு இது.

இந்திரா கொலையின்போது காங்கிரசுக் குண்டர்களால் டில்லியில் பழிவாங்கப்பட்ட 5000க்கும் மேற்பட்ட சீக்கிய மக்களின் அநாதைக் குழந்தைகளும், விதவை தாய்மார்களும் இன்றளவும் கேட்பாரற்று டெல்லி நிவாரண முகாம்களில் மிருகங்களைவிடக் கேவலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் எவர் ஒருவரும் இந்துக்கள் அல்ல; அனைவரும் சீக்கியர்கள் தான். அவர்களின் மறுவாழ்வுக்காக பெரிய அளவில் எந்த ஒரு உதவியும் செய்யவில்லை; அவர்களின் இழிந்த நிலைமைகளுக்காக உருப்படியான எந்த ஒரு ஆவேசக் குரலும் எழுப்பவில்லை, சீக்கிய மத குருத்வாராக்களும் பிரபந்த கமிட்டிகளும். ஆனால் மதம் மாறும் இந்துக்களின் மீது திடீர் கரிசனம் கொண்டு நாடு முழுவதும் உள்ள குருத்வாராக்கள் தங்கள் நிதியை தெராய் பிராந்தியத்திற்கு அனுப்புகின்றன. மதம் மாறும் இந்துக்களுக்கு பொருளாதார சலுகைகளும், வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதைப் பற்றி நீண்ட திட்டங்கள் தீட்டுகின்றன. மதம் மாறும் இந்துக்களை யாராவது தடுத்து நிறுத்தினால் போராட்டங்கள் கிளம்பும் என்று வெடிக்கின்றன. தற்போது மதம் மாறும் ஆகப்பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகள் எந்த ஒரு பயனும் எதிர்பாராமல் மதம் மாறுவது உண்மைதான் என்றாலும், இவர்களையே தூண்டில் இரையாகக் கொண்டு மேலும் பல இந்துக்களை வலையில் இழுக்க திட்டமிட்டு முயலுகின்றன, சீக்கிய மதவெறி அமைப்புகள்.

மறுபுறம், மதம்மாறும் இந்துக்களை, இந்துமத வெறியர்கள் அரசு எந்திரத்தைக் கொண்டே பகிரங்கமாக மிரட்டுகிறார்கள். அரசின் பல்வேறு சமூகநலத் திட்டங்கள், பல்வேறு பிரிவுகளின் கீழ் வழங்கும் அரசின் தாழ்த்தப்பட்டோருக்கான மான்ய கடன்களை நிறுத்திவைக்குமாறு மேல்மட்ட அரசு அதிகாரிகள் கீழ்மட்டங்களுக்கு நேரடியாக உத்திரவு பிறப்பித்துள்ளனர். சீக்கியர்களாக மதம் மாறியவர், மீண்டும் மனம் திருந்தி இந்துக்களாக மதம்மாறினால், விகாஷ் யோஜனா திட்டத்தின் கீழ் உடனடியாக அவர்களுக்கு 6000 ரூபாய் கடன் வழங்கப்படும் என மாவட்ட அதிகாரிகள் நேரடியாகச் சென்று மக்களுக்கு வலைவிரிக்கின்றனர். ஆரிய சமாஜின் உள்ளூர் இந்துமத வெறி அமைப்பு கடந்த 26ம் தேதி நங்லஹாரேரு கிராமத்திற்கு கும்பலாகச் சென்று மக்களை மிரட்டியது. மதம் மாறிய சீக்கியர்கள், மீண்டும் இந்துவாக மதம்மாறினால், அவர்களுக்கு கையோடு சடங்கு சம்பிரதாயங்கள் செய்துமுடிக்க மூட்டை முடிச்சுகளுடன் சென்றது. ஒருவர்கூட கிடைக்காமல் வெறுங் கையுடன் திரும்பியது.

இதுநாள் வரையில், வெளி உலகுக்குத் தெரியாமல் நிசப்தமாக காரிருளில் வாழ்ந்துக் கொண்டிருந்த தெராய் பிராந்தியம் இப்போது மதவெறியர்களின் வேட்டைக்கான இடமாக அல்லோகலப்படுகிறது. பழைய குருத்துவாராக்கள் புதுப்பிக்கப்படுகின்றன. புதுப்புது குருத்துவாராக்கள் அவசர அவரமாக கட்டியெழுப்பப்படுகின்றன. இந்து மத வெறியர்களும் தங்கள் கோயில்களில் அடைந்திருக்கும் தூசுக்களைத் தட்டி அபிஷேகம், ஆராதனை, நாலுகால பூஜை என்று தங்கள் இறைவனுக்கு புது 'மேக்கப்' போடுகின்றனர்.

தமிழகத்தில் பல ஆண்டுகளுக்குமுன் நடந்த மீனாட்சிபுர மதமாற்றம், அதைத் தொடர்ந்து தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் நடந்த சமபந்தி போஜனங்கள், பல்வேறு பண்டாரங்களின் திருவீதி உலாக்கள், இந்துமத மகிமையின் காதுகிழிபடும் சொற்பொழிவுகள், முஸ்லீம் மத வெறியர்களின் எதிர்நடவடிக்கைகள் - என்று தமிழகமே அதிர்ச்சிதரும் பரப்பரப்பில் ஆழ்த்தப்பட்டது. இப்போது, உ.பி. மாநிலம் தெராய் பிராந்தியத்தில் முஸ்லீம்கள் இடத்தை சீக்கிய மதவெறியர்கள் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சொல்லிக் கொள்ளப்படும் மதச் சார்பற்ற இந்திய சோசலிச குடியரசின் கோரமுகம், இம்மாதிரியான மத மாற்றங்களின் போது அங்குலம் அங்குலமாக கிழிபட்டு சிரிப்பாய் சிரிக்கிறது. ஆளும் பாசிச ராஜீவ் கும்பலின் அருகதையும், பல்வேறு மாநிலங்களை ஆளும் அனைத்து ஓட்டு அரசியல் கட்சிகளின் யோக்கியதையும் கேலிக்குரிய முறையில் சரஞ்சரமாக வெளியில் வந்து தொங்குகிறது. தாழ்த்தப்பட்டவர்களை தலைநிமிர வைத்துவிட்டதாக அவர்கள் ஓய்வு ஒழிச்சலின்றி பறையடிக்கும் பம்மாத்துக்களும் பரிதாபகரமான முறையில் பல்லிளித்துக் கொண்டு நிற்கின்றன.

மதம் ஒரு அபின்! இருப்பினும் மதம் மாறும் உரிமை ஒரு ஜனநாயக உரிமையே! இந்த அடிப்படையில் நாம் மதம் மாறும் அடிப்படை உரிமையை அங்கீகரிப்போம்! இந்துமத வெறி தலைக்கேறி, அரசு எந்திரத்தின் மூலம் அவர்களை மடக்கிப் பிடிக்கும் அரசின் மதவெறி கோர முகத்தை கிழித்தெறிவோம். கூடவே, மதம் மாறுவதால் எந்த விதத்திலும் மக்களின் மீது பெருஞ்சுமையாய் அமுந்தி நிற்கும் அடிமை வாழ்வும் அவமானச் சின்னங்களும் அழிந்துவிடாது என்பதை மதம் மாறும் கூலி ஏழைகளுக்கு புரிய வைப்போம். மக்களின் வாழ்வை மூர்க்கமாக பின்னுக்கு இழுக்கும், நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தை உடைத்தெறியும் போது மட்டுமே, அதன் உடன் விளைவாய் பிறந்த கீழ்த்தரமான சாதிய தளைகளை அறுத்தெறிய முடியும் என்பதை உணர வைப்போம்!

◆ பச்சையப்பன்



நேற்று, இவர்கள் இந்து மதத்தின் தீண்டத்தகாத தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகள். இன்று, சீக்கிய மதத்தைத் தழுவிய ''சர்தார்ஜி''கள்!


படிப்பகம்

www.padippakam.com

# சுரங்கத் தொழிலாளர் வெளியேற்றம்! இயந்திரமயம் அரங்கேற்றம்!

கரிய மேனி; கரடு முரடான முகம்; முறுக்கேறிய தோள்கள்; ஆனால் மின்னிடும் கண்கள். அவர்கள் சுரங்கத் தொழிலாளர்கள். தல்லி-ராஜ்கரா சுரங்கத்தின் அருகே அவர்கள் — 7000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தம் குடும்பத்தினருடன் திரண்டு கடந்த மே 3ந் தேதியன்று சாலை மறியல் போராட்டத்தில் குதித்தனர். சுரங்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த நவீன எந்திரங்களும் வாகனங்களும் முன்னேற முடியாமல் வந்த வழியே திரும்பின. "நவீனமயமாக்கலை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்" என்னும் தொழிலாளர்களின் முழக்கம் விண்ணில் எதிரொலித்தது.

மத்தியப்பிரதேசம் துர்க் மாவட்டத்திலுள்ள சட்டிஸ்கார் பிராந்தியத்திலிருந்துதான் பிலாய் இரும்பு எஃகு ஆலைக்குத் தேவையான இரும்புத் தாது வெட்டியெடுக்கப்படுகிறது. வெளி உலகுக்கு அதிகமாகத் தெரியாத பின்தங்கிய இப்பகுதிதான் இன்று போர்க்களமாக மின்னுகிறது. பிலாய் இரும்பு எஃகு ஆலையின் உற்பத்தியை விரிவாக்கப் போகிறோம் என்று கூறிக் கொண்டு



ராஜ்கரா சுரங்கத்தில் புகுத்தப்படும் நவீன தானியங்கி எந்திரம்: 7000 தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்படுவர்!

சுரங்கத்தை எந்திரமயமாக்கும் முயற்சியில் நிர்வாகம் இறங்கியது. இதற்காக "பீக்கே கட்டுமான கம்பெனி" என்ற நிறுவனத்தை ஒப்பந்தத்திற்கு நியமித்தது. சுரங்கத்தை எந்திரமயமாக்குவதன் விளைவாக 7000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டு வீதியில் வீசியெறியப்படுவர். தமது வாழ்வையே சூறையாடும் இந்த அயோக்கியத்தனத்தை எதிர்த்து, சங்கர் குகா நியோகி தலைமையின் கீழான சட்டிஸ்கார் சுரங்கத் தொழிலாளர் சங்க (CMSS)த்தில் ஆகப் பெரும்பான்மையாகத் திரண்டுள்ள தொழிலாளர்கள் கடந்த மே முதலாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தல்லி சுரங்கத்தில் ஆண் தொழிலாளர்கள் தாதுப் பொருளை வெட்டி எடுக்கின்றனர். பெண் தொழிலாளர்கள் அவற்றைக் கூடையில் சுமந்து வந்து ஓரிடத்தில் கொட்டுகின்றனர். பின்னர் அங்கிருந்து கன்வேயர் பெல்ட்டுகள் மூலமும், நிர்வாகத்தின் ரயில் மூலமும் சுத்தரிக்கக் கொண்டு செல்லப்படுகிறது. "இயந்திர மயமாக்கலின் மூலம் 7000க்கும் மேற்பட்ட சுரங்கத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்படுவார்கள். இயந்திர மயமாக்கலை ஏற்பது தற்கொலைக்கு ஒப்பானது" என்று குமுறுகிறார் போராட்ட சங்கத் தலைவர் நியோகி.

"பிலாய் ஆலையில் ஆண்டுக்கு 40 லட்சம் டன் இரும்பு எஃகு உற்பத்தியாகிறது. 10 லட்சம் டன் எஃகைத் தயாரிக்க குறைந்தது 17 லட்சம் டன் இரும்புத்தாது தேவை. தற்போது உற்பத்தியைப் பெருக்க திட்டமிட்டுள்ளதால் குறைந்தபட்சம் 70 லட்சம் டன் இரும்புத்தாது தேவைப்படுகிறது. ஆனால் தற்பாதைய மனித உழைப்பின் மூலம் ஆண்டுக்கு 50 லட்சம் டன் தாது மட்டுமே கிடைக்கிறது. மனித உழைப்பின் மூலம் தேவையை இட்டு நிரப்ப முடியாது என்பதால்தான் இயந்திரமயமாக்க முடிவு செய்துள்ளோம்" என்று நியாய வாதங்களை அடுக்குகிறது நிர்வாகம்.

"தல்லி சுரங்கம் தற்போது அரை இயந்திர மயமாக்கப்பட்ட நிலையில், பிரதானமாக மனித உழைப்பைச் சார்ந்து இயங்குகிறது. முழுமையான இயந்திர மயமாக்காமலேயே குறைந்த செலவில், தரமான இரும்புத்தாது தேவைக்கேற்ப தற்போது மனித உழைப்பின் மூலம் ஈடுசெய்யப்படுகிறது. சுரங்க விரிவாக்கத்தை கூடுதல் மனித சக்தியின் மூலம் ஈடுகட்ட முடியும்" என்று அறுதியிடுகிறார் நியோகி.

ஆனால் கூடுதலாக மனித சக்தியை ஈடுபடுத்த நிர்வாகம் மறுக்கிறது. ஏனெனில் "ஆபத்தான சுரங்கப் பணிகளில் ஏற்கனவே மனித உயர் இழப்பும், விபத்துக்களும், நோய்களும் அதிகரித்துள்ளன. இந்நிலையில் கூடுதல் மனித சக்தியைப் புகுத்துவது மிகவும் ஆபத்தானது" என்கிறது நிர்வாகம்.

"தொழிலாளர் நலனில் திடீர் கரிசனை வந்து நிர்வாகம் முதலைக் கண்ணீர் வடிக்கிறது. உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்ய நிர்வாகம் மறுத்ததால் தான் இந்நிலை ஏற்பட்டது. உரிய பாதுகாப்புச் சாதனங்களைக் கொண்டு மனித சக்தியின் ஆற்றலைக் கொண்டே விரிவாக்கப் பணிகளைச் செய்ய முடியும். ஆனால் நிர்வாகத்துக்கு தொழிலாளர் நலனைவிட ராஜீவின் நவீனமயக் கொள்கையின் மீதுதான் அக்கறை!" என்று பதிலடி கொடுக்கிறார் நியோகி.

நிர்வாகத்துக்கும் ஆகப் பெரும்பான்மையான தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டிஸ்கார் சுரங்கத் தொழிலாளர் சங்கத்துக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகள் முறிந்த நிலையில், டிசம்பர் 1988ல் பிலாய் நிர்வாகம் இயந்திர மயமாக்கும் தனது திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியது. இதற்கென பீக்கே கட்டுமான கம்பெனியை பல கோடி ரூபாய்க்கு ஒப்பந்த அடிப்படையில் நியமித்தும், தல்லி பகுதியில் "கோண்ட்-பி" சுரங்கத்தின் அருகே குடியிருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களை நிர்ப்பந்தமாக வெளியேற்றவும் முயற்சித்தது. குடியிருப்பு பகுதி பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாலும் இச்சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் தாது பயனற்றதாக இருப்பதாலும் தொழிலாளர்களை வெளியேற்றுவது அவசியமாக உள்ளது என்று நிர்வாகம் தனது செயலை நியாயப்படுத்தவும் செய்தது.

தமது வாழ்வையே அச்சுறுத்தும் இந்நடவடிக்கைகளுக்கு எதிராக பல வடிவங்களில் தொடர்ந்து போராடிய தொழிலாளர்கள், இறுதிக் கட்டமாக வேலை நிறுத்தத்தில் இறங்கினர். தல்லி-ராஜ்கரா சுரங்கப் பகுதியில் பாறைகளில் மோதி ஒலிக்கும் கட்டாரியின் ஓசை இப்போது கேட்பதில்லை. தாதுப் பொருளை சுமந்து செல்லும் லாரிகள், ரயில்களின் பேரிரைச்சல் இப்போது அங்கே கேட்பதில்லை. பீக்கே கட்டுமான கம்பெனியின் நவீன தானியங்கி எந்திரங்கள் தொழிலாளர்களால் வழிமறிக்கப்பட்டு முன்னேற முடியாமல் முடங்கிக் கிடந்தன.

உடனே அந்த கம்பெனி கோர்ட் மூலம் அவசர உத்திரவைப் பெற்று போலீஸ் துணையுடன், முன்னேறத் தொடங்கியது. போராடும் தொழிலாளர்கள் மீண்டும் மறியல் போரில் குதித்தனர். இந்நேரத்தில் கருங்காலிகள் தமது கைவரிசையைக் காட்டத்

படிப்பகம்


www.padippakam.com

தொடங்கினர். போராட்டம் என்றால் அங்கே வீரமும் தியாகமும் ததும்பி நிற்கும். கூடவே கருங்காலிகளின் துரோகமும் இருக்கும். துரோகத்தையே தொழிலாகக் கொண்ட ஆளும் கட்சிகளின் மஞ்சள் தொழிற்சங்கங்களுக்கு போட்டியாக இப்போது போலிக் கம்யூனிஸ்டுகள் கருங்காலிகளாக மாறி சுரங்கத் தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தை எதிர்க்கத் தொடங்கி விட்டனர்.

அஞ்சல்-தந்தி துறையில் மத்திய அரசு திணிக்கும் நவீனமயத்தை எதிர்த்து கூப்பாடு போடும் வலதுகளின் ஏ.ஐ.டி.யு.சி. சங்கம் சட்டிஸ்கார் பிராந்திய சுரங்கங்களில் நவீனமயத்தை ஆதரித்து நிர்வாகத்தின் கைக்கூலியாக மாறியது. கையளவேயான கருங்காலிகளைக் கொண்டு இச்சங்கம், பீக்கே நிறுவனத்தின் நவீன எந்திரங்களுக்கு அரணாக நின்று கொண்டு போலீசின் துணையோடு சுரங்கத்தை நோக்கி முன்னேறத் தொடங்கியது. ஆனால் ஆகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் மறியல் போராட்டத்தில் உறுதியாக நின்றதால் ஆத்திரமடைந்த ஏ.ஐ.டி.யு.சி. குண்டர்கள் போராடும் தொழிலாளர்கள் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.



சங்கர் குகா நியோகி



ராஜ்கரா சுரங்கத் தொழிலாளர்களின் சுயநிதியில் இயங்கும் மருத்துவமனை. தொழிலாளர், நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள்.

மே 3ந் தேதியன்று நேம்தார் என்ற சுரங்கத் தொழிலாளியின் வீட்டைச் சூழ்ந்து கொண்டு ஏ.ஐ.டி.யு.சி குண்டர்கள் தாக்கினர். காரணம் அவர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சட்டிஸ்கார் சங்கத்தினர் செயல்வீரர். இரு நாட்கள் கழித்து சுஜ்னோ யாதவ் என்ற இன்னொரு தொழிலாளி, தனது குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது வழிமறித்து தாக்கப்பட்டார். "நீ ஏன் வேலைக்குப் போகவில்லை?" என்று மிரட்டி நிர்ப்பந்தமாக ஏ.ஐ.டி.யு.சி. குண்டர்கள் அவரை வேலைக்கு இழுத்துச் சென்றனர்.

இவை ஓரிரு உதாரணங்கள்தான். ஆனால் தொடர்ந்து அவ்வப்போது இது போன்ற தாக்குதலும் அச்சுறுத்தலும் தொடர்கிறது. துரோகிகளான ஏ.ஐ.டி.யு.சி குண்டர்களை வைத்து போராடும் தொழிலாளர்களைத் தாக்குவது, பிறகு மோதலைக் காரணம் காட்டி, சட்டம்-ஒழுங்கைக் காக்க போலீசைக் கொண்டு அடக்குவது என்கிற நிர்வாகத்தின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட சட்டிஸ்கார் சங்கத்தினர், கருங்காலிகளின் ஆத்திரமூட்டலுக்கு பலியாகாமல் எச்சரிக்கையுடன் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

"கருங்காலி ஏ.ஐ.டி.யு.சி சங்கத்துக்கு இப்பகுதியில் ஆட்களே கிடையாது. எனவே அவர்கள் வெளியிலிருந்து அடியாட்களைக் கொண்டு வந்து எம்மைத் தாக்குகின்றனர். தொழிலாளர்களின் நலனை விட தமது பொறுக்கித்தனத்தின் மூலம் நிர்வாகத்திடம் சங்க அங்கீகாரம் பெறுவதே அவர்களது லட்சியமாக உள்ளது" என்று போராடும் தொழிலாளர்கள் துரோகிகளைச் சாடுகின்றனர்.

தொழிலாளர்கள் பெருமளவில் திரண்டுள்ள சட்டிஸ்கார் சங்கம், தொழிலாளிகளின் இரத்தத்திற்கு கூடுதல் விலை கேட்டு பேரம் பேசும் பிழைப்புவாத சங்கமல்ல. கடந்த 12 ஆண்டுகளாக தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், வாழ்வுக்காகவும் சமரசமின்றி போராடி அப்பகுதிவாழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழும் அமைப்பு. தொழிலாளர்களின் சந்தா பணத்தைச் சுறையாடுவதையே தொழிலாகக் கொண்ட தொழிற்சங்க சுல்தான்கள் பெருகிவிட்ட இந்நாளில், தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டும், தொழிலாளர்களின் நன்கொடையைக் கொண்டும், "தியாகிகள் மருத்துவமனை"யை சட்டிஸ்கார் சங்கம் நிறுவியுள்ளது. தொழிலாளர்களை குடிபோதையிலிருந்து மீட்டு நல்வழிப் படுத்தியுள்ளது. இன்று இப்பகுதியில் சாராயக் கடைகளையே காண முடியாதபடி சாதனை புரிந்துள்ளது. தொழிலாளர்களிடம் கூட்டுத்துவ - சகோதரத்துவ மனப்பான்மையை இச்சங்கம் ஆழமாக வேரூன்றியதன் பயனாக, இன்று தொழிலாளர் குடும்பங்கள் கூட்டாக சமைத்து, கூட்டாக உண்பதை வழமையாக்கிக் கொண்டுள்ளன.

தொழிலாளர்கள் தவிர, பின்தங்கிய இப்பகுதியில் ஒட்டச் சுரண்டப்படும் ஆதிவாசி மக்களின் நலனுக்கென "சட்டிஸ்கார் முக்தி மோர்ச்சா" என்ற அமைப்பையும் நிறுவி தலைமையேற்று வழிநடத்துகிறார், நியோகி. ஆதிவாசி மக்களின் மீதான அடக்குமுறை சுரண்டலுக்கெதிராக விடாப்பிடியாகப் போராடிவரும் இந்த அமைப்பு, அவர்களின் கைவினைப் பொருட்களுக்கான கூட்டுறவு சங்கங்களை நிறுவி அவர்களின் நல்வாழ்வுக்காகவும் பாடுபட்டு வருகிறது.

"அவர்கள் எங்கள் ஆறுகளையும், காடுகளையும் எங்களிடமிருந்து அன்று பறித்துக் கொண்டனர். இன்று எங்கள் நிலத்தையும் கனிச்செல்வத்தையும் பறித்து எங்கள் பூமியிலிருந்து எங்களை விரட்டப் பார்க்கிறார்கள். எங்கள் உயிரே போனாலும் இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று உணர்ச்சி பொங்க போராடும் தொழிலாளர்கள் முழங்குகின்றனர். தமது பகுதிக்கு வரும் வாகனங்களைச் சோதிப்பது, அன்னியர்கள் யாரேனும் தென்பட்டால் அவர்களை விசாரிப்பது, தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளுக்கிடையே தகவல் தொடர்பு வலைப்பின்னலை கட்டியமைத்து எச்சரிக்கை மணியை ஒலிப்பது என்று உணர்வு பூர்வமாக தொழிலாளர்கள் விடாப்பிடியாகப் போராடி வருகின்றனர்.

'சொந்த நாட்டு மக்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? எனது மாமனார் நாட்டைப்போல இந்தியாவை மாற்றுவதே எனது குறிக்கோள்!' என்று போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு இயந்திர மயமாக்கலை நிர்ப்பந்தமாக திணிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். ஒரிசாவின் பாலியபால், தமிழகத்தின் கூடங்குளம், இப்போது தல்லி-ராஜ்கரா என்று அடுத்தடுத்து, தமது இரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி பாடுபட்ட அவர்களது சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்க எத்தனிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். பாலியபால் மக்களைப் போலவே தல்லி-ராஜ்கரா சுரங்கத் தொழிலாளர்களும் தமது உறுதிமிக்க விடாப்பிடியான போராட்டத்தின் மூலம் பாசிச கும்பலின் பகற்கனவை நிச்சயம் சுட்டெரிப்பார்கள்.

மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com



# டெல்லி மருத்துவர்கள் போராட்டம்! ஓட்டுக் கட்சி சார்பு தலைமையின் ஊசலாட்டம்!

டெல்லி தலைநகரில் கடந்த மே மாதம் 16ந் தேதி ஆரம்பித்த அரசு இளநிலை மருத்துவர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் ஜூன் 20ந் தேதி வரை தொடர்கிறது. மேலும், இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஜூன் 19ந் தேதி டில்லி டாக்டர்கள் சங்க கூட்டு நடவடிக்கை (JACSDO) அமைப்பைச் சேர்ந்த 7,000 மருத்துவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். துவக்க சம்பள விகிதத்தை உயர்த்துவது, பணி வயது நீட்டிப்பு, சம்பள உயர்வு இன்னும் பல பொருளாதார சலுகைகள் கோரி இவர்களது போராட்டம் தொடர்கிறது. ஒரு மாதம் ஆகியும் இவர்களது கோரிக்கைகளை பரிசீலிக்காமல் இழுத்தடிப்பு செய்கிறது மத்திய அரசு. போராட்டத்தை சிதறடிக்க ஒருபுறம், இலக்கற்ற பேச்சுவார்த்தைக்கு கதைத்துக் கொண்டிருக்கும் மைய அரசு மறுபுறம், போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு பகிரங்கமாக ஒடுக்குகிறது. ராணுவத்திலிருந்து ஆயிரக்கணக்கான மருத்துவர்களை இழுத்து வந்து வேலை நிறுத்தத்தை உடைக்கிறது. பெண்கள் என்றும் பாராமல், போராட்டத்தில் ஈடுபடும் 3,500க்கும் மேற்பட்ட இளநிலை பயிற்சி மருத்துவர்களை கல்லூரி விடுதிகளிலிருந்து துரத்தியடிக்கிறது. அனைத்துக்கும் மேலாக ஜூன் 20ந் தேதி ஒட்டுமொத்தமாக 3,500 டாக்டர்களை பணி நீக்கம் செய்தது. இதற்கெதிராக போராடும் மருத்துவர்கள் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

டெல்லி மருத்துவர்களின் தற்போதைய போராட்டம், புதிய கோரிக்கைகளுக்கான வேலை நிறுத்தமோ முன்கூட்டியே அறிவிக்கப்படாத தடலடியான போராட்டமோ அல்ல. மூன்றாண்டுகளுக்கு முன் '86ம் ஆண்டில் இவர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தின் போது, மத்திய அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் கூட இதுநாள் வரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதே அவர்களுடைய தற்போதைய கொதிப்பிற்கு முக்கிய காரணம். சாதாரணமாக மைய அரசின் பிற துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு மற்றும் மற்றவர்களுக்கு நிறைவேற்றப்பட்ட நான்காவது சம்பள கமிஷனின் பரிந்துரைகள் ஆகிய எந்த ஒரு சம்பள உயர்வும் அரசு டாக்டர்களுக்கு முழுமையாக வழங்கப்படவில்லை.

மனு கொடுப்பது, பேரணி நடத்துவது, ஆர்ப்பாட்டம், கருப்பு சட்டை அணிவது, ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் என தொடர்ச்சியாக அரசின் கவனத்தை ஈர்க்க முயற்சித்தனர். டாக்டர்களின் இத்தகைய போராட்டங்களுக்கு சிறிதும் செவிசாய்க்காமல், முற்றிலுமாக அவர்களை உதாசீனம் செய்தது, மத்திய அரசு. போராடும் டாக்டர்கள் வேறு வழியில்லாமல் தற்போது தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் இறங்கியவுடன் அவர்கள் மீது அவதூறு சேற்றை வாரியிறைக்கும் பணியில் மூர்க்கமாக இறங்கியுள்ளது மைய அரசு. பாசிச ராஜீவ் கும்பலின் எடுபிடி பத்திரிகைகளும் உடன் சேர்ந்து கொண்டு டெல்லி அரசு மருத்துவமனைகள் செயலிழந்துவிட்டதாக முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. ஆனால், ஆபத்தான நோயாளிகளுக்கும், வெளி நோயாளிகளுக்கும் போராடும் டாக்டர்கள் நடைபாதைகளில் வைத்தியம் பார்த்ததை திட்டமிட்டு மறைக்கின்றன.

நோயாளிகளின் மீது திடீர் கரிசனம் கொண்ட அரசு நிலைமைகளை சீர்செய்வதற்கு, போராடும் டாக்டர்களின் கோரிக்கைகளை தீர்ப்பதற்கு முன்வரவில்லை. மாறாக நரித்தனமாக வேலைகளில் அடுத்தடுத்து இறங்குகின்றது. வெளியிலிருந்து 500க்கும் மேற்பட்ட மருத்துவர்களை புதிதாக வேலைக்கு அமர்த்தியது. பயிற்சி மருத்துவர்களை - மேல்படிப்பு படித்துக் கொண்டு அதே கல்லூரியில் பகுதி நேரமாக தொழில் புரியும் டாக்டர்களை - வேலையிலிருந்து நீக்கும்படி அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கும் உத்திரவு பிறப்பித்தது. பலகாலமாக இருந்த இந்த நடைமுறையை மாற்றி அந்த இடங்களுக்கு தேவையான மருத்துவர்களை பொது தேர்வாணை மூலம் தேர்ந்தெடுக்குமாறு புது உத்திரவு பிறப்பித்துள்ளது.

போராடும் மருத்துவர்களின் கோரிக்கைகளான துவக்க சம்பள விகிதத்தை உயர்த்துவது, பணி உயர்வை மூன்று கால கட்டங்களாக பிரித்து முறைப்படுத்துவது, பணிக் காலத்தை நீட்டிப்பது, முழு தேர்ச்சிக்குரிய டாக்டர்களுக்கு சிறப்பு கூடுதல் சம்பள விகிதத்தை உயர்த்துவது, வெளியில் பணி செய்ய தடை விதித்திருப்பதற்கு மற்ற மாநிலங்கள் தரும் ஈட்டுத் தொகைக்கு ஏற்ப உயர்த்துவது, துறை சிறப்பு மருத்துவர்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு இணையான சம்பள உயர்வு அளிப்பது ஆகிய கோரிக்கைகள் அரசு ஏற்கனவே ஒப்பந்தத்திலும், கொள்கை ரீதியிலும் ஏற்று கொண்டவைகள் தான்! இருந்தும், இக்கோரிக்கைகளை பல ஆண்டுகளாக நிறைவேற்றாமல் இழுத்தடிக்கிறது பாசிச ராஜீவ் அரசு. தடைகளை மீறி உறுதியுடன் போராடிய டாக்டர்கள், வேலைநீக்க உத்திரவை மருத்துவமனை வாயில்களில் போட்டு கொளுத்தினர். இவர்களுக்கு ஆதரவாக திரண்ட டெல்லி வக்கீல் சங்கம், போலீசின் மீது போராடும் டாக்டர்களுக்கு சார்பாக வழக்கு தொடுத்து தனது நேசக்கரத்தை நீட்டியது. போராடும் டாக்டர்கள் போராட்டத்தினூடே தொடர்ச்சியாக நோயாளிகளுக்கு மருத்துவம் பார்க்க தங்கள் சங்கத்தின் சார்பாக பெருமளவு நிதி திரட்டிக் கொடுத்து உதவினார்கள்.

போராடும் டாக்டர்கள், நேச சக்திகளின் உதவிகளுடன் விடாப்பிடியாக தங்கள் போராட்டத்தில் ஊன்றி நின்றபோது, சங்கத் தலைமையின் ஒரு பிரிவு போராட்டத்தை திடீரென வாபஸ் பெற்றது. ஆகஸ்ட் 15க்கு போராட்டத்தை தள்ளி வைப்பதாக அறிவித்தது. மறுபுறம், போராட்டத்தில் தொடர்ச்சியாக ஊன்றி நிற்கப் போராடிய, போராட்ட பிரதிநிதிகளின் எதிர்ப்பு குரல், அரசாலும் அதன் எடுபிடி பத்திரிகைகளாலும் திட்டமிட்டு மறைக்கப்பட்டன.

போராட்ட காலத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட மருத்துவர்களை மீண்டும் பணி அமர்த்துவது, விடுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்றியதை வாபஸ் பெறுவது - ஆகிய இரு நிபந்தனைகளின் பேரில் போராட்டத்தை தள்ளி வைப்பதாக சங்கத் தலைமை அறிவித்தது. மத்திய சுகாதார அமைச்சர் ராம்நிவாஸ் மித்ரா மற்றும் அத்

படிப்பகம்

www.padippakam.com

துறை தலைமைச் செயலர்களின் பேச்சு வார்த்தை அழைப்பில் கலந்து கொள்வதற்காகவும், அப்பேச்சு வார்த்தையில் நல்ல முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் இம்முடிவை எடுத்திருப்பதாக சங்கத்தலைமை அறிவித்தது.

86 - 87 ஆம் ஆண்டு போராட்டங்களின் போதும் இதே கருத்தைக் கூறித்தான் தற்போதைய போராட்ட சங்க தலைமை, பலனேதும் இல்லாமல் போராட்டத்தை வாபஸ் பெற்றது. அதன்பிறகு பல ஆண்டுகளாக நடந்த பேச்சுவார்த்தைகளில் எந்த பலனும் கிடைக்கவில்லை என்பதால்தான் தற்போதைய போராட்டம் துவக்கப்பட்டது. கடந்தகால போராட்டங்களிலிருந்து எந்த ஒரு படிப்பினைகளையும் கற்க மறுக்கும் இச்சங்கத்தலைமை பல ஓட்டுக் கட்சிகளின் தலைமையால் இயக்கப்படும் பிரதிநிதிகளை உள்ளடக்கியது என்பதே அதன் முடிவற்ற ஊசலாட்டத்திற்கு முக்கிய காரணம்.

பல்வேறு, ஓட்டுக் கட்சிகளின் தலைமையினால் இயக்கப்படும் பல்வேறு தொழிலாளர்கள் போராட்டங்கள், எந்த ஒரு முடிவும் இல்லாமல் நட்டாற்றில் விடுவது போன்றே டெல்லி டாக்டர்களின் போராட்டமும், பல ஆண்டுகளாக தொடர்ந்து நட்டாற்றில் விடப்படுகிறது. அவர்களது நீடித்த உறுதிமிக்க போராட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து விழலுக்கு இறைந்த நீராக போய்க் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, போராட்டங்களுக்குப் பிறகு போராட்டத்தில் முன்னணியில் நின்ற உறுதிமிக்க டாக்டர்கள் அரசால் பழிவாங்கப்படுவதும், பணி உயர்வு மறுக்கப்படுவதும் தொடர்கதையாகி விடுகிறது.

சமுதாயத்தின் மிக முன்னேறிய ஆக்க சக்தி படைத்தவர்களும், தெளிந்த விஞ்ஞான அறிவால் புடம் போடப்பட்டவர்களும், மனித குலத்தின் ஒப்புயர்வற்ற சேவகர்களுமான மருத்துவர்கள், தங்களது போராட்டப் படிப்பினைகளையும் ஊசலாட்ட சங்கத்தலைமையின் வர்க்கத்தன்மையையும் உணராதது வேடிக்கையானது மட்டுமல்ல, விபரீதமானதும்கூட. பலனேதும் இல்லாத போராட்டங்களை வழமையாகக் கொள்வதும், கொள்கை உறுதியற்ற சங்க தலைமையை உதறியெறிய மறுப்பதும் மீள முடியாத நெருக்கடியில் தள்ளிவிடும் என்பதை அவர்கள் உடனடியாக உணர வேண்டும். தங்களது நியாயமான கோரிக்கைகளை வென்றடைய, போராட்டத்தில் ஊன்றி நிற்கும் கொள்கை உறுதிமிக்க, புதிய போராட்ட சங்கத் தலைமையை உடனடியாக கட்டியமைக்க வேண்டும். கட்டியமைக்கப்படும் சங்கத்தலைமை ஓட்டுக் கட்சித் தலைவர்களின் வெற்று வாக்குறுதிகளை சார்ந்து நில்லாமல், பல பிரிவு போராடும் உழைப்பாளி மக்களுடன் சார்ந்து நின்று போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்கு முதற்படியாக மருத்துவத்தை வியாபாரமாக பாவிப்பதை விட்டொழித்து மக்களுக்கு சேவை செய்யும் தொழிலாக மாற்ற முன்வரவேண்டும். அப்போதுதான், மருத்துவர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதோடு, போராட்டத்திற்கு ஆதரவும் பெருகும்.

○ மணி.



## 'அன்னை' இந்திராவுக்கு இன்னுமொரு விசுவாசி!

இதோ, ராஜீவுடன் சேர்ந்து பக்தி சிரத்தையுடன் பாசிச இந்திராவின் திருவுருவப் படத்தைத் தொழுவது யார் என்று தெரிகிறதா? இல்லையெனில், இந்திரா படத்தைத் திறந்து வைத்து அவர் பேசியதிலிருந்து சுருக்கமாக கொஞ்சம் தருகிறோம். ஊகிக்க முடிகிறதா என்று பாருங்கள்.

''நான் லண்டனில் படிக்கும்போதே அவரை அறிவேன். அவருடன் நான் கொண்ட நட்பு எமது அரசியல் வேறுபாடுகளுக்கு ஊறுவிளைவித்ததில்லை. இதர அரசியல்வாதிகளுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு அவர் மிக உயர்வான தைரியமான அரசியல்வாதி. தனது திறமையால் அவர் உயர்ந்தார். உள்நாட்டுக் கொள்கையில் நாங்கள் அவரை எதிர்த்தாலும், அவரது வெளிநாட்டுக் கொள்கையை நாங்கள் ஆதரித்தோம். அவர் கூட்டுச் சேராக் கொள்கையை ஆதரித்து உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்தினார். அவர் சுடப்பட்ட செய்தியைக் கேட்டு நான் துடிதுடித்துப் போனேன். உடனே டெல்லிக்குப் பறந்து, எனது இறுதி அஞ்சலியை செலுத்தினேன்'' என்று அவர் நெகிழ்ந்து போய் இந்திராவுக்கு புகழ் பாடினார்.

எதிர்க்கட்சியிலிருந்து காங்கிரசுக்கு கட்சி மாறி, பதவிக்கு ஏங்கும் பழம் பெருச்சாளி இப்படி துதிபாடுகிறது என்றுதானே நினைக்கிறீர்கள்? உங்கள் கணிப்பு தவறு! இவர் 'வங்கத்து சிங்கம்!' இந்திராவின் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராடிய 'அடலேறு!' மே. வங்க போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசுதான் இவர்!

கடந்த ஜூன் 16ந் தேதியன்று கல்கத்தாவில், கவர்னர் மாளிகையிலுள்ள அசோக மண்டபத்தில் ஆளுயர பாசிச இந்திராவின் ஓவியத்தைத் திறந்து வைத்து நடந்த விழாவில்தான் ஜோதிபாசு இப்படி மனமுருகி இந்திராவின் புகழ் பாடினார். அவரது விசுவாசத்தைக் கண்டு மெய்சிலிர்த்துப் போன ராஜீவ், ''நாட்டுக்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து இந்திராவை 'இடது சாரிகள்' ஆதரித்தனர். அதேபோல இன்று நாட்டுக்கு அபாயமாக உள்ள வகுப்புவாத சக்திகளை முறியடிக்க காங்கிரசுடன் இணைந்து, 'இடது சாரிகள்' போராட முன்வரவேண்டும்'' என்று கொக்கி போட்டார்.

அரசியலில் நிரந்த எதிரியுமில்லை; நிரந்தர நண்பனுமில்லை என்பது ஓட்டுப் பொறுக்கிகளின் கோட்பாடு. செத்தவனை எல்லாம் விமர்சிக்காமல் தெய்வமாக மதிக்க வேண்டும் என்பது இந்து மதக் கோட்பாடு. இரண்டையும் தமது சந்தர்ப்பவாத அரசியலுக்கேற்ப கலந்து கக்குகிறார் ஜோதிபாசு. போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலுள்ள புரட்சிகர அணிகளே, இந்தப் பித்தலாட்டக்காரர்கள், புரட்சிக்குத் தலைமையேற்று வழி நடத்துவார்கள் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

படிப்பகம்

www.padippakam.com

'அரசனைவிட, அரசனுக்கு விசுவாசமான பணியாள்' என்ற இனத்தைச் சேர்ந்தவர் சென்னை நகர போலீசுக் கமிஷனர் துரை. தனது எஜமான விசுவாசத்தைக் காட்டப்போய் இரண்டாவது முறையாகத் தனது முகத்திலேயே கரிபூசிக் கொண்டுள்ளார். முதல் தடவை முதல்வர் கருணாநிதிக்கு விசுவாசமாக அரசியல் ஆதாயம் தேடித் தர முயன்ற ஜெயலலிதா பதவி விலகல் கடித விவகாரம். இப்போது, தனது மேலதிகாரி, போலீசுத்துறைச் செயலாளர் நாகராஜனின், மானத்தைக் காப்பதற்காக அரசியல் கிசுகிசு வார ஏடான 'தராசு' ஆசிரியர் ஷியாம் என்கிற சண்முகம் கைது விவகாரம்.

தராசு ஆசிரியருக்கு எதிராக கரூர் காங்கிரசுப் பிரமுகர் கொடுத்துக் காலாவதியாகிப் போன மானநட்ட வழக்கை உயிர்ப்பித்து, அவசரகோலத்தில், முறைகேடாகக் கைது வாரண்ட் தயாரித்து, நள்ளிரவில் கைது செய்து, 24 மணி நேரத்தில் விடுவிக்க நேர்ந்தது

ஆனால் இந்த விவகாரத்தின் பின்னணியே வேறு. கருணாநிதியின் லஞ்ச ஊழல், அதிகாரமுறைகேடுகளில் பழம் பங்காளி போலீசுத்துறை செயலாளர் நாகராஜன். இவர், "24 ஆண்டுகளில் 25 கோடி ரூபாய்க்கு கோல்மால்" செய்து சொத்துச் சேர்த்ததாக தராசு ஒரு கட்டுரை எழுதியிருந்தது. அதை விலக்கிக் கொண்டு 'தவறான செய்தி' என்று மறுப்பு வெளியிடும்படி போலீசை வைத்துத் தராசு ஆசிரியருக்கு ஆசை வார்த்தைகளும், மிரட்டலும் விட்டனர். நாகராஜனே தலைமைச் செயலகத்துக்கே கூப்பிட்டு ஆசிரியரையும் திருபரையும் மிரட்டினார். மிரட்டலுக்குப் பணியாது, இதையும் சேர்த்து அம்பலப்படுத்தியது தராசு.

ஷியாமுக்குப் "பாடம்" கற்பிக்கும் போலீசு நடவடிக்கைதான் கைது விவகாரம். இது வெளிப்படையாகத் தெரிந்து விடக்கூடாது என்பதற்காக தராசு ஏட்டோடு சேர்த்து, இன்னொரு கிசுகிசு வார ஏடான நக்கீரன் மற்றும் மசாலா வார ஏடான குமுதம் ஆகியவற்றின் மீது அவதூறுத் தடுப்பு வழக்குப் போட்டுள்ளது கருணாநிதி அரசு. முதல் தவணை ஆட்சியின் போது துக்ளக், மக்கள் குரல் போன்ற எதிர்த்தரப்பு ஏடுகளின் மீது குண்டர்களையும் போலீசையும் ஏவித் தாக்குதல் தொடுத்த கருணாநிதி இப்போது, குறைந்தது தேர்தல் வரையிலாவது தனது தந்திரத்தை மாற்றிக் கொண்டு சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கிறது.

கைது செய்து பாடம் கற்பிப்பது, வழக்குப் போட்டு மிரட்டுவது ஆகியவற்றோடு மற்றொரு கிசுகிசு ஏடான ஜூனியர் விகடன் மூலம், தன்னிலை விளக்கம் கொடுத்துள்ளார் நாகராஜன். 'இந்த விமர்சனங்கள், அவதூறுகள் எதுவுமே எனக்குப் புதிதல்ல.." என்று கூறும் நாகராஜனின் சுயபுராணம் பாடும் பேட்டி ஆகியவற்றை வெளியிட்டுள்ளது ஜூனியர் விகடன். ◆ எம்.ஜி.ஆர். ஆட்சியில் கொள்ளையடித்த சாராய அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததால் அவர்கள் நாகராஜன் மீது குறிவைத்துத் தாக்குகின்றனர். ◆ சி.பி.ஐ. விசாரணை மற்றும் சோதனை நடத்தியதாகக் கூறப்படும் நாட்களில் நாகராஜன் ஊரிலேயே இல்லை. ◆ கருணாநிதிக்கு சாதகமாக சர்க்காரியா கமிஷனில் சாட்சி சொன்னதற்காக இவரைப் பழிவாங்குவதற்குப் பலமுறை எம்.ஜி.ஆர்.அரசு முயன்றபோதும் நிர்வாகத் திறமை, நேர்மை காரணமாக நாகராஜன் தப்பித்துக் கொண்டார். ◆ கர்நாடகா கவர்னர் வெங்கிட சுப்பையா இன்னும் பல எம்.பி.க்கள் சிபாரிசு செய்தும் மத்திய அரசுக்கு நாகராஜனை மாற்றாது தொல்லை கொடுத்தபோதும் அவற்றை எல்லாம் முறியடித்தார் நாகராஜன் — இவைதான் ஜூனியர் விகடன் மூலம் சொல்லுகின்றார். லஞ்ச ஊழல்கள் செய்ததாகத் தராசு கூறிய புகார்களை நேரடியாக மறுக்கவில்லை.

லஞ்ச ஊழல்களை, அதிகாரமுறைகேடுகளை எப்படித் திறமையாக செய்வது, மாட்டிக்கொண்டால் எப்படி தப்பிப்பது என்பனவற்றை தொழில் - நிர்வாக சுத்தமாக செய்வதற்கு கருணாநிதிக்குப் பயிற்சி கொடுத்து, கொள்ளையில் பங்கு போட்டுக் கொண்டதோடு, அவர் ஆட்சியில் இல்லாதபோதும் விசுவாசமாக இருந்து, இப்போது அவற்றுக்கான "சன்மானம்" பெற்றுள்ள ஒரு சில முக்கியமான அதிகாரிகளுள் முதலிடம் வகிப்பவர் நாகராஜன். எனவே, வழக்கமாக அவதூறு, அரசியல் கிசுகிசுக்களை எழுதும் வார ஏடு

## தராசு ஆசிரியர் கைது

## அரசியல் கிசுகிசு ஏடுகளும் பத்திரிக்கைச் சுதந்திரமும்

கூறியுள்ள லஞ்ச ஊழல் புகார்கள் தானே என்று ஒதுக்கிவிடவும் முடியாது.

தராசு ஆசிரியர் கைது மற்றும் வழக்கைத் தொடர்ந்து, 'பத்திரிக்கைச் சுதந்திர'த்தைப் பறிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டித்துள்ளனர். பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியின் பாத்திரத்தைத் தான் ஆற்றுவதாகவும், உயிர்த் தியாகத்துக்கும் அஞ்சாது, தராசு மக்கள் மன்ற மறவர்கள் துணையோடு, துணிச்சலோடு மேலிடத்து லஞ்ச ஊழலுக்கு எதிராகப் போராடக் கிளம்பிவிட்ட புலியாக சுயபுராணம் பாடிக் கொள்கிறார் தராசு ஆசிரியர் ஷியாம். பழிவாங்குவதில் யானையின் பண்பு கொண்ட கருணாநிதியின் நெருங்கிய பங்காளிக்கு எதிராக லஞ்ச ஊழல் புகார் கூறுவதாலேயே ஷியாமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்பது உண்மைதான்; கண்டிக்கத்தக்கதுதான்.

ஆனால் பத்திரிகைச் சுதந்திரம் என்கிற பெயரில், அரசியல்

## 'அமைதி'ப் படையின் அக்கிரமங்கள்!

அன்புள்ள ஆசிரியருக்கு,

இந்தியாவின் இராணுவ நடவடிக்கையால் எமது மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். என்னுடைய தம்பி நான்குமுறை கைது செய்யப்பட்டார். எனது தந்தை இராணுவ முகாமுக்கு நேராகச் சென்று என்ன குற்றத்திற்காக கைது செய்தீர்கள் என்று கேட்டதற்காக நையப் புடைக்கப்பட்டார். எனது அண்ணன் இரண்டுமுறை கைது செய்யப்பட்டார். இவ்வளவு காலத்தில் எங்கள் வீட்டிற்கு இலங்கை இராணுவம் வந்ததுகூட கிடையாது. ஆனால் எம்மைக் காப்பதாகக் கூறிவந்த இந்திய இராணுவம் எமது மக்களுக்கே எதிரானதாக உள்ளது.

மே மாதக் கடைசியில் நீர்வேலி கிராமத்தில் மூன்று வீடுகளும் ஒரு கடையும் இந்தியப் படையினரால் எரிக்கப்பட்டது. இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு இளைஞரின் முதுகெலும்பை குண்டு தளைத்ததால் அவர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். மூன்று பெண்கள் சூட்டுக் காயத்திற்கு இலக்காகியுள்ளனர். இந்திய இராணுவம் நடத்தும் தொடர்ச்சியான அட்டூழியங்களால் தமிழீழ மக்கள் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் மீதும் அதன் கைக்கூலிகள் மீதும் ஆத்திரமும் வெறுப்பும் அடைந்துள்ளார்கள்.

இந்திய ஆக்கிரமிபாளருக்கு எதிரான எமது மக்களின் போராட்டத்திற்கு நீங்கள் தரும் ஆதரவைக் கண்டு தமிழீழ இளைஞர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஏனெனில் இந்திய அரசியல்வாதிகள் மீது அருவெறுப்பும் அவநம்பிக்கையும் கொண்டுள்ளதே காரணம். அதை நீங்கள் முறியடித்திருப்பது மிகவும் விரும்பத்தக்கது. ஈழப் பிரச்சினை பற்றி தொடர்ந்து தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

— *சீலன், கனடா*

5-7-89 முதல்
விவசாயிகள் விடுதலை முன்னணி
மக்கள் கலை இலக்கியக் கழக
இணைந்து நடத்தும்

இயக்கத்தில் பங்கெடுப்
இயன்ற அளவு நிதி தா

படிப்பகம்

www.padippakam.com

வாதிகள் மற்றும் அரசின் அக்கிரமங்கள், அட்டூழியங்கள் அயோக்கியத்தனங்களை எதிர்ப்பதைவிட மக்களுக்கு எதிரான பிழைப்புக்கான தொழிலாகப் பத்திரிக்கைத் துறையை தராசு, நக்கீரன், ஜூனியர் விகடன் போன்ற கிசுகிசு ஏடுகள் சீரழித்து விடுவதை விமர்சிக்காமல் இருக்க முடியாது. ''மெய்தான், அதை இப்போது, இந்த விவகாரத்தில் செய்யவும் வேண்டுமா?'' என்று கிசுகிசு செய்திகளினால் கிறங்கிப்போன சில வாசகர்கள் எண்ணக் கூடும். ஆம். இப்போதுதான்! இந்த விவகாரத்திலும் கிசுகிசு ஏடுகளின் பிழைப்புவாதமும் அடங்கியிருக்கிறது.

★ முதலாவதாக, முன்பு இந்துநேசன், இப்போது சிகப்புநாடா போன்ற மஞ்சள் பத்திரிகைகள் சினிமா மற்றும் அரசியல் பிரமுகர்களின் இரகசியங்களை எழுதி, பேரம் பேசி உருட்டி மிரட்டி பணம் பறித்தன. பிழைப்பு நடத்தின. அதையே நாகரீகமான முறையில்








கிசுகிசு தராசு ஆசிரியர் ஷியாம்
ஊழல் பெருச்சாளி நாகராஜன்.

இப்போது இந்தக் கிசுகிசு ஏடுகள் செய்கின்றன. புகார்கள் பற்றிய குறிப்பான ஆதாரங்களை வெளியிட்டு அம்பலப்படுத்துவதற்குப் பதில் பூடகமாக எழுதி மிரட்டுகின்றன; எதிரெதின தரப்புகளில் நின்று கொண்டு ''லாவணி'' பாடிப் பிழைக்கின்றன. 'ஆட்டோ'சங்கர் சாராயம் - விபச்சாரம். கொலை விவகாரங்களில் குற்றவாளிகளான அதிகாரிகள், அரசியல்வாதிகளைப் பற்றி அறிந்திருந்தும் இந்தக் கிசுகிசு பத்திரிகைகள் மூடி மறைத்தன. ஆனால் பரபரப்பாக எழுதி விற்பனை செய்தன. துணைக் கலெக்டர் பிர்ஜெடாவுக்கு எதிராக தராசும், ஆதரவாக ஜூனியர் விகடனும் லாவணி பாடின. பிறகு தேவாரம் - திலகவதிக்கு எதிராக ஜூனியர் விகடனும், ஆதரவாக தராசும் லாவணி பாடின. இப்போது நாகராஜனுக்கு எதிராக தராசும், ஆதரவாக ஜூனியர் விகடனும் லாவணி பாடுகின்றன

★ இரண்டாவதாக, அதிகாரிகள், அரசியல்வாதிகளின் அக்கிரமங்கள், மக்களின் சமூகக் கொடுமைகளை நடுநிலையில் நின்று துணிச்சலோடு அம்பலப்படுத்துவதாக நடிக்கின்றன. அதிகாரிகள் - அரசியல்வாதிகளுக்கு இடையிலான போட்டி - சண்டையைப் பயன்படுத்திக் கொண்டு ஒருவர் மற்றவருக்கெதிராகத் தரும் செய்திகளை வெளியிடுகின்றன. மத்திய அரசின் தயவில் நின்று கொண்டு மாநில அரசை சாடுகின்றன. அல்லது மாநில அரசின் தயவில் நின்று கொண்டு மத்திய அரசை சாடுகின்றன. ஏதாவது ஒரு அரசியல் அணியின் பின்பலத்தோடுதான் மற்ற அணியைச் சாடுகின்றன. அரசியல்வாதிகள், அதிகாரிகளின் குற்றங்களை விட மக்களே மக்களுக்கு எதிரி என்கிற ரீதியில், கிரிமினல் குற்றச் செய்திகளைப் பரப்புகின்றன.

★ மூன்றாவதாக, பரபரப்பாக விற்பனை ஆகக்கூடிய எதையாவது எழுவது என்கிற பிழைப்புவாத வெறியோடு, இந்த ஏடுகள் எழுதுகின்றன. ''மந்திரிசபை டிஸ்மிஸ்'', ''திடீர் தேர்தல்'', ''ஆட்சி கவிழும்'' ''கட்சி மாறுகிறார்'' என்று வதந்திகளையே செய்திகளாக எழுதுகின்றன. ''முரசொலி மாறன் - ராதிகா மோதல்'' என்று நக்கீரன் சுவரொட்டிப் பிரச்சாரம் செய்த செய்தியின் உள்ளடக்கம் மாறனின் மகனுடன் ராதிகா நெருங்கிப் பழகுவதால் மாறன் கோபமடைந்துள்ளார் என்ற கிசுகிசு; ஜெயலலிதா - ராஜீவ் மாலை போட்டு மணமக்களைப் போல அட்டைப்படம் - அதற்கு எதிராக காங்கிரசு கண்டனச் சுவரொட்டி என்று விளம்பர - விற்பனை உத்தியைக் கடைப்பிடிக்கிறார்கள்; அதேபோல ராஜீவுக்கு ஜெயலலிதா முறைப்பெண் போன்ற அட்டைபடக் கட்டுரைகள் எழுதுகின்றன. விற்பனையைக் கூட்டிக் கொள்வதற்காக இப்படி கீழ்த்தரமான வேலைகளைச் செய்வதால் ''நாகராஜன் ஊழல்'' போன்ற விவகாரமும் திண்ணைப் பேச்சுக்குரியதாகக் கரைந்துவிடும்.

★ நான்காவதாக, எல்லாவற்றையும்விட முக்கியமாக, சினிமா நடிகர் நடிகைகளைப் பற்றிய சொந்தக் கதைகள், கிசுகிசுக்களை எழுதி போதை ஏற்றுவதைப் போல அரசியல் கிசுகிசு, அவதூறுகள், அரசியல்வாதிகளின் கதைகளை எழுதி பிழைப்பு நடத்துவதோடு வாசகர்களுக்கு போதை ஏற்றுகின்றன. பாரிய அக்கறையுடன் அரசியலைப் புரிந்து கொள்ளுவதற்குப் பதில் கிசுகிசுக்கள், அவதூறுகளையும் படித்து, திண்ணைப் பேச்சுப் பேசி பொழுது போக்குவதற்கான சரக்குகளை விற்பனை செய்கிறார்கள். சாராய வியாபாரியும், 'சாக்கனா' கடைக்காரனும் கூட்டுச் சேர்ந்து மக்களுக்குப் போதை வியாபாரம் செய்வதைப் போல பொறுக்கி அரசியல்வாதிகளும், கிசு கிசு ஏடுகளும் கூட்டுச் சேர்ந்துள்ளனர். முதலாளித்துவ அரசியல் எப்படி பொறுக்கி அரசியலாகவும் - பிழைப்புவாதமாகவும் சீரழிந்து போயுள்ளதோ அதன் விளைவாக, அதன் பிரதிபலிப்பாக முதலாளித்துவப் பத்திரிகைத் துறையில் இந்த அரசியல் கிசுகிசு, அவதூறு ஏடுகள் தோன்றி வளர்ந்துள்ளன. கிசுகிசு, அவதூறுகளை எழுதுவதே அரசியல், சமூகப்பணி; அதற்காகத்தான் பத்திரிகைச் சுதந்திரம் இருக்கிறது. அதைத்தடுப்பதும் - எதிர்ப்பதும் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது என்கிற அளவுக்கு கொச்சைப்படுத்துகிறார்கள்.

**பாசிச ராஜீவ் கும்பலே!**
**இந்திய - இலங்கை துரோக ஒப்பந்தத்தை ரத்து செய்!**
**இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தை உடனே திரும்பப்பெறு!**

இந்திய அரசின்

# இலங்கை ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழகம் தழுவிய இரு வார பிரச்சார இயக்கம்

தொடர்புக்கு: முருந்தன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

படிப்பகம்

www.padippakam.com

# சீன கொந்தளிப்பு; மனித உரிமைகள்: ஏகாதிபத்தியங்களின் இரட்டை வேடம்.




அமைதிப் புறாவை அழிக்கும் கொடிய மிருகமாக சீனாவை சித்தரிக்கும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள்

நம்ம ஊர் அரசியல் விமர்சனப் பாணியில் சொல்வதானால், *சீனாவின்* டெங் தலைமையிலான அரசுக்கும் மேற்கத்திய முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்களுக்கும் இடையில் கடந்த பத்தாண்டுகளாக நிலவிய 'தேனிலவு' முடிந்துவிட்டது. குறைந்தது அடுத்த பத்தாண்டுகளுக்காவது இந்தப் 'பிணக்கு' நீடிக்கலாம். 'கூடுதலான ஜனநாயகம்' மற்றும் 'லஞ்சஊழல் ஒழிப்பு' ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து எழுச்சியுற்று போராடிய மாணவர்களையும் அவர்களுக்கு ஆதரவகாகத் திரண்ட பொதுமக்களையும் இராணுவத்தை ஏவி டெங் கும்பல் படுகொலை வெறியாட்டம் போட்டதைக் கண்டித்து மேற்கத்திய முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள் இவ்வாறு முடிவெடுத்துள்ளன.

ஆனாலும் அவை ரொம்பவுந்தான் அலட்டிக் கொள்ளுகின்றன. ''இது மிகைதான்!'' என்று அவற்றின் ஆதரவுப் பழைமை வாதிகளும் கூட எச்சரிக்கின்றனர்.

குறிப்பாக மூன்று முக்கிய காரணங்களை - குற்றச்சாட்டுகளை மேற்கு முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள் கூறுகின்றன. அவை:

□ **இராணுவ அதிரடித் தாக்குதல் - தியன் ஆன்மென் சதுக்கப் படுகொலை:** கூடுதலான ஜனநாயகம் மற்றும் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆகிய கோரிக்கைகளுக்காக அமைதி வழியில் போராடினார்கள் மாணவர்கள். அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, கோரிக்கைகளை ஏற்பதற்குப் பதில் இராணுவச்சட்டத்தையும் பல பத்தாயிரம் இராணுவத்தினரையும் ஏவி, 5,000 முதல் 10,000 பேர்வரை நிராயுதபாணியானவர்களைக் காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்தனர். மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்த ஆசிரியர்கள், அறிவு ஜீவிகள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் தொழிலாளர்களையும், பார்வையாளர்களாக வந்த பெண்கள், வயோதிகர்கள், குழந்தைகளையும் கூட பீரங்கிகளைக் கொண்டு கண்மண் தெரியாமல் சுட்டு வீழ்த்தினார்கள். கவச வண்டிகளை ஏற்றி மிதித்துக் கொன்றார்கள். இட்லரும் செய்யத்துணியாத மிருகத்தனமான செயல். ''இவர்கள் பாசிசத்தை விட மோசமான பாசிஸ்டுகள்!'' ''நவசீன வரலாற்றில் எப்போதுமே கண்டிராத கொடூரம்!''

□ **பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது; குறிப்பாக மேற்கு நாடுகளின் செய்தியாளர்கள் மீது நடவடிக்கை:** இராணுவ அதிரடித் தாக்குதலைப்பற்றி செய்திகள் சேகரித்த செய்தியாளர்கள் மீது *சீன* ராணுவம் தாக்குதல் நடத்தி பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பறித்தது. இங்கிலாந்து பி.பி.சியின் ஜேம்ஸ் மைல்ஸ் மற்றும் ஜப்பானிய 'யோமியுரி ஷிம்பூ' நிறுவனத்தின் நோரியூக் ஓஷிமாவை இராணுவச் சட்டத்தை மதிக்கும் படி எச்சரித்து, மிரட்டி மன்னிப்புக் கோரவைத்தனர். கூடட்டத்தினரிடையே கலந்திருந்த ஜப்பானிய நிருபரை காலிலும், பிரெஞ்சு நிருபரை முதுகிலும் சுட்டது ராணுவம். இரு அமெரிக்க வானொளி நிருபர்களையும் இரு பிரிட்டிஷ் நிருபர்களை அடித்தனர். பலரைப் பிடித்து அடைத்து வைத்தனர். மைக்கேல் பாதர்ஸ் மற்றும் ஜான்போம் ஃபிரெட், ஆலன் பெசின் ஆகிய அமெரிக்க வானொளி நிருபர்களையும் பிரியன் பாரோன், பீட்டர் நியூபோர்ட் ஆகிய பிரிட்டிஷ் வானொளி நிருபர்களையும் நாடு கடத்தினர். அவர்களுடைய காமிரா மற்றும் பிற உடமைகளைப் பறித்து, உடைத்துப் போட்டனர். செய்தி சேகரிக்கும் ஜனநாயக உரிமையை *சீன* ராணுவம் காலில் போட்டு மிதித்தது.

□ **மனித உரிமைகள் மறுப்பு; மரண தண்டனைகள் - களையெடுப்புகள் தொடர்கின்றன:** இராணுவ அதிரடித் தாக்குதலோடு டெங் தலைமை நிறுத்திக் கொள்ளவில்லை. தொழிற்சாலைகள், பல்கலைக் கழகங்களுக்குள் புகுந்து ஜனநாயக ஆதரவு இயக்கத்தினரை வேட்டையாடுகின்றது. நூற்றுக் கணக்கானோரைக் கைது செய்து, இராணுவச் சட்டத்தின் கீழ் மரண தண்டனை விதித்து, நிராயுதபாணிகளான அரசியல் கைதிகளைப் படுகொலை செய்கிறது. சுதந்திர மாணவர் மற்றும் தொழிலாளர் சங்கங்களைத் தடை செய்து ஜனநாயக உரிமைகளை மறுக்கிறது. *சீர்திருத்தங்களுக்காகப்* போராடிய கட்சித் தலைவர்களைக் களையெடுத்து, சட்ட விரோதமாகக் குற்றஞ்சாட்டித் தண்டிக்கிறது. அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும்படி மேற்கு நாடுகள் கோருவதைத் துச்சமென மதிக்கிறது.

— *சீனாவின்* டெங் சியாவோபிங் தலைமைக்கு எதிராக மேற்கண்ட குற்றச்சாட்டுகளை அடுக்கும் முதலாளித்து - ஏகாதிபத்தியங்கள் *சீனாவுக்கு* எதிராக தூதரக உறவு முறிவு, பல்வேறு தடை நடவடிக்கைகள், தொழில் உறவு - கடன் மறுப்பு ஆகியவற்றால் ஆத்திரத்தை வெளிப்படுத்துகின்றன. அதிர்ச்சி தெரிவிப்பதோடு அழுதும் புலம்புகின்றனர்.

அமெரிக்காதான் முதல் எதிர்ப்பைத் தெரிவித்தது. அனைத்துப் பொருளாதார, இராணுவ ஏற்றுமதிகளையும் தடை செய்தது.

ஆஸ்திரேலியா, கனடா முதலிய நாடுகள் தூதரக உறவைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டன. பிரான்சு, ஸ்பெயின், சுவிஸ் ஆகிய நாடுகள் தூதரக உறவை முடக்கின. 12 ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுக் குடும்ப நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தன. *சீனாவிலுள்ள* மாணவர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களை திரும்ப அழைத்துக் கொண்டன, மேற்கு நாடுகள். இவற்றின் மூலம் *சீனப்* பொருளாதாரம் - தொழில்களை முடக்க முயலுகின்றன. அரசியல் தஞ்சம் கோரும் *சீனர்களையும்*, அகதிகளையும் வரவேற்கத் தயாரிப்புகளைச் செய்து வருகின்றன.

*சீன* அரசு என்ன செய்ய வேண்டும் என்று மேற்கு முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசுகள் நேரடியாகவே கூறுகின்றனர். ''கட்டுப்பாட்டுடனும், அமைதி வழியிலும் பேச்சு நடத்தி மாணவர்களின் விருப்பங்களை ஏற்கவேண்டும்'' என்கிறார் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ். ''தாமதமின்றி அரசியல் பேச்சுவார்த்தையின் மூலம் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டும். அடக்குமுறை நடவடிக்கைகளினால் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைக் கொள்கைகளை *சீனா* மீறுவதால் அதன் தற்போதைய பொருளாதார *சீர்திருத்தங்கள்* பாதிக்கப்படும். ஐரோப்பிய சமூகத்தின் ஆதரவுகளை இழக்க நேரிடும்'' என்று ஐரோப்பியப் பொருளாதாரக் குடும்ப நாடுகள் எச்சரிக்கின்றன.

''முதன்முறையாக சுதந்திர உணர்வுகள் வெடிக்கும் சமயத்தில் *சீன* ஆட்சியாளர்கள் மேற்கொண்டுள்ள அடக்கி ஒடுக்கும் பாதையிலிருந்து திருப்பி விடுவதற்கு உலகப் பொதுக்கருத்தும், உலக நடவடிக்கையும் அவசியம்'' என்கிறார் காமன்வெல்த் நாடுகளின் பொதுச்செயலாளர். மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்காக அதிகபட்சம் நிர்பந்தத்தைத் திரட்டுமாறு சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுக்கிறார் பிரெஞ்சு பிரதமர். ''*சீன* நாட்டிலே வாழும் எல்லா மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் ஒரு சுதந்திரமான, வெளிப்படையான அரசியல் அமைப்பைக் கொண்ட நியாயமான, ஜனநாயகப்பூர்வமான சமுதாயத்தை நிறுவுவதற்கான அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்'' என்று தீர்மானமே போட்டுள்ளது அமெரிக்க நாடாளுமன்றம்.

இவை அனைத்திற்கும் சேர்த்துத் திடலடியாகப் பின்வரும் பதிலைக் கூறிவிட்டது *சீனாவின்* டெங் அரசு, ''அரசியல், பொருளாதார வழிகளினால் *சீனாவுக்கு* எதிராக

படிப்பகம்

www.padippakam.com

நிர்பந்தம் கொடுக்க சில வெளிநாடுகள் முயலுகின்றன. அது வீணானது; விவேகமற்றது''. ''இது ஒரு சுயாதிபத்தியம் உள்ள நாட்டுக்குள்ளே நடக்கும் உள் விவகாரம். அமெரிக்காவிலே இப்படியொரு கலகம் வெடிப்பதற்கு அது அனுமதிக்குமா? அப்படி நடந்தால் கையைக்கட்டிக்கொண்டு வேடிக்கைப் பார்க்குமா?'' என்று கேட்கிறது. ஆக, வெளிநாடுகளின் தலையீடு, நிர்பந்தம் ஆகியவற்றைக் கண்டு பின்வாங்காமல் தனது இராணுவ ஒடுக்குமுறையைத் தொடர்ந்து, அதிகாரத்தை உறுதிப்படுத்தும் பாதையிலே ரத்தம் சொட்டச் சொட்ட முன்னேறுகிறது டெங் - லீபெங் கும்பல்.

இன்னும் ஒருபடி மேலே போய், ''*சீனா*வில் ஏற்படும் கொந்தளிப்புக்களுக்குப் பின்னணியாக'' மேற்கு ஏகாதிபத்தியங்களின் சதிகாரர்கள் இருப்பதாகவே குற்றஞ்சாட்டுகிறது டெங் - லீபெங் கும்பல். *சீன*க் கொந்தளிப்பு மற்றும் அதற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் பற்றி ஏராளமான வதந்திகளைப் பரப்பி மேலும் கலவரங்களைத் தூண்டுவதாகக் கூறுகிறது. எதிர்ப்புரட்சிக்காரர்களுக்கு அரசியல் தஞ்சமளிப்பதாகச் சாடுகிறது. ''*சீனா*வில் நிகழ்ந்துள்ளது வெறுமனே நிராயுதபாணிகளின் அமைதியான போராட்டமல்ல; வெகுஜன எழுச்சியுமல்ல. *சீனா*வின் பாட்டாளி வர்க்கக் கட்சியையும், சோசலிச அமைப்பையும் தூக்கி எறிந்து முதலாளித்துவ பிற்போக்கு ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான எதிர்ப்புரட்சிக் கலகம். ஒரு திட்டமிட்ட சதிகாரக் கும்பலினால் நடத்தப்பட்டது'' என்று தனது படுகொலைகளை நியாயப்படுத்துகிறது.

தியன் ஆன்மென் சதுக்க சம்பவங்கள் சில விஷயங்களில் பஞ்சாப் பொற்கோயிலின் மீது பாசிச இந்திரா கும்பல் நடத்திய இராணுவ அதிரடி 'நீல நட்சத்திர' நடவடிக்கையை ஒத்திருக்கிறது. டெங்கும்பல்தானே வளர்த்துவிட்ட புதிய முதலாளித்துவ சக்திகளின் பிரதிநிதிகள் தனக்கு எதிராகவே திரும்பிய பிறகு அரசு - இராணுவ பயங்கரத்தை ஏவிவிட்டது. எதிர்ப்புரட்சி சதிகாரர்களுக்கு எதிராக நாட்டின் உறுதிப்பாட்டையும் சட்டம் - ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகக் கூறிக் கொண்டு ஆயிரக்கணக்கான பொதுமக்களை - குழந்தைகள், பெண்கள், முதியோர்களை - கொன்று ரத்த வெள்ளத்தில் மிதக்க விட்டது. 'நீலநட்சத்திர' நடவடிக்கைக்குப் பிறகு 'காட்டுப்பூக்கள்' நடவடிக்கை என்ற குறிப்பெயரில் சீக்கிய இளைஞர்களைத் தேடி இந்திரா கும்பல் நரவேட்டையாடியதைப் போலவே, டெங் - லீபெங் கும்பல் *சீன* நாடு முழுவதும் பயங்கரவாதத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

அரசு அதிகாரவர்க்க முதலாளித்துவம் என்ற மூடி மறைக்கப்பட்ட சுரண்டல் பொருளாதார - அரசியல் அமைப்புமுறைக்காக டெங் - லீபெங் கும்பல் வலிந்து நிற்கிறது. நேரடி - தனியார் முதலாளித்துவம் என்கிற பகிங்கரமான சுரண்டல் பொருளாதார - அரசியல் அமைப்பு முறைக்காக ஜாவோ ஜியாங் கும்பல் போராடுகிறது. தன்னெழுச்சியான, அரைகுறையான, நிராயுதபாணியான அமைதிவழிப் போராட்டத்தை மாணவர்கள் நடத்தவில்லை. செய்தித் தொடர்பு, ஆயுதங்கள் உட்பட தகுந்த ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு ரீதியிலான திட்டமிட்ட போராட்டத்தையே தொடுத்திருக்கிறார்கள். கட்சி பிளவுபட்டு, தமது நோக்கங்களை நிச்சயம் சாதித்துவிட முடியும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கையோடு அழுத்தமாக நின்றிருக்கிறார்கள். ஆத்திரத்தைத் தூண்டும் வன்முறையை இராணுவத்திற்கு எதிராக முதலில் நடத்தியது மாணவர்கள் தான். இராணுவ அதிரடித் தாக்குதல் தொடங்கியவுடன் எதிர்த்தாக்குதல் நடத்திக் கணிசமான இராணுவத்தினரைக் கொன்றிருக்கின்றனர். டெங் - லீபெங் கும்பல் மேற்கொண்டுள்ள அரசு - இராணுவ பயங்கரவாத நடவடிக்கையும் சோசலிசத்தைக் காப்பதற்கான புரட்சிகரத் தன்மையுடையது அல்ல. எதிர்ப்புரட்சியை ஒடுக்குவது என்கிற பெயரில் *சீன* மக்கள் அனைவர் மத்தியிலும் பயபீதியை விதைப்பதற்கான மிருகத்தனமான தாக்குதல்தான். ஆகவே இது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள இரு முதலாளித்துவ கும்பல்களுக்கிடையிலான போராட்டம்; சோசலிசம் மற்றும் ஜனநாயகத்தின் பெயரிலான முகாம்களாகப் பிரிந்து நடக்கிறது.

இதிலே ஜனநாயகத்தை ஆதரிப்பதாக, குறிப்பாக மனித உரிமைகள் மீறப்படுவதாகப் பெருங்கூச்சல் போடுகின்றன, மேற்கு முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள். *சீனா*விலே நடக்கும் தேடி அழித்தல், இராணுவச் சட்ட விசாரணை, மரண தண்டனை, கட்சிக் களையெடுப்புக்கள் - மனித உரிமை மீறலுக்கு அப்பட்டமான சான்றுகள் என்று கூறிக் குதிக்கின்றன.

அமெரிக்கப் பெரும்பான்மை செனட் தலைவர் ரிச்சர்டு கேபார்ட் தலைமையில் இருகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடி *சீன*த் தூதர் ஹான் சூவை அழைத்து மரண தண்டனைகளை நிறுத்தி அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கும்படி கோரினார். *சீன* மரணதண்டனைகள், ''மிகவும் பயங்கரமானவை'' என்று பிரிட்டிஷ் தாட்சரும், ''தெளிவாகவே துயருற்றுப் போயுள்ளோம்'' என்று ஜெர்மனியின் கோலும், ''மிகவும் கொடூரமானது'' என்று டச்சு அதிபரும், ''காட்டுமிராண்டித்தனத்தைக் குறிக்கிறது'' என்று ஸ்பெயின் பிரதமரும், ''ரணத்தை ஆழப்படுத்துவதாகும்'' என்று அமெரிக்க அதிபரும் கண்டித்துள்ளனர்.

*சீனா*விலே கொல்லப்பட்டவர்களுக்காக பிரெஞ்சு நாடாளுமன்றம் மௌன அஞ்சலி செலுத்தியுள்ளது. ''உயிர் தியாகம் செய்த ஜனநாயகக் காவலர்''களுக்கு வேண்டி பிரார்த்தனைகள் நடந்த மாதா கோவிலில் ஆஸ்திரேலியப் பிரதமர் போப் ஹௌகி மெய்யாகவே கண்ணீர் விட்டுக் கதறி அழுதார். கொல்லப்பட்டவர்களை இரட்சிக்கும்படி கேட்டு போப்பாண்டவர் பிரார்த்தனைகள் நடத்தினார். இவர்கள் அனைவரும் மனித உரிமைப் பிரச்சினையை மிகப்பெரியதாக முன்னிறுத்திக் குரல் எழுப்புகின்றனர். ''மனித உரிமைகளுக்கு அதிக அழுத்தம் கொடுப்பதை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் போக்குக்கு எதிராக எதிர் நீச்சல் போடுவதை மேற்கொள்ளும் எந்த நாடும் சர்வதேசிய அரங்கத்தில் தனிமைப்பட்டுப் போக வேண்டியதுதான்'' என்று ஜப்பானிய அரசு எச்சரிக்கிறது.

இங்கே, ஏறக்குறைய உலக நாடுகள் அனைத்துமே மறந்துபோய்விட்ட அல்லது மறைக்க முயலும் கேள்வி எழுகிறது. ஜனநாயக அமைப்புமுறை மற்றும் மனித உரிமைகள் பற்றி பெருங்கூச்சல் போட்டு இத்தனை ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே, இந்த முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்களுக்கு அதற்கான அருகதை கொஞ்சமாவது இருக்கிறதா? இவர்கள் பேசுவது எல்லாம் கசாப்புக் கடைக்காரன் ஜீவகாருண்யத்தைப் பற்றி மேடையிலே முழங்கி அழுது புலம்புவது போன்றதுதானே!

முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்களின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய மாய்மாலங்களை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்வதற்காக இங்கே மேலும் சில விவகாரங்களை அலசிப் பார்ப்போம்.

ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு வேறு நாடுகளுக்கு எந்த அளவு, என்ன உரிமை இருக்கிறது என்பது ஒரு பிரச்னை. சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, அமுலாக்கும் அதிகாரம் கொண்ட நீதி நெறிமுறை எதுவுமே இந்த விவகாரத்தில் கிடையாது. நாடுகளின் பராக்கிரமத்துக்கேற்ப காட்டாட்சிதான் இப்போது நடக்கிறது. குறிப்பாக, முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள், தமது நோக்கத்தைப் போலவே வேறொரு நாட்டு உள்விவகாரங்களில் தலையிடுகின்றன. அல்லது ஒதுங்கி நிற்கின்றன.

ஆஃப்கான் விவகாரத்தில் ருஷ்யாவும், கம்பூச்சிய விவகாரத்தில் வியத்நாமும் படையெடுக்குமளவு தலையிட்டன. முன்பு வியத்நாமிலும் இப்போது கிரேனடா, பனாமா விவகாரங்களிலும் அதேபோல அமெரிக்கா இராணுவத்தை ஏவியது. ஆஃப்ரிக்க நாடுகளின் விவகாரங்களில் பிரெஞ்சு இராணுவம் தலையிடுகிறது. வங்கதேசத்துக்குள்ளும், இலங்கைக்குள்ளும் இந்திய இராணுவம் புகுந்தது. ஒவ்வொரு நாட்டின், தேசத்தின் தலைவிதியை அந்த நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதை எப்போதாவது இவர்கள் மதித்தார்களா?

ஒரு நாட்டில் தமது நலன்கள் பாதிக்கப்படும் பொழுதெல்லாம் அரண்மனை - இராணுவ ஆட்சிக்கவிழ்ப்புகளை அரங்கேற்றுவது, உளவு நிறுவனங்களை வைத்து அரசியல் தலைவர்களைப் படுகொலைகள் புரிவது, ஏதாவது ஒரு காரணத்தை சாக்கு வைத்து நேரடி ராணுவ ஆக்கிரமிப்பே நடத்துவது என்று பல்வேறு அளவுகளிலான தலையீடுகளை உலகம் முழுவதும், வரலாறு நெடுகப் பார்க்கிறோம். அதேபோல தன்னுடைய நலன்களைப் பாதுகாக்கும் அரசுகளுக்கு எதிராக வேறு அந்நியத்தலையீடுகள் வரும்போதெல்லாம் ''உள்விவகாரங்களில் தலையீடு'' என்கிற ஓலங்களைக் கேட்கிறோம். எனவே தான் சீன விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்ப வேண்டும் என்று ஒரு பிரிவினர் கோரியதை அமெரிக்கா, ருஷ்யா உட்பட அனைத்து வல்லரசுகளுமே நிராகரித்து விட்டன. அங்கே தமது வண்டவாளங்கள் தண்டவாளங்கள் ஏறிவிடும் என்று அஞ்சுகின்றன.

ஒரு நாட்டில் எந்த மாதிரியான அரசி

படிப்பகம்

www.padippakam.com

யல், சமூக, பொருளாதார அமைப்பு இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பிரச்சினை. இதிலும் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, அமுலாக்கும் அதிகாரமுடைய பொதுவிதி எதுவும் கிடையாது. மாறுபட்ட அமைப்புகளைக் கொண்ட நாடுகளின்; ''சமாதான சகவாழ்வை'' ஒப்புக் கொண்டபோதிலும் கம்யூனிச சாயலுடையவை எதுவானாலும் குறிவைத்துத் தாக்கி அழிக்கவே முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள் ஓயாது முயலுகின்றன. கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் ஊடுருவி உள்ளிருந்து சிதைப்பது, அதேசமயம் வெளியிலிருந்து தாக்கித் துடைத்தொழிப்பது என்ற இரண்டு வழிகளிலும் முயலுகின்றன. கம்யூனிச அபாயத்தைத் தடுப்பது என்கிற பெயரில் எல்சால்வடார் பாசிச சர்வாதிகாரிக்கும், நிகாராகுவா எதிர்ப்புரட்சிக் கலகக்காரர்களுக்கும் அமெரிக்கா துணை நிற்பதைப் பார்க்கிறோம்.

தமது சொந்த நாட்டு ஜனநாயக அனுபவம் - கொள்கையின் மீதான நம்பிக்கையிலா இதைச் செய்கிறார்கள்? இல்லை! இந்தோனேசியாவின் பாசிச சுகார்த்தோ, பாகிஸ்தானின் ஜியா, வங்கதேசத்தின் எர்ஷாத், இன்னும் அரபு நாடுகளின் கொடுங்கோன்மை மன்னர்கள், ஆஃபிரிக்க, லத்தீன் அமெரிக்க சர்வாதிகாரிகள் அத்தனை பேரையும் முட்டுக் கொடுத்துத் தாங்கி நிற்பதே முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள்தான். சீனாவின் தியன் ஆன்மென் சதுக்கப் படுகொலைகளைப்போல தென்கொரியாவிலும், பர்மாவிலும், சிலியிலும் ஜனநாயகத்துக்காகப் போராடும் மக்கள் பலமுறை இராணுவத்தை ஏவி நசுக்கப்படுகிறார்கள். இனி மேலும் நீடிக்க முடியாது, மாற்று அடிவருடிகள் தயாராக இருக்கிறார்கள் என்கிற நிலையில்தான் பிலிப்பைன்ஸ் போன்று சில நாடுகளில் போலியான ஜனநாயகத்தைக் கூட ஏகாதிபத்தியவாதிகள் ஆதரிக்கிறார்கள்.

பலகட்சி மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு உள்ள முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் மனித உரிமைகளும் லஞ்ச ஊழலற்ற பரிசுத்த ஆட்சி அமைப்பு நிலவுகிறது என்கிற ஒரு பொய்ப்பிரச்சாரம் கிரமமான முறையில் தேர்தல்களும், சட்டப்படியான நாடாளுமன்ற ஆட்சி முறையும் வைத்துக் கொண்டே பாசிச கொடுங்கோன்மை நிலவுவதை பல நாடுகளிலும் காண்கிறோம். மலேசியா, தாய்லாந்து, இந்தியா, இலங்கை இன்னும் ஏராளமான உலக நாடுகளிலும் மனித உரிமைகள் மீறப்படுவதை மறுக்கவே முடியாது. சர்வதேசப் பொதுமன்னிப்புக் கழகம் இந்த நாடுகளின் மனித உரிமை மீறல்களை ஆண்டுக்கு, ஆண்டு பட்டியல் போடுவதையும், கோரமான, குரூரமான முறைகளில் அரசியல் சித்திரவதைகள் நடப்பதையும் மறைக்கவே முடியாது.

மனித உரிமைகள் மற்றும் பரிசுத்த ஆட்சி என்ற விவகாரத்திலும் முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள் இரட்டை தரம், இரட்டை அளவுகோலை வைத்துப் பேசுகின்றன. பாலஸ்தீன, லெபனானிய மக்களுக்கு எதிராக இஸ்ரேலும், கருப்பின மக்களுக்கு எதிராக தென் ஆஃபிரிக்க நிறவெறி அரசும் நாளும் புரியும் அக்கிரமங்கள் எந்த வகையில் மனித உரிமைகளை மதிப்பதாகும்? இருந்த போதும் முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள் இந்த இரு காட்டுமிராண்டி அரசுகளையும் முழுமூச்சில் சகல உதவிகளும் அளித்து தூக்கிப் பிடிக்கின்றன. உண்மையில் ஆஃபிரிக்காவிலும், ஆசியாவிலும் தனது வேட்டை நாய்களாக வைத்து இஸ்ரேலையும், தென் ஆஃபிரிக்காவையும் ஏவிவிட்டு கருப்பின, பாலஸ்தீனியர்களைக் கடித்துக் குதறுகின்றன.

ஜனநாயகத்தின் தொட்டில்கள் எனக் கூறிக் கொள்ளும் முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகளிலே கூட மனித உரிமைகளின் யோக்கியதை என்ன? கு குளக்ஸ் கிளான்'' போன்ற நிறவெறி அமைப்புகளை வைத்து அமெரிக்காவில் கருப்பின, கலப்பின மக்களை வேட்டையாடுகிறார்கள். கடந்த நானூறு ஆண்டுகளாக சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஐரிஷ் மக்களை இராணுவ அதிரடிப் படையை வைத்து இரகசியமான முறையில் சித்திரவதை - படுகொலைகள் செய்கின்றது. இங்கிலாந்து அரசு. இம்மாதிரியான செய்திகளையோ, படங்களையோ ஒலி - ஒளிபரப்பவும் ''சுயாட்சி'' யுள்ள பி.பி.சி.க்கே உரிமை மறுக்கப்பட்டுள்ளது. போபால் விஷ வாயுப்படுகொலை போன்ற பல சோதனைகளை நடததி இராசயன ஆயுதங்களையும், அணுகுண்டுகளையும் ஏராளமாகக் குவித்துவைத்துக் கொண்டுள்ள இந்த வல்லரசுகள், மனித உரிமைகள் பற்றிப் பேசுவது கேலிக்குரியதே!

சொந்த நாட்டைச் சூறையாடி, கொள்ளையிட்டுக் கோடி கோடியாக மேற்கு நாடுகளில் குவித்து வைப்பதற்கே மார்கோஸ், ஷா, குவாலியர், சேமோசா போன்ற பாசிச இராணுவ சர்வாதிகாரகளுக்கு ஊக்கமும் இடமும் அளித்தன முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள், பின்னர் அந்நாடுகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டபோது தஞ்சமளித்து கௌரவித்தன. சீனத் தலைவர்களின் லஞ்ச ஊழல் விவகாரங்களை அலசும் இவர்களே வாட்டர் கேட், ஈரான் - காண்ட்ரா, ரிக்ரூட், லாஹீட் போன்ற பெரும் ஊழல்களின் நாயகர்களாக உள்ளார்கள்.

கியூபா, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ அலாவாக்கியா போன்ற ருஷ்யாவின் தொங்கு சதை நாடுகள் டெங்- லீபெங் கும்பலின் நடவடிக்கைகளை ஆதரித்துள்ளன. ஹங்கேரி எதிர்த்துள்ளது. ஆனால் கோர்ப்பச்சேவ் கும்பல் முறைமுகமாக மேற்கத்திய ஏகாதிபத்திய நிலைப்பாடுகளை ஆதரித்துள்ளது. சுயநிர்ணய உரிமைக்காக் போராடும் தேசிய இனங்கள் மீது இராணுவத்தை ஏவி, விஷவாயுக் குண்டுகளை வீசி சாகடிக்கும் கோர்ப்பசேவ் ''மனித உரிமை'' மீறல்களைக் கண்டிக்கிறார்! விபத்துக்கள் - சாவுகளைக் கூட மறைக்கும் கோர்ப்பசேவ் கருத்துச் சுதந்திரத்துக்காக வாதிடுகிறார்!

வேறுவேறு வடிவிலான முதலாளித்துவ அமைப்பை நிறுவுவதற்காக இரு பிரிவுகளாகப் பிரிந்து மோதிக் கொள்ளும் சீன கம்யூனிச துரோகக் கும்பல்கள் எதையும் சரியென்று கூற முடியாது. ஆனால் இந்த விவகாரம் முழுவதையும் ஏதோ ஜனநாயகம், மற்றும் மனித உரிமைப் பிரச்சினையாகக் காட்டிப் பெரும் கூச்சல் போடுவதன் மூலம் முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள் என்ன செய்கின்றன?

சீன மாணவர் தலைமையிலான கொந்தளிப்பிற்கு எதிராக இராணுவ அதிரடித் தாக்குதல் - படுகொலைகள் நடத்தப்பட்டதைச் சாக்காக வைத்து, கம்யூனிச சித்தாந்தம், கம்யூனிச இயக்கம் முழுவதையும் சாடித் தாக்கி அழிக்கும் முயற்சியில் முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்கள் ஈடுபட்டுள்ளன. ''கம்யூனிசமே இப்படித்தான்! ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரானது'' என்ற கருத்தை உலகம் எங்கும் வேகமாகப் பரப்புகின்றன.

இல்லை; கம்யூனிசத்தைச் சீர்திருத்துகிறோம் என்கிற பெயரில் திரித்துப் புரட்டி முதலாளித்துவத்தை மீட்பவர்கள் தான் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானவர்கள் என்பதையே சீன விவகாரம் நிரூபிக்கிறது.

◇ மாணிக்கவாசகம்




தமிழ் பத்திரிக்கைகளின் பார்வையில் சீனக் கொந்தளிப்பு

படிப்பகம்

www.padippakam.com

ஒரு வாய் உணவுக்கும் வழியில்லை, உயிர்வாழவும் உரிமையில்லை. கொள்ளை நோய் போன்று நாடு மொத்தமும் வேகமாகப் பரவிவரும் வேலையில்லா திண்டாட்டம், பிழைப்புக்கான ஆதாரம் ஏதுமற்ற நிலையில், புற்றீசல் போல் நகர்ப்புறங்களை நோக்கிப் படையெடுக்கும் கிராமப்புறக் கூலி ஏழைகள், நகர்ப்புறங்களிலும் பற்றுக்கோல் ஏதுமின்றி பட்டமரமாக நிற்கின்றனர். ஆயிரம், லட்சம், கோடி இப்படி ஆண்டுதோறும் பெருத்துவரும் பெருந்திரளான இந்த வேலையில்லாப் பட்டாளத்தின் ஒரு பிரிவு பசையிருந்தால் ஒட்டிக் கொள்ளும் ஒட்டுண்ணி கூட்டமாக வேகவேகமாக சீரழிகிறது. திரியை உருவினால் வெடிக்கத் தயாராகும் கையெறி குண்டுகள் போன்ற நிலையில் இருக்கும் இந்த உதிரிப் பட்டாளத்தை, ஆளும் வர்க்கம், கையகப்படுத்தி திரும்பவும் உழைக்கும் மக்களின் மீதே வீசியெறிகிறது.

மதம், இனம், மொழி, ஜாதி என ஆளும் வர்க்கங்கள் தூண்டிவிடும் அனைத்து கலவரங்களிலும் உட்புகுந்து வினையாற்றி விட்டு வெளிவரும் இந்த பொறுக்கிகள் பட்டாளம், அதில் கிடைக்கும் அறுவடையில் கணிசமான பங்கை ருசி பார்த்தவுடன் மேலும் மேலும் வெறி கொண்ட மிருகமாக மாறுகிறது.

உலகம் முழுவதுமுள்ள, ஆளும் வர்க்க எதிர்ப்புரட்சி கும்பல்கள், புரட்சிகர நடவடிக்கைகளின் உக்கிரமான கட்டங்களில், தங்களின் பிரதான ஆயுதமாக இக்கும்பலையே பயன்படுத்துகின்றன. இது வரலாறு சொல்லும் பாடம். ''மீனைப் படிக்க நீரை வடிக்கட்டு'' - எதிர்புரட்சி கும்பல்களின் இந்த பயங்கர ஆயுதம்தான், கம்பூச்சியாவிலும், வியட்நாமிலும், தற்போது புரட்சிகர யுத்தம் நடக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஏவி விடப்படுகிறது. ''மக்களின் மத்தியில் மீனைப் போன்று வாழும் புரட்சியாளர்களைப் பிடிக்க, செயலிழக்க வைக்க கூலி ஏழைகளின் குவிமையமான கிராமப்புறங்களிலிருந்து மக்களை வெளியேற்று! அல்லது ஒட்டு மொத்தமாக நீரையே நச்சுப்படுத்து!''

இந்த இரண்டு தாரக மந்திரங்களை வழிகாட்டும் நெறிமுறைகளாகக் கொண்டுதான் பாசிச ராஜீவ் கும்பல், வேகமாக செயலாற்றி வருகிறது. எதிர்ப்புரட்சிக்கான சமூக அடித்தளத்தை விரிவுபடுத்தி வருகிறது. கிராமப்புறங்களை முற்றாகப் புறக்கணிப்பது என்ற பாசிச ராஜீவ் கும்பலின் புதிய பொருளாதாரக் கொள்கையும், ''மக்களுக்கே அதிகாரம்'' என்ற பஞ்சாயத்து ராஜ்ய புதிய ஆட்சிக் கொள்கையும், எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளின் ஜனரஞ்சகமான முழக்கங்கள் தான்! ஒன்று, வாழ வழியற்ற கிராமப்புறங்களிலிருந்து மக்களை துரத்தியடிக்கும்; இரண்டு அரசாங்க சலுகைகள், சன்மானங்கள் கொடுத்து நச்சுப்படுத்தும்.

பாசிச கும்பல்களால் ஊட்டி வளர்க்கப்படும் இந்த் பொறுக்கிகள் பட்டாளம், புரட்சிக்கு பிந்தைய காலக் கட்டங்களில் கூட, புரட்சியை கீழறுத்துப் போட மூர்க்கமாக முயற்சிக்கும். குறிப்பாக, கம்பூச்சியாவிலும், வியட்நாமிலும், இப்படித்தான் இக்கும்பல், புரட்சிக்குப் பிறகும் உழைப்பில் ஈடுபட மறுத்து, கிராமப்புறங்களுக்கு அனுப்பப்படுவதை உக்கிரமாக எதிர்த்தன. உழைக்கும் மக்களின் அரசாங்கத்தைப் பற்றியான பல்வேறு வதந்திகளைக் கிளப்பிவிட்டு சிறுசிறு கலகங்களைத் தூண்டிவிட்டன.

# நாகரிக சமூகத்துக்கு சவால்: பெருகிவரும் ரௌடி கும்பல்கள்

இப்போது, எங்கும் இதை நீங்கள் பார்க்கலாம். சமுதாயத்தின் நச்சுக்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அழுக்குகள் இப்போது சமுதாயத்தை நாட்டாண்மை செய்கிறது. கேடிகள், கிரிமினல்கள், ரௌடிகள், பெண் பொறுக்கிகளுக்கு தனிப்பட்ட கௌரவம் கொடுக்கப்படுகிறது. மக்கள், அக்கும்பலிடம் பயம் கலந்த மரியாதையுடன் அணுகும்படி நிர்பந்திக்கப் படுகிறார்கள். வாழ்வியலில் தேவையான ஒழுக்க நெறியாக இது நிலை நிறுத்தப்படுகிறது. மீறுபவர்கள், சொந்த மக்களிடமிருந்தே தனிமைப் படுத்தப் படுகிறார்கள். ''நமக்கேன் வம்பு'' என்ற தற்கொலை ஆயுதம் இலவசமாக, ஏராளமாக விநியோகிக்கப் படுவது சகிக்க முடியாத அளவு பெருத்துவிட்டது. கேடிகளை, பொறுக்கிகளை எதிர்ப்பது அல்ல, அவர்களை பயன் படுத்திக் கொள்வது அறிவுடைய செயலாக, திறமையாக போற்றப் படுகிறது.

சென்னையில் ஒரு நண்பர்; ஆசிரியர்! கோயில் வீட்டில் குடியிருப்பதுடன், அதிலேயே சொந்தமாக நர்சரிப் பள்ளி வைத்து நடத்துபவர். குறிப்பிட்ட ஒரு சாதியினர் இப்போது அக்கோயிலை ஆதிக்கம் செய்கின்றனர். அதிகாரிகளின் துணையோடு அக்கோயிலின் சொத்துக்களை தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதில் இவரது வீடும் அடக்கம். பார்த்தார்... இவரைப் போல பாதிக்கப்பட்ட பலருடன் கூட்டுச் சேர்ந்து 'பகுதி மேம்பாட்டு, நல்வாழ்வு மன்றம்' ஒன்று ஆரம்பித்து கோயில் சொத்தை தனியொரு சாதி கைப்பற்றுவதை எதிர்ப்பது; பொதுச் சொத்தை பாதுகாப்பது என்று எதிர் நடவடிக்கையில் இறங்கி விட்டார். தான் ஆசிரியர் தொழில் செய்வதால் அடிதடிக்கு லாயக்கில்லையென்று, அப்பகுதி கேடியையும் அவனது கும்பலையும் அச்சங்கத்தின் செயலராக்கி பின்னால் இருந்து இயக்குகிறார். பழுத்த பெரிய மனிதர்கள் கூட அவருடைய சாதுரியத்தை வியந்து போற்றுகின்றனர்.



கோவையில் கடந்த மாதம் ரௌடிகளிடமிருந்து பணத்தை பாதுகாக்க போராடி படுகொலைக்கு ஆளான பாண்டே அப்பலை மனைவி, வட மாநிலத்திலிருந்து பிழைக்கவந்த கூலி ஏழை குடும்பம்.

ஹாஜி மஸ்தான், வரதராஜ முதலியார், ராமசாமி உடையார் போன்ற ரகசிய உலக கிரிமினல்களுடன் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கலந்திருப்பது, பிரபல சர்வதேச போதை மருந்து கடத்தல்காரன் நசிர் அலியுடன் ராஜீவ் காந்தியும், எதிர்க் கட்சி தலைவர்களும் கூடி குலாவுவது அவர்களது கிரிமினல் நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் அப்படியே மேற்கூறிய சம்பவத்தை பொருத்திவிட முடியாது என்றாலும் அந்த திசை நோக்கி ஒரு பெருந்திரளான மக்கள் கூட்டம் பயணப் படுவதை இதன் மூலம் உணர முடியும்.

சாதாரண வீட்டுவேலித் தகராறை தீர்ப்பதிலிருந்து, வாடகைகாரர்களை குடியிருப்பிலிருந்து காலி செய்வது வரை, வட்டிப் பணத்தை வசூலிப்பதிலிருந்து, தொழில் நேர்மையின்மையை தட்டிக் கேட்பவர்களை மிரட்டுவது வரை, பொது நன்மை கருதி ஒருவனின் ஒழுக்கக்கேட்டை விமர்சிப்பவர் முதல் பொது இடங்களில் ஒழுக்கம் கட்டுப்பாட்டை வலியுறுத்துபவர்கள் வரை ரௌடித் தனத்தால் வாயடைக்கப் படுகிறார்கள்; அல்லது கொச்சையான கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டு ஒதுக்கப்

படிப்பகம்

www.padippakam.com

படுகிறார்கள். இவ்வாறான ரௌடியிசத்தையும், கேலியையும் கிண்டலையும் அரங்கேற்றுவதற்கென்றே பெரும்பாலான பொது இடங்களில் ஒரு கும்பல் ஊர் மேய்ந்து கொண்டிருக்கிறது. இதற்கென்றே அக்கும்பல், அப்பகுதி 'பெரிய' மனிதர்களால் திட்டமிட்டு வளர்க்கப் படுகிறது; பாதுகாக்கப்படுகிறது. போலீசு நிரந்தரமாக இக்கும்பலுக்கு பாதுகாப்பு வழங்குவதுடன், அதற்கு ஈடாக, அக்கும்பல் பொறுக்கும் எச்சிலில் கணிசமான அளவு பங்கையும் பகிரங்கமாக பெற்றுக் கொள்கிறது.


மோசடி, கொலை, கொள்ளை கிரிமினல் குற்றங்களுக்காக மட்டுமல்ல, அன்றாட வாழ்வின் தேவைகளுக்காக, மக்கள், வெளியிடங்களுக்கு சென்று வருவது கூட இப்பொறுக்கி கும்பல்களால் கட்டுப் படுத்தப்படுகிறது.

மூன்றாண்டுகளுக்கு முன் ஒரு சம்பவம். சென்னை - விமான நிலையத்திலிருந்து திரிசூலம் போகும் நேரெதிர் மண் சாலை. இருட்டும் நேரம். நாளெல்லாம் கட்டிட வேலை செய்துவிட்டு தலைச் சுமை விறகோடு தம் குடிசைக்குச் செல்லும் இளம் சகோதரி. தகப்பனை இழந்து, சகோதரனையும், வயதான தாயையும் காப்பாற்றுபவர். திருமணமாகாதவர். இருட்டில் தனியாக நடந்து சென்று கொண்டிருக்கும் போது, அப்பகுதியின் நான்கைந்து பொறுக்கிகள் ஒன்று சேர்ந்து கற்பழித்து குற்றுயிராக வீசியெறிந்து விட்டுச் சென்று விட்டனர். அச்சகோதரி பலங்கொண்ட மட்டும் எதிர்ப்பு தெரிவித்ததால், அடித்தே அரை மயக்கமாக்கி, அக்கிரமம் புரிந்துவிட்டு சென்றனர். ''நான் அப்பன் இல்லாத ஏழைப் பொண்ணு, விட்டுடுங்கன்னு கதறினேன்; அப்பவும் அவர்கள் என்னை விடவில்லை'' என்று அவர் தெரு ஜனங்களிடம் கூறிய பிறகும், காரணமானவர்கள் யார் என்று தெரிந்த பிறகும், யாரும் அப்பொறுக்கிகளை தண்டிக்க முன் வரவில்லை.

அவ்வளவு ஏன்? தினம் ஒன்றாக சந்தையில் குவியும் வாராந்திர, தினசரி, பத்திரிக்கைகளைப் பாருங்கள். பொறுக்கித் தனங்கள் கேட்பாரற்று, பொது இடங்களில் எவ்வாறு எல்லாம் அரங்கேற்றப் படுகிறது என்ற விவரம் புரியும். சென்னை போன்ற பெரிய நகரங்களைவிட இரண்டாம் மட்ட, மூன்றாம் மட்ட, சந்தை நகரங்களில் ரௌடித்தனம், பொறுக்கிகளின் அட்டகாசம் அந்நகரங்களின் மொத்த மக்களையும் பீதியில் ஆழ்த்துகிறது.

நான்காண்டுகளுக்கு முன் இப்படித்தான், 'ஸ்கூல்' பையனைப் போன்ற தோற்றம் கொண்ட 20 வயதுகூட நிரம்பாத ராஜசேகரன் என்ற கேடி, நாகர்கோயிலையே ஒரு கலக்கு கலக்கினான். முன்கூட்டியே தகவல் சொல்லிவிட்டு திருடுவது தான் அவனுடைய 'ஸ்பெஷாலிட்டி' என்று கிசுகிசு பத்திரிக்கைகள் அவனுடைய புராணத்தை வண்ண வண்ண வெடிசரங்களாக்கி அவன் மீது ஒரு பக்தியை ஏற்படுத்தின. டி.எஸ்.பி. குடும்பத் திருமண விருந்தில் கலந்து கொண்டு, பின்னர் அதைப் போலீசுக்குத் தெரிவித்து புயலை ஏற்படுத்தியவன் என்று திட்டமிட்டு மக்களிடம் அவனைப் பற்றி ஒரு மரியாதையை ஏற்படுத்தியது மசாலா பத்திரிக்கைகள். கடைசியில் அப்பலத்திற்கு வந்தது உண்மை. நாகர்கோவிலில் இருக்கும் கிருத்துவ மிஷினரிகளுக்குள் நடந்த அதிகார பங்கீட்டுச் சண்டையில், ஒரு கோஷ்டி, ராஜசேகரன் பீதியை போலீசு உடந்தையுடன் பரப்பியது வெளியில் வந்து நாறியது. ஒரு குறிப்பிட்ட கோஷ்டியைச் சேர்ந்த பாதிரியார்களின் வீடுகளிலேயே கொள்ளை நடந்திருப்பதன் மூலம் இது நிரூபிக்கப்பட்டது.

ஆறு மாதங்களுக்கு முன் சென்னை, கோயம்பேடு பகுதியில், ஓட்டு சீட்டுக் கட்சிகளின் ரௌடிகளால், பட்டப் பகலில் 50 குடிசைகள் தரைமட்டமாக்கப் பட்டது. அக்குடிசை வாசிகள், ஓடஓட, ரத்தம் சொட்டச் சொட்ட ரௌடிக் கும்பலால் வெட்டப்பட்டனா அப்போது. ஜானகி அணியிலும், தற்போது ஜெயலலிதா கட்சியிலும் உள்ள, ஜே.சி.டி பிரபாகரனுக்கு நெருக்கமான,



புதுக்கோட்டை நகர பொதுக் கழிப்பிடம்: பொது இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ள ரௌடிகள் நடத்திய அட்டூழியம் - ரூ.40,000 பாழ்!

செங்கல் சூளை அதிபரான சந்தானம் என்பவன், வேன், கார், லாரி என்று 7 வாகனங்களில் பல நூறு ரௌடிகளைத் திரட்டி வந்து பட்டப்பகலில் இந்த அட்டூழியத்தை நடத்தினான். காரணம்: இதுநாள்வரையில் அவன், சூளைக்கு மண் எடுத்து வந்த பொது இடத்தை, இந்த ஏழைகள், அதிகாரிகளுக்கு மனுப்போட்டு, சட்டப்பூர்வ குடியிருப்பு இடமாக்கிக் கொண்டார்கள் என்ற வெறி!

இப்படி ஓராயிரம் சம்பவங்களின் மூலம், இந்த தெருப் பொறுக்கிகளின் கையில், உழைக்கும் மக்களின் உயிரும், உடமையும் நாள் தோறும் சிக்கிச் சின்னாபின்னப் படுத்தப்படுகிறது. இன்னும், தனிப்பட்ட முறையில், சிறுசிறு கும்பல்களாக இயங்கும் ரௌடிக் கோஷ்டிகள், தனிப்பட்ட முறையில் தங்கள் சமஸ்தானங்களை நிறுவிக் கொண்டு, அப்பகுதி மக்களிடம் அன்றாடம் தண்டம் வசூலிக்கிறது. நடை பாதைக் கடை வைத்தால் மாமூல், குடிநீருக்காக தண்ணீர் தொட்டியை அணுகினால் மாமூல், வேறு இடத்திலிருந்து அப்பகுதிக்கு கும்பலாக வந்து தங்கி, கூலி வேலை செய்தால் அதற்கும் மாமூல்! தமிழ் நாட்டின் தலைநகரமான சென்னையில் அதன் பிரதான வர்த்தக மையமான கொத்தவால் சாவடியிலேயே இக்கொடுமை இன்றளவும் கேட்பாரற்று நடக்கிறது. அங்கு பல பத்து ஆண்டுகளாக மாரி என்பவன் வசூல் வேட்டையை நடத்த அதன் பிறகு அகரம் நாராயணன் என்பவன் அதன் தலைமையை கைப்பற்றினான்.

இதே அளவுக்கு இல்லையானாலும், மாவுக்கு தகுந்த பணியாரம் போன்று, பல்வேறு இரண்டாம் மட்ட பெருநகரங்களின் எல்லா சந்தைகளிலும், மார்க்கெட்டுகளிலும், ரௌடிகளின் அட்டூழியம் நீக்கமற நிறைந்திருக்கிறது. திருச்சி தெப்பக்குளம் அருகிலுள்ள பர்மா பஜார், காந்தி மார்க்கெட் போன்ற இடங்கள் அந்நகர ரௌடிகளின் சொர்க்கபுரிகள்!

இவையில்லாமல், வர்த்தக சூதாடிகள், கலப்பட பேர்வழிகள், கள்ளச் சாராய மன்னர்கள், ஊழல் அதிகாரிகள், பிழைப்புவாத தொழிற் சங்க தலைவர்கள், ஆலை அதிபர்கள், பண்ணைப் பிரபுக்கள், இவர்களின் நேரடி கையாட்களாகவும், அவர்களுக்கு அடியாட்களை சப்ளை செய்யும் குண்டர் படைத் தலைவர்களாகவும் இருந்து கொண்டு பரந்து விரிந்து அளவில் வலைப் பின்னல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன, இந்த ரௌடிகள் கும்பல்.

வெளி மாநிலங்களுக்கு உணவு தானியங்களை கடத்துவதற்கும், அதில் கலப்படம் செய்வதற்கும், காட்டிலாகா அதிகாரிகள் சந்தனக் கட்டைகள் கடத்தவும், இலக்கை அடைய, அதிகாரிகளுக்கு கும்பல் கும்பலாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆட்கள் (அநாதைகள், பிச்சைக்காரர்கள்) பிடித்து போவதற்கும், தனியார் ரத்த வங்கிகளுக்கும், சிறுநீரகம் எடுப்பதற்கும் அப்பாவிகளை கடத்திச் செல்வதும், இக்


படிப்பகம்

www.padippakam.com

கும்பல்களின் அன்றாட உதிரித் தொழிலாக, முறைப்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது.

'84ஆம் ஆண்டு போலீசு ரகசிய பதிவேடுகளின் படி சென்னை நகரில் 10,000 ரௌடிகள் இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது. இந்த சதவிகித கணக்கின்படி பார்த்தால் தமிழகத்தில் மாநிலம் தழுவிய அளவில் ஒரு லட்சத்திற்கும் குறையாத ரௌடிகள் பட்டாளம் இருக்கிறது என்று அர்த்தம்.

சமுதாயத்தின் மீது மலைப்பாம்பாக ஊர்ந்து கொண்டிருக்கும் பெருந் தொகையிலான இந்த பொறுக்கி கும்பலின் அன்றாட பொழுது போக்கு லீலைகளை முழுமையாக பட்டியல் போட்டால், பக்கங்கள் போதாது!

ஜனசந்தடி மிக்க பொது இடங்களை வேட்டைக்கான இரை தேடும் மையங்களாகவும், ஆளரவமற்ற காரிருள் இடங்களை பங்கு பிரிப்பதற்கான களமாகவும், பயன்படுத்தும் இக்கும்பல், கடைசி பேருந்தைதவற விட்டவர்கள், வழி தெரியாமல் மாட்டிக் கொண்டவர்கள், தனியாக வரும் இளம் பெண்கள், கிராமிய தம்பதியர் - இவர்களைக் குறிவைத்துப் பிடிக்கின்றன. கற்பழிப்பது, உடமைகளை பறிப்பது என்று தங்கள் லீலைகளை அரங்கேற்றிவிட்டு, திரும்பவும் புது இரையைத் தேடுகின்றனர்.

இக்கும்பல்களின் ரௌடித்தனத்தை துணிந்து எதிர்க்கும் தனி மனிதர்களையும், ஜனநாயக சக்திகளையம் தீர்த்துக் கட்டவும் இவர்கள் தயங்குவதில்லை. இக்கும்பல்களை எதிர்க்கும் எவர் ஒருவரும் இயல்பாகவே சட்டப்பூர்வ ரௌடிகளான போலீசு கும்பலையும் எதிர்ப்பவராய் இருப்பதால், இரண்டு கும்பலும் ஒன்று சேர்ந்துக் கொண்டு இந்த எதிர்ப்பு சக்திகளை ஒழிப்பதில் முன்னணியில் நிற்கின்றன.

பட்டபகலில் நட்ட நடுவீதியில் ரௌடிகள் அரங்கேற்றும் கீழ்தரமான வசவுகளையும், வம்பு சண்டைகளையும் கண்ணால் காண்பவர்கள் கூட அதை தட்டிக் கேட்க முடிவதில்லை. பொறுக்கிகள் நடுத்தெருவில் இறங்கிவிட்டால் பாதசாரிகள் கூட அஞ்சி நடுங்கிக் கொண்டுதான் போகவேண்டும். முகத்துக்குநேரே ஆபாச 'ஜோக்'குகளை, இரட்டை அர்த்த தமிழ் சினிமா வசனங்களைக் கூறி வசவுமழை பொழிந்தால்கூட எதிர்த்துக் கேட்க முடிவதில்லை. துணிந்து எதிர்த்து விட்டால், மேலும் ஆபாசவசவு மழையால் கூச வைத்துவிடுகிறது பொறுக்கிகள் கூட்டம். அதையும் சமாளித்து, விடாப்பிடியாக எதிர்த்து நின்றால், அடுத்து சரமாரியாக மூஞ்சிலும் முகத்திலும் குத்துவிடும்; கையிலும் பையிலும் இருக்கும் பொருட்கள் காணாமல் போகும். உயிரே போனாலும் பார்த்து விடுவது என்று உறுதியோடு இருந்தால் இருவருக்குமாக இருந்த சண்டையை நொடியில் பகுதிக் கலவரமாக மாற்றிவிடுகிறது ரௌடிகள் கூட்டம். அக்கம் பக்கத்தில் இருக்கும் கடைகளிலிருந்து, சந்துகளிலிருந்து பாட்டில்களும், கற்களும் சரமாரியாக பாய்ந்து, போக்குவரத்தே நிலைகுலைந்து விடும். சடசடவென கடைகள் இழுத்து மூடப்படுவதும், ஆள் நடமாட்டம் முற்றிலுமாகக் குறைவதும் புயல் வேகத்தில் நடக்கும். பீதியும் வதந்தியும் பரவி போலீசு கும்பல் படையெடுக்க, சம்பவமே தலைகீழாக மாற்றப்படும். பாதிக்கப்பட்டவர்தான் வேலைவெட்டி இல்லாமல் வீண் சண்டைக்கு வலிந்து நின்றதாகவும், அவர் ஒதுங்கிப் போயிருந்தால் எதுவுமே நடந்திருக்காது என்றும் பகுதி 'பெரிய' மனிதர்கள் வாக்குமூலம் தருவார்கள். பிறகு கோர்ட்டு, கேஸ் என்று பாதிக்கப்பட்டவர் அலைய வேண்டியதுதான். சயமங்களில், பாதிக்கப்பட்டவரே 'லாக்கப்'பில் அடைக்கப்பட்டு, வெளியில் எடுப்பதற்கு அவரது குடும்பம் போலீசு நிலைய வாசலில் தவம் கிடக்கும்.

ரௌடியா? கொக்கா? கிறுக்கு பிடித்தவன் தான், வீணாக அவர்களிடம் மோதுவான்! என்று ஆளுக்கு ஆள் 'உபதேசம்' செய்யக் கிளம்பிவிடுவார்கள்! கூடவே, ரௌடிகளிடம் மோதாமலேயே அவர்களும் மாட்டிக் கொண்ட கதையை விளாவாரியாக சொல்லிப் புலம்புவார்கள்!



ரௌடிகளின் வெறியாட்டத்திற்கு இரையான குப்பம்; 50 குடிசைகள் சிதைப்பு!

இப்படி, சிந்தனை ரீதியில் மக்களைப் பேடிகளாக்கி, அந்த ஆதாரத்தின் மீது நின்றுதான் ரௌடிகள் கூட்டம் அரசாட்சி புரிகிறது. இந்த ஒரே ஒரு, ஆனால் உறுதியான ஆதாரத்தை ரௌடிகளுக்கு உருவாக்கித் தரும் வேலையைத் தான் போலீசும் ஆளுங் கும்பலும் செய்கிறது. மற்றபடி, ரௌடிகள் தங்களுடைய உடல்வலிவை நம்பி பொறுக்கித்தனத்தில் இறங்குவதில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை.

பொது மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சிந்தித்து செயல்படுவதாகக் கூறும் ஓட்டுக் கட்சித் தலைவர்கள் இதுநாள் வரையில் இந்த ரௌடிகளுக்கு எதிராக என்ன செய்திருக்கிறார்கள்? இந்த ரௌடிகளுடன் சேர்ந்துதானே வலம் வருகிறார்கள்? ஆக, நமது வாழ்வுக்காக ஓட்டுக் கட்சிகளை அதன் தலைவர்களை நம்பிப் பயனேதுமில்லை. இந்த ரௌடிகளுக்கு எதிராக உறுதியுடன் போராடும் புதிய தலைமையை நாம் உருவாக்கி கொள்ள வேண்டும். ரௌடிக் கும்பலுக்கு வலுவான பாதுகாப்பு கொடுக்கும் ஆயுதம் தாங்கிய போலீசு கும்பலுக்கு எதிராக நாமும் ஒரு வலுவான அமைப்பாக, தற்காத்துக் கொள்வதற்கும் தயாராக இருக்கும், ஆயுதம் தாங்கிய அமைப்பாக மாற வேண்டும். அம்மாதிரியான புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள வேண்டும்.

மாறாக, ரௌடிகளின் வீர சாகசங்களையும், அவர்களுடைய தான தருமங்களையும், பஞ்சாயத்தில் தலையிடுவது, சந்துமுனை கோயில் திருவிழாக்களை நடத்துவது போன்ற பொதுச்சேவைகளைக் கண்டு மயங்குவதும், அங்கீகரிப்பதும் அபாயகரமான விளைவுகளையே ஏற்படுத்தும்; ஏற்கனவே ஏற்படுத்தியும் இருக்கிறது. கண்ணெதிரே கண்ட ஒரு உதாரணம்:

சென்னை பாரிசிலிருந்து சைதையை நோக்கி வரும் பல்லவன் பேருந்து; காலை நேரம். அதில் நாமும் ஒரு பயணி. பேருந்து, நந்தனம் கலைக்கல்லூரி அருகில் இருக்கும் நிறுத்தத்தில் நிற்கிறது. ஓரிருவர் இறங்குகின்றனர். வெளியில், கல்லூரிக்கு வந்த மாணவர்கள் பட்டாளம் 'லூட்டி' அடித்துக் கொண்டிருக்கிறது. பேருந்து மெதுவாக கிளம்பி நகர்கிறது. திடீரென இரண்டு மாணவர்கள், ஜன்னலின் உள்ளே கையை நுழைத்து, ஓரமாக அமர்ந்திருந்த இளம் பெண்ணின் மார்பகத்தை தட்டிவிட்டு கெக்கலிக்கின்றனர். கண் இமைக்கும் நேரம். இவ்வளவும் நடந்து முடிந்துவிட்டது. குறைந்தபட்சம் அந்த பெண், அந்த பையனின் மீது காறி துப்பியிருக்கலாம்; செய்யவில்லை. படிக்கட்டிலிருந்த பயணி, அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்திருக்கலாம்; நின்றிருந்தவர்கள் யாரும் அப்படி முயற்சிக்கவில்லை. வெறுமனே, பேருந்தை நிறுத்தியிருந்தால் கூட அந்த கும்பல் கலைந்தோடியிருக்கும். நாம் கைகட்டி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் இந்த அபாயகரமான போக்கு தமிழகம் முழுவதும் பரவ நீண்ட நாட்கள் ஆகாது.

○ குணசேகரன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, ... தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

www.padippakam.com


# இதுதான் இன்றைய இந்தியா



இதோ இது பம்பாய் கஃபி பரேடு அருகில் இருக்கும் சேரிப் பகுதி. இங்கு நிற்பவர் சாதாரண தினக்கூலி அல்ல. தூரத்திலிருக்கும் ஜலந்தர் நகரில் தொழில் செய்யும் எலக்ட்ரானிக் இன்ஜினியர். மாதச் சம்பளம் ரூ.3,000க்கு மேல். இருந்தும் அவரால், சாதாரண குடியிருப்பு வசதிகளுடைய மூன்றாம் தர, நான்காம் தர குடியிருப்புகளில் கூட வசிக்க முடியவில்லை. விண்ணை எட்டும் வாடகை, இவருடைய சம்பளத்துக்கு கட்டுபடியாகாது என்பதால் இச்சேரிப் பகுதியை தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

இங்கும் வாடகை மாதம் ரூ.100, 200 அல்ல. சுளையாக ரூ.20,000 கொடுத்தால் தான் கல்வீட்டில் சிறு அறை கிடைக்கும். அது பகடி தொகையாக போய் விடும். அப்பணம் திரும்பக் கிடைக்கும் என்பதற்கு எந்த விதமான சட்ட பூர்வமான உத்திரவாதமும் கிடையாது. தனியாக வாடகையாக மாதம் ரூபாய் 500க்கு குறையாமல் கொடுக்க வேண்டும். சுகாதார வசதிகளை நினைத்தும் பார்க்க முடியாது. பெரும்பாலான வீடுகளுக்கு மின்சாரம் கூட கிடையாது. திருட்டுத்தனமாக நேரடியாகவே மின்கம்பியில் கொக்கி போட்டு மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் தான் வீட்டுக்கு வெளிச்சம் கிடைக்கும். சம்பந்தப்பட்டவர்களுக்கு இதற்காக தனியாக மாமூல் கொடுக்க வேண்டும். இவரைப் போன்று நடுத்தர வர்க்கத்தின் மேல்மட்ட குடும்பத்தினர் ஓராயிரம் பேர் இப்படி பம்பாய் சேரிகளில் வசிக்கிறார்கள். பள்ளி ஆசிரியர் சஞ்சிவ் சோப்ரா, விமான நிலைய அதிகாரி சுனில் பிரபாகர் - இப்படி மாத வருமானம் 4,000 ரூபாய்க்கு குறைவில்லாமல் சம்பாதிப்பவர்கள் எல்லாம் இங்கு வசிக்கவே வீட்டு வாடகைக் கொடுக்க முடியாமல் விழிபிதுங்குகின்றனர். அன்றாடம் காய்ச்சிகளைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை.





இதோ, இது அதே பம்பாய் மாநகரத்திலிருக்கும் பரந்தவெளி பிரதேசம். இப்போது இது மகாராஷ்டிர முதல் மந்திரி சரத் பவார் கைக்குள் அடக்கம். இவ்வாறு ஒன்றிரெண்டு ஏக்கர் அல்ல, 1.2 மில்லியன் சதுர அடி அரசு நிர்ணயித்துள்ள விலையின் படியே அக்காலியிடங்களின் மதிப்பு ரூ.480கோடி-நகர மேம்பாட்டு திட்டம் என்ற அரசுத்துறையின் மூலம் பிள்ளையார் சுழி போடப்பட்ட ஊழல், அரசின் முன்பதிவு அற்ற வீட்டுமனை விற்பனை என்ற கொள்ளையின் மூலம் பல்கிப் பெருகியது. நாளொன்றுக்கு 2,400 பினாமி விண்ணப்பங்கள் மூலம் தொடர்ச்சியாக பல மாதங்கள் முகம் தெரியாத பல பெயர்களில் சுருட்டப்பட்டது. இக்கொள்ளையை பங்கு பிரிப்பதில் காங்கிரசுக் கட்சிக்குள் நடந்த அடிதடி சண்டை, மந்திரிசபையே கவிழுமளவுக்கு உக்கிரமாக மாறியது. இப்போது, கோர்ட் - விசாரணைக் கமிஷன் என சரத் பவாரின் பரிசுத்தம் சந்தி சிரிக்கிறது. இதே அளவுக்கு சற்றும் குறையாத நில பேர ஊழல் கர்நாடக ஹெக்டே மந்திரிசபையில் நடந்தது; இப்போது வெளியில் வந்து நாறுகிறது. பெங்களூர் நகரின் மையப் பகுதியில் ஏறக்குறைய 22. ஏக்கர் நிலத்தை வெறும் 1.95 கோடி ரூபாய்க்கு சுருட்டியிருக்கிறது ஹெக்டே தலைமையிலான ஜனதா கும்பல்!

தினக் கூலியல்ல, நடுத்தர வருவாய் உள்ள மத்தியதர வர்க்கத்தின் குடும்பம் கூட சேரியில் வாழ வேண்டிய நிலைமை ஒருபுறம் கடலளவு நிலப்பரப்புகளை அதிகார அத்துமீறல்கள் மூலம், பகிரங்க மோசடி மூலம் கையகப்படுத்திக் கொண்டிருக்கும் 'மாண்புமிகு' மக்களின் தலைவர்கள் மறுபுறம். நாம் நடுத்தெருவில் நிற்பதற்குள் இக்கும்பலை நடுத்தெருவில் நாம் அலையவிடுவது எப்போது?

படிப்பகம்